கல்கி

KALKI 27.6.93 ரூ. 3.00



விபத்து கலாசாரத்திலிருந்து விடுபடுவது எப்போது?

சில குழந்தைகள் மற்றவர்களை விடத் துறுதுறுவென இருப்பது ஏன்?

துறுதுறுவென இருப்பதற்குத் தேவையான சக்தியைப் பெறுவதற்கு, உங்கள் குழந்தைக்குச் 'சரியான' கலோரிகள் தேவை. புரோட்டீன்களும், கார்போஹைடிரேட்ஸும், கொழுப்புச் சத்தும் சரியான சமச்சீர் விகிதத்தில் கலந்திருந்தால்தான் இந்தக் கலோரிகள் கிடைக்கும்.

இந்தச் 'சரியான' கலோரிகள் கிடைக்க வேண்டுமானால் அதற்குச் சிறந்த வழி ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த உணவைக் கொடுக்க வேண்டும்.

உங்கள் டாக்டரிடம் கேளுங்கள் சொல்லுவார். உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆன பிறகு பால் மட்டுமே போதாது. ஒவ்வொரு வேளையும், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வாரமும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவை உங்கள் குழந்தைக்குத் தர வேண்டும்.

பெரும்பாலான தாய்மார்களுக்கு இது முடிவதில்லை. வழக்கமான உணவு வகைகள் சரிப்பட்டு வருவதில்லை.

பிறகு என்னதான் வழி ?

ஸெரிலாக். ஏனெனில் புரோட்டீன்கள் செறிந்துள்ள பால், கோதுமை இரண்டுமே இதில் உள்ளன. மேலும், கார்போஹைடிரேட்ஸ், கொழுப்புச் சத்து, மினரல்கள், இரும்புச் சத்து, கால்ஷியம் ஆகியன சரியான அளவில் கலந்த உணவு ஸெரிலாக். வைட்டமின்கள் A, D, E, B-காம்ப்ளெக்ஸ் மற்றும் C இதற்கும் பலம் சேர்க்கின்றன. ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு ஸெரிலாக்.

இன்னுமொரு சிறப்பு, ஸெரிலாக் இப்போது நெஸ்லேயின் புரட்சிகரமான புதிய Z-லேன் என்ஸைமேட்டிக் முறைப்படி தயாரிக்கப்படுகிறது. இதனால் தானியங்கள் எளிதில் ஜீரணமாவதற்காக முன்கூட்டியே பக்குவப்படுத்தப்படுகின்றன. ஸெரிலாக் மிக எளிதில் ஜீரணமாகி விடுகிறது. மிருதுவாகவும், சுவையாகவும் இருக்கிறது.

எனவே, உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் ஸெரிலாக் கொடுங்கள். ஏனென்றால், இதில் 'சரியான' அளவு கலோரிகள் உள்ளன. ஏனென்றால், உங்கள் குழந்தை துறுதுறுவென இருப்பதற்குத் தேவைப்படும் ஊட்டச் சத்துக்கள் சம விகிதத்தில் கலந்த திட உணவு இது.





இலவசம். ஸெரிலாக் பேபி கேர் புத்தகம். [illegible]


உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்

Mudra:NES:0600 TML

முக்கிய அறிவிப்பு: உங்கள் குழந்தைக்கு தாய்ப்பால் மிகவும் சிறந்தது. குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதும் தாய்ப்பாலுடன் கூடவே தானிய உணவு வகைகளைக் கொடுங்கள்.



கருத்து : சிரி. வெங்கடேஷ், ஆர். நரேந்திரன்



● ஞானசேகரன்

நெய்யா? தொன்னையா? பி.ஜே.பி.யா? ஆர்.எஸ்.எஸ்ஸா?

''தமிழக பாரதிய ஜனதாவில் கோஷ்டி பூசல். முன்னாள் துணைத் தலைவர் ராஜினாமா'' என்று தமிழ்த் தினசரிகளில் சிறிய அளவில் செய்தி. கட்சியில் 36 ஆண்டுகள் பணிபுரிந்து மிகக் கனத்த மனத்துடன் ராஜினாமா செய்த முன்னாள் துணைத் தலைவர் சடகோபன், ''கட்சியில் ஜனநாயகம் அழிக்கப்பட்டு, புதிய விளக்கங்கள் அளிக்கப்படுகின்றன'' என்கிறார். ''1991ல் கட்சியில், புதிய ஒருவருக்கு அதிகாரத்தைக் கொடுத்த காரணத்தினால், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊழியரிடையே பிளவு ஏற்பட்டுள்ளது. தமிழக பா.ஜ.க. தனிமனிதனின் கைப்பாவையாக இயங்குகிறது.''

'புதிய நபர்' 'தனி மனிதன்' என்றெல்லாம் சடகோபன் குறிப்பிடுவது எல். கணேசன் என்பவரைத்தான். இவர் ஆர். எஸ்.எஸ். அமைப்பின் மாநில பிரசார செயலாளராக இருந்து பின்னர் பா.ஜ.க.வில் ''அமர்த்தப்பட்டவர்.''

''பா.ஜ.க.வின் கொள்கைகளால் கவரப்பட்டு 1980ல் கட்சியில் சேர்ந்தவன் நான். அப்போது இந்தப் பகுதியில் 18 உறுப்பினர்கள்தான். இரவு பகலாகக் கட்சிக்குப் பாடுபட்டு, 1400 உறுப்பினர்களாக உயர்த்தினேன். நான் அடிப்படையில் 'சங்க'த்தைச் சேர்ந்தவனல்ல. இதனால் என்னைத் திட்டமிட்டுப் புறக்கணிக்கிறார்கள்'' என்று சொல்கிறார் தாம்பரம் ஒன்றியத் தலைவர் எம். ஞானசேகரன். ''என்னையே தீவிர உறுப்பினர் நிலையிலிருந்து நீக்க முயற்சி நடந்தது. ஆனால் எதிர்த்துப் போராடி அதை முறியடித்தேன். சமீபத்திய கட்சித் தேர்தல்களில் பல குளறுபடிகள் நடந்துள்ளன. இவையெல்லாம் கட்சியின் முறையீட்டுக் கமிட்டிக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு நடவடிக்கையையும் காணும்.''

''ஆர்.எஸ்.எஸ். இயக்கத்துடன் தொடர்பில்லாத கட்சிக்காரர்கள் ஓரங்கட்டப்படுவது, எல். கணேசன் மாநில அமைப்புச் செயலாளராக வந்த பின்னர்தான்'' என்கிறார் தமிழக பா.ஜ.க.வின் பொதுக்குழு உறுப்பினரான பிரான்ஸிஸ் ரத்தினசாமி. ''தலைமை என்பது ஏட்டளவில்தான். எல்லாம் கணேசன்தான். அவர் மாவட்ட அளவில் சுற்றுப்பயணம் வந்தால் சங்க ஆட்களைத்தான் சந்திப்பார்'' என்கிறார் அவர்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலத் தலைவர் சந்திரபோஸ் பற்றியும் அதிருப்தி இருக்கிறது.

''கட்சியில் தேசிய அளவிலும் சரி, மாநில அளவிலும் சரி, ஆர்.எஸ்.எஸ். முத்திரையோடு பல தலைவர்கள் இருந்தாலும் சமீப காலம் வரை, ஒரு ஜனநாயக உணர்வு இருந்தது. தலைவர்கள் விவாதித்து முடிவெடுத்தார்கள். ஆனால் ராமஜென்ம பூமி பிரச்னை வெடித்த பிறகு, கட்சி, மத்தியில் ஆளும் நிலைக்கு வந்தால், தங்கள் பிடியிலிருந்து நழுவி விடப் போகிறதோவென்று, பயந்து ஆர்.எஸ்.எஸ். காரர்கள் முக்கிய பொறுப்புக்களில் உட்கார்ந்து அதிகாரம் செய்யத் துவங்கி விட்டார்கள்'' என்கிறார் ஞானசேகரன்.

தோளில் ஜோல்னா பை மாட்டிக் கொண்டு, சங்கடமான கேள்விகளையும் சமாளிக்கும்விதமாகக் கலகலவென்று பேசும் எல். கணேசன், மாநில பா.ஜ.க. அமைப்புச் செயலாளர். சங்கத் தோழர்களால் 'எல்.ஜி.' என்று அன்புடன் அழைக்கப்படுபவர். ''நான் ஒரு ஆர்.எஸ்.எஸ்.'' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்பவர்.

''கட்சியில் சில அதிருப்திக் குரல்கள் இருந்தாலும், பெரிய அளவில் பூசல் என்றெல்லாம் இல்லை. கட்சித் தேர்தலில் தோற்றவர்கள் 'தூசி' கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆர்.எஸ்.எஸ். காரர்களுக்குத்தான் கட்சியில் முதலிடம் என்று சொல்வதெல்லாம் சரியல்ல. மாநில நிர்வாகிகள் பொறுப்பில் இருக்கும் இளங்காந்தி, ராஜேந்திரன், பெரிய கருப்பன் போன்றவர்கள் அடிப்படையில் ஆர்.எஸ்.எஸ். இல்லை. இங்கு சீனியாரிட்டியை விட திறமைக்குத்தான் மதிப்பு அதிகம். நன்றாக உழைக்கும் ஊழியர்கள், கடகடவெனக் கட்சியில் உயர்கிறார்கள்.

''பா.ஜ.க. என்ற கட்சியே ஆர்.எஸ்.எஸ்ஸின் வெளிப்பாடு (offshoot) என்பதைப் புரிந்து கொண்டால் 'தலையீடு' என்ற சொல்லுக்கெல்லாம் அர்த்தம் இருக்காது. ஆர்.எஸ்.எஸ்ஸினால், சிலர் சொல்லுவது போல கட்சியின் வளர்ச்சி குன்றிப் போகாது; மாறாக வேகமாக வளரும். அந்த அளவில் ஆர்.எஸ்.எஸ். தலையீடு என்பது அவசியமானது!'' என்கிறார் எல்.ஜி.

– ப்ரியன்

படம் : கோபிநாத்



சிட்லபாக்கம் ஏரிக்கு ஆபத்து!

ஏரிகளைக் கொன்று மனிதன் வாழ முடியுமா?

"பெய்யும் மழையில், பத்து சத வீதத்தைத்தான் நாம் உபயோகிக்கிறோம். மீதமெல்லாம், வீணாகச் சென்று கடலில் கலக்கிறது. இதற்காகத்தான் அந்தக் காலத்தில் அரசர்கள், ஏரி, குளங்களை ஏகமாக வெட்டினார்கள். மழைக் காலத்தில் அந்த நீர் நிலைகள் நிரம்பினால், வறட்சிக் காலத்தில் உபயோகித்துக் கொள்ள வசதியாக இருக்கும் என்பது மட்டுமல்ல; சுற்று வட்டாரங்களில் நிலத்தடி நீர் மட்டம் உயரும். இதனால் கிணறுகள் வற்றாது... இந்த அடிப்படை அறிவு கூட இந்தக் கால ஆட்சியாளர்களுக்கு இல்லையே... இருந்தால், ஏரிப் பகுதிகளில் குடியிருப்புகள் கட்ட முற்படுவார்களா?" என்று ஆதங்கத்துடன் கேட்டார்கள், தாம்பரத்தை ஒட்டிய சிட்லபாக்கம் அண்ணா நகர் மேற்கு குடியிருப்போர் நலச் சங்கத்தைச் சேர்ந்த விஸ்வனாதனும் சந்திரசேகரும்.

இந்த நகரைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்ல, அந்தப் பகுதியில் இருக்கும் சுமார் 40,000 மக்கள் "சிட்லபாக்கம் ஏரியின் ஒரு பகுதியில் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள்" வர இருப்பதை நினைத்துக் கலங்கிப் போயிருக்கிறார்கள். இதனால் ஏற்படும் பாதகங்களைப் பட்டியலிடுகிறார்கள் :



* சந்திரசேகர்



* விஸ்வநாதன்

"

● தண்ணீர் கஷ்டம் என்னவென்றே அறியாமல் இருக்கும் எங்களுக்கு, ஏரியைத் தூர்த்து விட்டால் நிலத்தடி நீர் மட்டம் இறங்கிப் போய், கிணறுகள் வறண்டு போகும். போன வருடம் ஏரி நிரம்பிய போது, மீன் பிடிப்பதற்காக மதகுகள் வழியாகத் தண்ணீரைத் திறந்து விட்டார்கள். ஏகப்பட்ட நீர் செம்பாக்கம் ஏரிக்குச் சென்று விட்டது! இதனால் நிலத்தடி நீர் மட்டம் குறைய, நாங்கள் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டியதாகப் போய் விட்டது.

● மேலும், எங்கள் பகுதி தாழ்வான பகுதி. ஹவுஸிங் போர்டு குடியிருப்புகள் வந்தால் ஏரிப் பரப்பு சுருங்கி விடும். இதனால் மழைக் காலத்தில் நீர் தேங்க இடமின்றி எங்கள் பகுதிக்குப் பாய்ந்து வந்து, ஏரியாவே வெள்ளக்காடாகி விடும்.

● இப்போது எங்கள் கிணறுகளில் நல்ல தண்ணீர் கிடைக்கிறது. நீர் மட்டம் இறங்கிப் போனால், பல்லாவரம், குரோம்பேட்டை போன்ற பகுதிகளில் உள்ளது போல் உவர்நீர் எங்கள் பகுதியிலும் வந்து விடும்...

”

“மொத்தத்தில் இந்த ஏரியில் ஹவுஸிங் போர்டு குடியிருப்புகள் வந்தால், மற்ற சென்னைவாசிகள் தவிப்பது போல் நீங்களும் தவிக்க நேரிடும் என்று சொல்கிறீர்கள். உங்கள் பகுதியில் கிணறு மட்டும் தானா? அரசாங்கம் பாலாறு தண்ணீர் சப்ளை செய்வதில்லையா...?”

“அந்த சோகக் கதையை ஏன் ஸார் கேட்கறீங்க : 1988ல் இருந்து நாங்கள் போராடிக் கொண்டு வருகிறோம். பஞ்சாயத்திலிருந்து கலெக்டர் அலுவலகம் வரை எங்களை டபாய்த்துக் கொண்டு வருகிறார்கள். அப்படியே ஒரு காலத்தில் எங்களுக்குப் பாலாறு தண்ணீர் வந்தால்...ல்...ல்... குடிக்க மட்டும்தான் பயன்படுத்த முடியும். மற்ற காரியங்களுக்கு?” என்று கவலைப் படுகிறார்கள் இவர்கள்.

அண்ணா நகர் சுற்று வட்டார வாசிகள் கவலைப்படுவதைக் கொஞ்சமும் கண்டு கொள்ளாமல் இருக்கிறது வீ.வ. வாரியம். “ஏரியில் மூன்றில் ஒரு பகுதியைத் தான் நாங்கள் குடியிருப்புகள் கட்ட எடுத்துக் கொள்வதாக இருக்கிறோம். திட்டம் பூர்வாங்க நிலையில் இருக்கிறது. குடியிருப்புகள் வருவதால் ஏரிப்பகுதி குறைந்து தண்ணீர் வறள வாய்ப்பில்லை. அதனால் சுற்று வட்டாரத்தில் நிலத்தடி நீர் மட்டம் குறையுமென்பதும் சரியல்ல.

“மேலும் வீடு கட்டியது போக இருக்கும் ஏரிப் பகுதியை ஆழப்படுத்தி, அந்த மண்ணை எடுத்து, குடியிருப்புகள் கட்ட இருக்கும் பகுதியை மேடாக்கப் போகிறோம். இன்னமும் சொல்லப் போனால், இப்போது தேங்குவதை விட அதிக அளவு தண்ணீர் தேக்கி வைக்க முடியும்” என்று சொல்கிறார்கள் வாரியத்தின் அதிகாரிகள்.

ஆனால் இந்த வாதத்தில் சரக்கு இல்லை என்கிறார் சந்திரசேகர். “இங்கு அரசாங்கப் பதிவுப்படி ஏரியின் பரப்பளவு 150 ஏக்கர். ஆனால் ஆக்ரமிப்புகள் காரணமாக ஏரி 60 ஏக்கராகச் சுருங்கி விட்டது. இந்த நிலையில் மூன்றில் ஒரு பகுதியை எடுப்பதாகக் கூறுகிறார்கள். அதாவது பதிவில் உள்ள 150 ஏக்கரில் 50 ஏக்கர்! ஆனால் ஆக்கிரமிப்புப் போக 60 ஏக்கர்தான் இருக்கிறது. இதில் 50 ஏக்கர் எடுத்துக் கொண்டால் மீதம் உள்ள பத்து ஏக்கர் என்பது வெறும் குளம் போலத்தான் இருக்கும்! காலப்போக்கில் குளமும் ஆக்ரமிக்கப்பட்டு, சிட்லபாக்கத்தில் ஏரி ஒன்று இருந்ததா என்பதே கேள்விக்குறியாகி விடும். மேலும் ஏகப்பட்ட குடியிருப்புகள் வரும் போது ஆழமான குழாய்க் கிணறு போட்டு நீர் எடுக்க வேண்டியிருக்கும். இதன் காரணமாகவும் நீர் மட்டம் குறைய வாய்ப்பிருக்கிறது. இது தவிர, பாதாளச் சாக்கடை இல்லாத இந்த இடத்தில், நிறைய குடியிருப்புகள் கட்டினால் கழிவுகள் மூலமாகச் சுற்றுச் சூழல் மாசுபட வாய்ப்பிருக்கிறது.”

“அப்ப என்னதான் செய்யணும் கறீங்க...?”

“இயற்கையான இந்த ஏரிப் பகுதியை விட்டு விட்டு வேறு இடத்தில், வீ.வ.வா. வீடுகள் கட்டட்டும். சமீபத்தில் அமெரிக்காவில் இருந்து வந்த சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் குழு ஒன்று, ‘செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம், நீர் நிலைகள் நிரம்பிய மாவட்டம். அங்குள்ள ஏரிகளைக் காப்பாற்ற வேண்டியது அரசின் பொறுப்பு’ என்றும், ‘அவை அழிக்கப்பட்டால் சென்னையில் தண்ணீர்ப் பஞ்சம் நிரந்தரமாகி விடும்’ என்றும் கூறியுள்ளது. ஏரிகளை மராமத்து செய்ய, பொதுப் பணித்துறை பணம் ஒதுக்குகிறது. ஆனால் ஒரு மராமத்தும் நடைபெறுவதில்லை. சிட்லபாக்கம் ஏரியில், தண்ணீர் நிரம்பி இருக்கும் போது பல அரிய பறவைகள் வந்து செல்கின்றன. மேலும் சுற்றுவட்டாரத்தில் பல கல்லூரிகள் இருப்பதால், நீர் விளையாட்டுக்களையும் (water sports) நடத்தலாம். எல்லா அம்சங்களையும் விளக்கி முதல்வருக்குக் கடிதம் எழுதியுள்ளோம். விஷயம் ஏரியில் போட்ட கல்லாக இருக்கிறது” என்று அங்கலாய்த்தார் விஸ்வநாதன்.

– ஸ்ரீநிவாசன்

படங்கள் : கோபிநாத்

அடுத்த இதழில்...



●● “நாத்திகவாதம் கடவுள் பயத்தைப் போக்கி விட்டது!”

- இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் நடேசன் பால்ராஜ் சிறப்புப் பேட்டி

●● கல்லூரி திறந்தாச்சு!

- வயிறு குலுங்கச் செய்யும் பக்கங்கள்!

விபத்து வியாபாரத்திலிருந்து விடுபடுவது எப்போது?



ஆர். கே. லட்சுமணின் புகழ்பெற்ற கார்ட்டூன்களில் ஒன்று, ரயில் விபத்து பற்றியது.

அரை உயிரும் குறை உயிருமாயிருக்கும் ஒரு பிரயாணியை ஸ்ட்ரெச்சரில் தூக்கிக் கொண்டு போய்க் கொண்டிருப்பார்கள். அவர் கூடவே வரும் ரயில்வே அதிகாரி ஒருவர், அந்தப் பிரயாணியிடம், ''நீங்கள் ஒன்றும் கவலைப்படாதீர்கள்... நாங்கள் நிச்சயம் இந்த விபத்துக்குக் காரணம் என்ன என்று கண்டுபிடித்தே தீருவோம்... ஷ்யூர்...'' என்பார்.


அஜாக்கிரதை காரணமாக விபத்துகள் நடக்க அனுமதித்து விட்டு, பின்னர் அது பற்றிய போஸ்ட் மார்டமில் ஈடுபடுவதை இதைவிட நாசூக்காய்க் கிண்டலடிக்க முடியாது!

இத்தனைக்கும் ''ரயில்வேயின் மொத்த இயக்கமே பாதுகாப்புக் கருதி இயங்கும் செயல்பாட்டு முறையில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதையும் மீறி விபத்து நடக்கையில்தான் மனிதத் தவறு எப்படி, எங்கே நிகழ்ந்தது என்று ஆராயத் தொடங்குகிறார்கள்!'' என்கிறார் முன்னாள் ரயில்வே அதிகாரி ஒருவர்.

இந்த மனிதத் தவறுகள் எங்கே வேண்டுமானாலும் நிகழலாம்; இருப்புப் பாதையில், சிக்னலில், ரயில் தொடரில், பாதைப் பராமரிப்பில் - இவற்றில் எதில் நிகழ்ந்தாலும் விளைவு, சோகம்தான்!

சமீபத்தில் சாமல்பட்டியில் நிகழ்ந்த






விபத்து என்னவோ விநோதமானது. ''இதைத்தான் மெகானிகல் ஃபெய்லியர் என்பார்கள். சிமெண்ட் ஏற்றிச் சென்ற வண்டித் தொடரில், ஒரு வாகனின் அச்சு (ஆக்ஸில்) முறிந்து போனது, கடைசியில் உள்ள கார்டுக்கும் தெரிய வாய்ப்பில்லை; முன்னாலுள்ள இஞ்சின் டிரைவருக்கும் தெரிய வழியில்லை. இதுவே பயணிகள் வண்டியாக இருந்திருந்தால் வண்டியின் ஓட்டத்திலிருந்தே கார்டோ, பயணிகளோ உணர்ந்திருப்பார்கள். வாகனின் வயது காரணமாக, அதிக உபயோகத்தில் இருந்த அச்சு முறிந்து போய் இருக்கிறது'' என்கிறார் இந்த முன்னாள் அதிகாரி.

''வண்டித் தொடரின் ஓட்டத்துக்கு முன்னால் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பரிசோதிப்பது கிடையாதா?''

''உண்டு. சக்கரம், அச்சு, வாகனின் எடை எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதுண்டு. அப்படியும் விபத்து நேர்ந்து விட்டது. சாமல்பட்டி ஸ்டேஷனை அடையும் முன் உள்ள லெவல் கிராசிங்கி லிருந்த கேட்மேன், குறிப்பிட்ட சக்கரத்தி லிருந்து தீப்பொறிகள் பறந்ததைப் பார்த்து, உடனே ஸ்விச்மேனுக்குத் தகவல் சொல்லியிருக்கிறார். ஆனால் அதற்குள் மெயின் லைனிலிருந்து, லூப் லைனுக்கு மாறிக் கொண்டிருந்த சரக்கு வண்டி வாகன்கள் தடம் புரண்டு, அடுத்திருக்கும் மெயின் லைனிலும் சிதறியிருக்கின்றன. இரண்டே நிமிடங்களில் குர்லா எக்ஸ்பிரஸ் நுழைந்து, மோதி விபத்தின் பரிமாணத்தை அதிகப் படுத்தி விட்டது.''

ரயில்வேக்கள் மேற்கொள்ளும் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேலும் விவரித்தார் : ''ஏற்கெனவே மெயின் லைனில் ஒரு ரயில் வண்டித் தொடர் நிற்கும் போது, இன்னும் ஒரு ரயிலை உள்ளே அனுமதிக்க மாட்டார் ஸ்டேஷன் மாஸ்டர். '' ஸ்டேஷனில் இரண்டு Fouling Mark இருக்கும். ஒன்று காபின் அருகே இருக்கும். இன்னொன்று இன்னொரு முனையில். இதற்கு இடையேதான் ஸ்டேஷனில் ரயில் வண்டித் தொடர் நிற்கும். ஒரு ரயில் தொடரின் கடைசி வண்டி (LV) Fouling Mark ஐக் கடந்த பிறகே அடுத்து வரும் வண்டியை ரிசீவ் செய்யலாம்.

சிறிய ஸ்டேஷன்களில் லூப் லைன்



ரயில் விபத்தைச் சோதனையிடும் விமானத் துறை அதிகாரி!

விபத்து நடந்த பிறகு ஸ்தலத்துக்கு விரையும் பாதுகாப்பு கமிஷனர், ரயில்வே இலாகாவைச் சேர்ந்தவர் அல்ல. இவர் சிவில் விமானத் துறை அதிகாரியாம். இவர் ரயில்வே இலாகாவிலிருந்து செல்பவர்தான்; ஆனால் ரயில்வே இலாகாவின் கீழ் செயல்படுபவர் அல்ல. அப்படி இருந்தால் அவரால் பாரபட்சமின்றி பயமின்றிச் செயல்பட முடியாது அல்லவா? பாதை சீரமைக்கப்பட்டபின், மறுபடி அதன் மீது வண்டித் தொடர் செல்லலாம் என்று அவர் சான்றிதழ் கொடுத்த பிறகே ரயில் அந்தப் பாதையில் செல்ல முடியும்.

ஒன்று இருக்கும். அதில் ஒரு ரயிலை வாங்கி நிறுத்தி வைத்துக் கொண்டு, விரைவாகக் கடக்க வேண்டிய ரயிலை மெயின் லைனில் அனுமதிப்பார் ஸ்டேஷன் மாஸ்டர்.

''தவிர, ரயில்வே கண்ட்ரோல் ரூம் 24 மணி நேரமும் செயல்படுகிறது. ஒரு ஸ்டேஷனை விட்டுப் புறப்படும் வண்டித் தொடர், அடுத்த ஸ்டேஷனை அடைந்ததும் எதிரே உள்ள சார்ட்டில் குறிக்கப்படுகிறது. ஒரு ஸ்டேஷனிலிருந்து இன்னொரு ஸ்டேஷன் போய்ச் சேர சாதாரணமாக 40 நிமிடங்கள் தேவைப்படும் என்றால், ஒரு மணி ஆகியும் அடுத்த ஸ்டேஷனை அது அடையாத போது, கண்ட்ரோல் ரூம் எச்சரிக்கையாகி விடுகிறது. வழியில் ஏதோ சிக்கல் என்று உணர்ந்து கொண்டு விடுகிறது. சிக்கல், விபத்துத்தான் என்று உறுதியானதும் மருத்துவ உதவி, கிரேன்கள், மாற்று வண்டி என்று உடனடியாகச் செயல்பட முடுக்கி விடுகிறது.''

''பாதைகளில் என்ன பாதுகாப்புச் செய்ய முடியும்?''

''பல்லாயிரக்கணக்கான மைல்கள் நீளமுள்ள இருப்புப் பாதையைப் பராமரிப்பது மிக முக்கியமான பணியாகக் கருதப்படுகிறது. இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், தள்ளுகிற டிராலியிலும், மோட்டார் பொருத்தப்பட்ட டிராலியிலும் போய் இருப்புப் பாதை சரியாக இருக்கிறதா என்று பரிசோதிப்பார்கள். ஒவ்வொரு குறிப்பிட்ட தூரத்துக்கு ஒவ்வொரு பகுதியினர் பொறுப்பு.''

பராமரிப்புத் துறையில் அநுபவம் வாய்ந்த முன்னாள் அதிகாரி ஒருவர் சொன்னார் :

''இரண்டு தண்டவாளங்களுக்கும் இடையே உள்ள இடைவெளி ஒரே சீரான அளவில் இருக்க வேண்டும். இரண்டு தண்டவாளங்களும் ஒரே உயரத்தில் இல்லை என்றால் அதை க்ராஸ் லெவல் டிஃபரன்ஸ் என்பார்கள். வண்டி டீரெய்ல் ஆக இதுவும் காரணம். கோடையில் கூடுதலான உஷ்ணம் காரணமாக, இருப்புப் பாதை விரிந்து நகரக் கூடும். இதை எல்லாம் கணக்கிட்டுத்தான் பொருத்துவார்கள். பாதை கெட்டிப்படுத்தப்பட வேண்டியிருக்கும். கற்கள் நிறைய விரவி, டைட்டாக இருக்க வேண்டும். கற்கள் குறைவாக இருந்து, அதிக இடைவெளியோடு இருந்தால், வேகத்தைத் தாங்காது. மேலும், ஒரு பக்கம் உயர்ந்தும், ஒரு பக்கம் தாழ்ந்தும் போய், விபத்து நிகழும் வாய்ப்பு உருவாகும். ஸ்டோன் பல்லாஸ்ட் எனப்படும் சிறு சிறு கிரானைட் கற்களைப் பாதையில் விரவிக் கெட்டிப்படுத்துகிறார்கள். வளைவுகளில் தண்டவாளம் ஒழுங்காக இருக்கவில்லை என்றாலும் விபத்து நிகழும். இதை எல்லாம் 'வே' இன்ஸ்பெக்டர் சோதனையின் போது பார்க்க வேண்டும்.''

நிர்வாக அனுபவம் மிகுந்த, ஓய்வு பெற்ற ரயில்வே அதிகாரி ஒருவர், பராமரிப்புத் துறையில் தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் முறையைக் கடுமையாகச் சாடினார் :

''இப்போதைய ரயில்வே அமைச்சர், தனியார் வசம் இந்தப் பாதைப் பராமரிப்புப் பணியை ஒப்படைக்கப் போவதாக அறிவித்திருக்கிறார். இது மிகவும் ஆபத்தானது. தனியார் இதை மேற்கொள்ளும் போது, காண்ட்ராக்டர் அதிக லாபம் கருதி, தரக்குறைவான பொருட்களைக் கொண்டு இருப்புப் பாதையைப் பராமரிக்கக் கூடும். இதனால் விபத்துக்கள் அதிகமாகும். தவிர, லஞ்சமும் நுழையும். ரயில் போக்குவரத்துக்குப் பிரச்னை இல்லாத வகையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ரயில்வே இலாகாவே இதைச் செய்து விட முடியும். ஆனால் தனியார் காண்ட்ராக்டரோ, அவருக்கு ஆட்கள் கிடைக்கும் சமயத்துக்குத்தான் செய்து கொடுப்பார். கேட்டரிங் மாதிரியான துறைகளில் தனியாருக்கு விட்டுக் கொடுக்கட்டும். பாதுகாப்பு முக்கியமானதாக இருக்கும் இது போன்ற பணிகளைத் தனியார் வசம் கொடுத்து விட்டால், விபத்துக்கள் அதிகரிப்பது மட்டுமல்ல, அவற்றுக்கு யாரைப் பொறுப்பாக்குவது என்ற பிரச்னையும் எழும்...''

விபத்துக்களுக்கு இன்னொரு காரணமாக, சாதியை முன்னிறுத்திக் கொடுக்கப்படும் ப்ரமோஷன்களைக் குறிப்பிட்டார் மூத்த அதிகாரி ஒருவர். ''இவை பாதுகாப்பு விஷயங்களில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. வேலை வாய்ப்பில் குறிப்பிட்ட சதவீதப்படி நியமனம் கொடுத்து விட்டு, ப்ரமோஷன் விஷயத்தில் திறமையின் அடிப்படையில் மட்டுமே பதவி உயர்வு கொடுத்தால் நல்லது. இத்தனைக்கும் இன்டர்மீடியட் கிரேடு பதவி உயர்வு கொடுக்கையில், பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பணிகளுக்கு, ரிசர்வ்ட் கோட்டாவிலிருந்து கொடுக்க வேண்டாம் என்று விதியே இருக்கிறது. ஆனால் இதை யாரும் சீரியஸாக எடுத்துக் கொள்வதில்லை!'' என்கிறார் இந்த அதிகாரி.

''குறிப்பிட்ட வேகத்துக்கு மேல் போகக் கூடாது என்று இருக்கையில், கூடுதலான வேகத்தில் போய் விபத்து நிகழ்வதுண்டு. இதைக் கண்டுபிடிக்க வழி இருக்கிறதா?''

''இருக்கிறது. விமானத்தில் பிளாக் பாக்ஸ் எப்படியோ, அது மாதிரி, ஸ்பீடு சார்ட் பதிவைப் பார்த்துக் கண்டுபிடித்து விடலாம். மதுபானம் அருந்தியிருக்கிறாரா என்று விமான பைலட்டுகளைப் பரிசோதிப்பது போல, டிரைவர்களையும் பரிசோதிப்பது உண்டு.''

இருப்புப் பாதையில் பெட்டிகள் தடம் புரளும் பட்சத்தில், பின்னால் வருகிற ரயில் தொடரை எச்சரிக்கிற மாதிரி, கார்டும் டிரைவரும் பின்னோக்கிச் சென்று, டிடோனேடர்களைத் தண்டவாளத்தில் பொருத்தி விடுவார்களாம். அதே பாதையில் வரும் அடுத்த ரயிலின் சக்கரங்கள் அதன் மீது உராய்ந்ததும் அவை வெடிக்கும். இதைக் கேட்டு டிரைவர் பிரேக் போட்டு ரயிலை நிறுத்தி விடுவார். சாமல்பட்டியில் இப்படிச் செய்ய அவகாசம் போதாமல் போய் விட்டது.

ஆனால் குட்ஸ் வாகனின் அச்சு முறிந்ததற்கு யார் பொறுப்பு...? சரக்கு கூடுதலாக ஏற்றப்பட்டதா; அல்லது அச்சு முறியக் கூடிய மிகப் பழைய வாகன் எனத் தெரிந்தும் அது பயன்படுத்தப்பட்டதா...?

''பாதுகாப்பு முகாம், பாதுகாப்பு செமினார் என்று அவ்வப்போது சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு நடத்துவது உண்டு. விபத்தைத் தவிர்ப்பதற்கு வழி வகைகளை இவற்றில் விவாதிப்பது உண்டு!'' என்கிறார் ஓர் அதிகாரி.


ஆனால் எதுவுமே நம்மை விபத்து கலாசாரத்திலிருந்து விடுவிக்கக் காணோமே!

– சாருகேசி

அட்டை ஓவியம் : ஸ்யாம்

படங்கள் உதவி : தினமலர்

பாலம்



●● டெய்லரிங் டிப்ளமா பெற விரும்புகிறேன். எங்கே பயில்வது என்பதற்கும் புத்தகங்கள் இருப்பின் எனக்கு விற்க முடியுமா என்பதற்கும் தகவல் தெரிவிக்கக் கோருகிறேன்.

– ஏ. பாபு,
மேற்கு தெரு,
கீழப்பழுவூர் அஞ்சல்,
திருச்சி – 621 707

●● எனக்குக் காளான் வளர்ப்பு பற்றி தெரியும். குறிப்பு, ஆலோசனை வழங்கத் தயார். சன்மானம் எதிர்பார்க்கிறேன்.

– டி. குமரேசன்,
2/4 முருங்கைமரத் தெரு,
அவலூர்பேட்டை – 604 201
செஞ்சி வட்டம்.

●● கர்நாடக சங்கீதத்தைப் புரிந்து கொள்ள ஆவல். அதன் சரித்திரம், வளர்ச்சி, ராக தாள வகைகள், அவற்றின் பின்னணி, கீர்த்தனைகள் அவற்றின் அமைப்பு, வாக்கேயக் காரர்கள் முதலியவை பற்றி விவரமாகக் கூறும் புத்தகம் ஏதுமிருந்தால் தெரிவிக்கக் கோருகிறேன்.

– ஆர். ஜெயபால்,
77A, கொச அண்ணாமலை தெரு,
குடியாத்தம், வ.ஆ.அ. மாவ – 632 602.

●● நித்திய ஆராதனை செய்ய 108 சாளிக்கிராமம் சேர்க்க வேண்டும் என விருப்பம். சாளிக்கிராமம் உடையவர்கள் விலைக்கோ இலவசமாகவோ கொடுத்து உதவுமாறு வேண்டுகிறேன்.

– எஸ். ரங்காச்சாரி,
தெ. 1, 52வது தெரு,
7வது அவின்யூ,
அசோக் நகர், சென்னை – 600 083.

●● பயனுள்ள மெக்கானிகல் இன்ஜினீரிங் GATE NOTES - 92 விற்பனைக்கு உள்ளது.

– B. சீனிவாசன்,
8, சீதா நகர், 2வது தெரு,
சென்னை – 600 034.

●● நான் ஒரு குற்றமும் செய்யாதவன். ஆயினும் தற்போது நான் தடுப்புக் காவல் சட்டத்தின்படி கோவை மத்திய சிறையில் இருக்கிறேன். குண்டர் தடுப்புக் காவல் சட்டம் ஏன் போடப்பட்டது என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். 1982ல் அமுலுக்கு வந்த இச் சட்டம் பற்றிய தமிழ் நூல் ஏதும் இருந்தால் எனக்கு அனுப்பி வைத்து உதவ வேண்டுகிறேன். விலைக்கு வாங்கிக் கொள்கிறேன் அல்லது படித்து விட்டுத் திருப்பித் தருகிறேன்.

– சாம்பர் (எ) நடராஜன்,
தடுப்புக் காவல் கைதி எண் 949,
மத்திய சிறை, கோவை – 641 018.

●● எங்கள் பள்ளிக் குழந்தைகள் பயணத்திற்காக நல்ல நிலையில் உள்ள மஹேந்திரா வேன் (Mini Bus - 3380 MMWB) விலைக்குத் தேவை. வேன் விற்பனைக்கு வைத்துள்ளவர் தொடர்பு கொள்க.

– நிர்வாகி,
இந்து மெட்ரிகுலேஷன் ஸ்கூல்,
செங்குந்தபுரம் அஞ்சல்,
கரூர் – 639 002.

●● நான் Recycling of Paper செயல் முறையைச் சிறுதொழிலாக நடத்த விரும்புகிறேன். தொழில்நுட்பப் பயிற்சியும் புத்தகங்களும் கொடுத்து உதவினால், அல்லது எங்கு பெறலாம் என்று தெரியப் படுத்தினால் நன்றி யுடையவளாவேன்.

– ஆர். சௌம்யா,
21, முத்துவேல் நாயக்கர் நகர்,
விழுப்புரம்.

●● மீன் வளர்ப்பு பற்றிய அனைத்து விவரங்களும் அறிய விருப்பம். ஆலோசனை, வளர்ப்பு முறைகள் குறித்துத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

– என். ராஜா,
1, போஸ்டல் காலனி இரண்டாவது தெரு,
மேற்கு மாம்பலம், சென்னை – 600 033.

(பாலம் பகுதி மூலம் இணையும் வாசகர்களின் வெற்றி தோல்விகளுக்குக் கல்கி நிறுவனம் பொறுப்பேற்க இயலாது. – ஆர்.)

ஏன் கடவுளுக்கு நைவேத்தியம் காட்டி சாப்பிட வேண்டும்?



- ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்து சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது. அவைகளை கடவுளுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்த தோஷம் நிவாரனையாகும்.
- யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷ மடைந்து இஷ்ட்டமான போகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் நீங்கள் சாப்பிடுவதற்குமுன் அன்னமும் பதார்த்தங்களும் கடவுளுக்கு காட்டி ஆராதனை செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்.
- இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையைப் பெய்விக்கப் பகவானால் நியகிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அவர்களால் விளைவித்துக் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வதனால் அவர்களை சந்தோஷித்து மறுபடியும் பிரதி வருஷங்களிலும் மழையை விருத்து செய்து கொண்டே வருவார்கள். அதனால் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள்.

ஆதாரம்: ஜீவப்ரஹமைத்ய வேதாந்த ரஹஸ்யம்

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.


திருமண வைபவங்களுக்கு சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால் அப்பம் முதலியவை வழங்கப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2-வது மெயின் ரோடு காந்தி நகர், அடையாறு

சென்னை-20 போன் : 412557

Ad-Ventures


பானை இங்கே, தண்ணீர் எங்கேன்னு கோஷம் போட்டாங்களாமே? ஹர்ஷத் மேத்தா இங்கே, அவர் கொடுத்த பணம் எங்கேன்னு நான் கேட்க எவ்வளவு நேரமாகும்?
ரவுடி, கோவில் அறங்காவலரா வரக்கூடாதுன்னுதானே ஹைகோர்ட் சொல்லியிருக்கு?... எம்.எல்.ஏவா வரமுடியாதுன்னு சொல்லலியே...
ஐயோ, ஆத்தா...
டுமீல்... டுமீல்...
வியாபாரிகள்
தொட்டியம் தொகுதி எம்.எல்.ஏ.
என்னய்யா, பிரதமரே வாங்கிட்டாராம்ல?...
அர்ஜுன்சிங் ரொம்ப ஒழுங்கா? பவார் மட்டும் என்ன வாழுதாம்?
புரட்சித்தலைவி பேர்லயும்தான் ஏகச்சக்கமா சொல்றாங்க...
வேற கட்சிங்க ஆட்சிக்கு வந்தா மட்டும், யோக்கியமா நடந்துக்கப் போறாங்களாக்கும்?...
இந்தக் கண்றாவிக்கு பேசாமே ஹர்ஷத்மேத்தாவே பிரதமரா வந்துடலாம்...



ஓம்
கல்கி



1993
ஜூன் 27
மலர் : 51
இதழ் : 48
ஸ்ரீமுக
ஆனி 13

தமிழ்த்திரு
நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி
பாப்பா. - பாரதியார்.

பிரதமர் ராஜினாமா : காலத்தின் கட்டாயம்!

தன்னிடமிருந்து ஒரு கோடி ரூபாய் பிரதமர் பெற்றுக் கொண்டதாக ஹர்ஷத் மேத்தாவின் நேரடி தாக்குதலுக்குப் பிறகும் பிரதமர், 'ராஜினாமா செய்ய மாட்டேன்' என்று பிடிவாதம் பிடிப்பதுடன், 'குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யானது; ஒரு பெரிய சதித் திட்டம்' என்றும் வர்ணித்து நழுவப் பார்ப்பதில் அர்த்தம் இல்லை. இவ்வாறு பேசி இன்னும் சில நாட்கள் அல்லது வாரங்கள் ஓட்டலாம். பதவியில் ஒட்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் சீக்கிரமே ராஜினாமா செய்ய வேண்டிய நிர்பந்தம் பிரதமருக்கு ஏற்படும்.

ஹர்ஷத் மேத்தா ஒரு முதல்தர மோசடி மன்னன் என்பது உண்மைதான். ஆனால் இன்றையச் சூழலில் எந்த ஒரு அரசியல்வாதியையும் சத்தியசந்தன் என்று நம்ப மக்கள் தயாராக இல்லை என்பதும் பேருண்மை. அதிலும் பிரதமருக்கு எந்த நோக்கில், எதற்காக, எப்போது, எந்தவிதமாகப் பணம் கொடுத்தார் என்பதை ஹர்ஷத் படிப்படியாக விவரித்து, ஒவ்வொரு சாட்சியையும் விண்டு வைப்பதை நோக்க, நரசிம்மராவ் வாங்கவில்லை என்று குழந்தை கூட நம்பாது! இதற்கு மேலும் அனுசரணையாக நரசிம்மராவ் மீது ஏற்கெனவே நில உச்ச வரம்புச் சட்டம் தொடர்பாகவும் செயிண்ட் கிட்ஸ் விவகாரம் சம்பந்தமாகவும் வழக்குகளும், குற்றச்சாட்டுக்களும் உள்ளன. நந்தியால் இடைத்தேர்தலில் பிரதமர் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்பதற்காகப் பணம் தண்ணீராக வாரி இறைக்கப்பட்டதும் அனைவருக்கும் தெரியும். அப்போதே பத்திரிகைகளில் இந்த அம்சம் அழுத்தமாகவே அடிபட்டது. இப்போது ஹர்ஷத் மேத்தா அந்தத் தேர்தலை உத்தேசித்தே பெட்டி பெட்டியாகப் பணம் தந்ததாகக் கூறியுள்ளார்.

ஹர்ஷத் மேத்தா 16ம் தேதியன்று பேசப் போகிறார் என்று தெரியவந்ததுமே, அவர் என்ன பேசப் போகிறார் என்பது பரவலாக ஊகிக்கப்பட்டு நாளிதழ்களில் எழுதப்பட்டும் விட்டது என்பதைக் கவனிக்க வேண்டும். ஆக, ரகசியமேயில்லாத ஒரு விஷயத்தை 'நடக்கவே இல்லை' என்று சாதித்து, பூசி மெழுகப் பார்க்கிறார் பிரதமர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. இன்று அமுக்கி விட்டாலும் நாளை மறுபடி வெடிக்கும். இன்னும் சில தினங்களில் புதிய புதிய சாட்சியங்கள் திடீர் திடீரென முளைத்து பூதாகார வடிவமெடுக்கும். குழந்தையைக் கிள்ளி விட்டு, தொட்டிலையும் ஆட்டும்விதமாக நடந்து கொண்டு வரும் அர்ஜுன்சிங் சும்மா இருக்க மாட்டார். பிரதமர் நாற்காலி மீது கண் வைத்துள்ள வேறு சிலரும் கைவரிசையைக் காட்டுவார்கள். கட்சியை மட்டுமல்ல, ஆட்சியையும் தம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை என்பதை ராவ் விரைவில் காண்பார். அவருக்குக் கீழ் பணியாற்றும் அதிகாரிகளுக்கு அவரிடம் மரியாதை போய் விடும். பாகிஸ்தான் உள்பட அயல் நாட்டுத் தலைவர்கள் அனைவரும் ஒப்புக்குப் பேசுவார்களே தவிர, மதிக்க மாட்டார்கள்.

உள்நாட்டு, அயல்நாட்டுப் பிரச்னைகள் நமக்கு ஏராளமாக உள்ளன. நரசிம்மராவ் ஏற்கெனவே 'முடிவுகள் எடுக்கத் தயங்குகிறவர்' என்று பெயர் பெற்றவர். இனி அவர் மேலும் குழம்பித் தடுமாற, உறுதியுடனும் சுறுசுறுப்புடனும் எதையுமே செய்ய முடியாது போகும்.

நாட்டுநலனை உத்தேசித்தும், கொஞ்சநஞ்சம் பாக்கியுள்ள தமது சொந்த மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளவும் ராவ், உடனடியாக ராஜினாமா செய்வதே நல்லது. நாடாளுமன்ற காங்கிரஸ் கட்சி புதிய தலைவரைத் தேர்ந்தெடுக்க அவர் உதவலாம். காங்கிரஸில் ஒற்றுமை நிலவினால், புதிய தலைமையின் கீழ் இப்போதுள்ள பொருளாதாரக் கொள்கைகளையும் மதச்சார்பின்மையையும் இதர திட்டங்களையும் தடையின்றித் தொடர்ந்து அமுல்படுத்தலாம். ஒவ்வொரு நாள் தாமதமும் இதனை மேலும் சிக்கலாக்கி ,தேர்தலுக்கே வழிவகுக்கும்.

இதைவிடப் பலவீனமான குற்றச்சாட்டுக்களுக்கு ஜப்பான் பிரதமர் போன்றவர்கள் ராஜினாமா செய்த சரித்திரச் சம்பவங்கள் நிறைய உண்டு. நாட்டின் பிரதமர் சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும் என்பதே முக்கியம். அந்த நல்ல மரபை நரசிம்மராவும் கடைப்பிடிக்கட்டும். இல்லாவிட்டால் தமக்கு மட்டுமின்றி தாம் தலைமைதாங்கும் காங்கிரஸ் கட்சிக்கும் அவர் குழிபறித்தவராவார்.



அமரர் கல்கி அவர்கள் பெயரில் நிறுவப்பட்டுள்ள அறக்கட்டளை ஆண்டுதோறும் ஏழை மாணவர்களுக்கு உதவி வருகிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்தக் கல்வி ஆண்டுக்கு (93-94) ரூ 5000/- அதிகரித்து மொத்தம் ரூ 40,000/- உதவித் தொகை வழங்கப்படவிருக்கிறது. இத் தொகை பின்வருமாறு விநியோகமாகும்.

●● பட்டமேற்படிப்பு அல்லது ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ள மாணவர்கள் இருவருக்குத் தலா ரூ 1500 வீதம் ரூ 3000/-

●● இசை அல்லது நாட்டியம் பயிலும் இருவருக்குத் தலா ரூ 1000 வீதம் ரூ 2000/-

●● பதினைந்து கல்லூரி மாணவர்களுக்குத் தலா ரூ 1000 வீதம் ரூ 15,000/-

●● நாற்பது உயர்நிலைப் பள்ளி அல்லது பாலிடெக்னிக் மாணவர்களுக்குத் தலா ரூ 500/- வீதம் ரூ. 20,000/-

கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை

ஏழை மாணவர்களுக்கு உதவி ரூ.40,000

இவற்றுள் அமரர் கல்கி படித்த மூன்று பள்ளிக் கூடங்களில் மூன்று மாணவர்களுக்கு மூன்று உதவித் தொகைகள் ஒதுக்கப்படுகின்றன. மீதமுள்ள உதவித் தொகைகளைப் பெற, தமிழகமெங்கும் உள்ள கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து அவர்கள் தங்கள் கைப்பட எழுதிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

உதவித் தொகைகளைப் பெற, மாணவ மாணவியர் படிப்பில் சிறந்தவர்களாகவும் அதே சமயம் கல்வியைப் பெற்றோர் உதவியுடன் மட்டும் தொடர முடியாத நிலையில் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களாகவும் இருக்க வேண்டும். இந்த இரண்டையும் உறுதிப்படுத்தக் கல்லூரி அல்லது பள்ளி முதல்வரின் சான்றிதழுடன் விண்ணப்பிக்க வேண்டும். சென்ற கல்வி ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களின் நகலை முதல்வரின் கையொப்பத்துடன் இணைப்பது அவசியம்.

விண்ணப்பங்களை ஆராய்ந்து உதவித் தொகை பெறத் தகுதியுள்ள மாணவ மாணவியரை அறங்காவலர்கள் தேர்ந்தெடுப்பார்கள். அறங்காவலர்களின் முடிவே இறுதியானது.

சான்றிதழ்களைத் திருப்பி அனுப்புவதற்கில்லை. கடிதப் போக்குவரத்து கிடையாது.
விண்ணப்பங்கள் வந்து சேரக் கடைசி தேதி ஜூலை 31, 1993.

விலாசம் :
நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை,
நெ. 1, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம்,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

இதுதாண்டா அரசியல்!



அமைச்சர் ஒருவருக்கு ஒருநாள் செலவு மட்டும் இருபதாயிரம் ரூபாய். 27 அமைச்சர்களுக்கும் சேர்த்து ஒருநாள் மட்டும் ரூ 5 லட்சத்து நாற்பதாயிரம் ஆகிறது. மாதம் ஒன்றுக்கு ஒன்றரை கோடி ரூபாய் செலவாகிறது.

- பீட்டர் அல்போன்ஸ்



தண்ணீர் தட்டுப்பாட்டை முழுமையாகப் போக்கும் வகையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா சென்னை நகரில் உள்ள 50 லட்சம் மக்களுக்கும் முறையான குடிநீர் வழங்குவதற்காகக் கடந்த ஜனவரி மாதம் 25 கோடி ரூபாய் வறட்சி நிவாரண திட்டத்திற்காக வழங்கி உள்ளார்கள்.

- டி. எம். செல்வகணபதி



பணம் தண்ணீராகச் செலவாகிறது என்பதில் கருத்து வேறுபாடில்லை. ஆனால் தண்ணீர்தான் கிடைக்கவில்லை!

- ஒரு சென்னைவாசி



மொய்லியின் அரசு நோய்வாய்ப்பட்டு உள்ளது. அதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கும் பொறுப்பு டாக்டரிடம் (கட்சி மேலிடம்) ஒப்படைக்கப்படும். மருந்து முறையில் குணமடையாவிட்டால் ஆபரேஷன் (பை-பாஸ் சர்ஜரி) செய்ய வேண்டும்...

- எஸ். எம். கிருஷ்ணா



என்னுடைய மந்திரி சபைக்கு எந்தவித நெருக்கடியும் இல்லை. எஸ். எம். கிருஷ்ணாவுக்கும் எனக்கும் இடையே ஏற்பட்ட சிறு இடைவெளி காரணமாகச் சில தவறான செய்திகள் வெளிவந்து விட்டன...

- மொய்லி



(தமிழக) அரசு அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் என்று கூறி வருகிறது. எதைத்தான் செய்கிறார்கள்? ஆஸ்பத்திரிக்குச் சென்றால் மருந்து இல்லை. டாக்டர், கையைப் பிடித்துப் பார்த்து, வெளியே மாத்திரை வாங்கிக் கொள்ளுங்கள் என்று கூறுகிறார்...

- மூப்பனார்



புரட்சித் தலைவி மண்ணை எடுத்து 'இது பிள்ளையார்' என்றால் அது பிள்ளையார்தான். பிள்ளையாரை எடுத்து அது மண் என்றால் மண்தான். அந்த அளவுக்குத் தொண்டர்கள் புரட்சித் தலைவியை மதிக்கிறார்கள்...

- இந்திரகுமாரி



✱ சௌந்தர்ராஜன்

கேடயக் கலைஞர்; கேரள சிற்பி

“வரவேற்பறை ஷோ கேஸ் முழுக்க கேடயங்கள், பரிசுப் பொருட்கள்...” - கலைஞர்கள், விளையாட்டு வீரர்கள் பற்றிய கட்டுரைகளில் எல்லாம் அனேகமாக இடம் பெறும் இந்த வரிகளைப் படிக்கும் போதும் சரி, டீ.வி.யில் பல்வேறு விருது வழங்கும் விழாக்களைப் பார்க்கும் போதும் சரி... 'பளபளக்கும் அந்தக் கேடயங்களை யார் உருவாக்கி இருப்பார்கள்' என்ற யோசனையே நமக்கு வருவதில்லை!

கேடயக் கலைஞரான சௌந்தரராஜுவின் மனக் குறையும் இதேதான்!

“நாங்க அதைச் செய்ததுக்கு எங்களைப் புகழ்ந்து பேசாவிட்டாலும் பரவாயில்லை... கேடயத்தை வழங்கும் நபர்கள் பல சமயம் தாங்களே அதை வடிவமைத்தது போல் பேசி பாராட்டைத் தட்டிக் கொண்டு போயிடறாங்க... அதை எங்கள் காதாலேயே வேற கேட்டிருக்கோம்...” என்கிறார் சௌந்தர்.

“உங்கள் பெயரைக் கேடயத்தின் பின்னால் பொறிக்க வேண்டியதுதானே” என்று சௌந்தரிடம் கேட்டால், “அதைப் பல பேர் விரும்பறதில்லைங்களே...” என்கிறார்.

E.S.R. மெமன்டோஸ் என்ற சௌந்தரின் கலைப் பட்டறைக்குள் நுழைந்தால் தலைசுற்றுகிறது! வெல்வெட் துணித் துண்டுகள், மரப் பீஸ்கள், உலோகத் துண்டங்கள், பசை, அட்டை என்று கச்சாப் பொருட்கள் வாரி இறைந்து கிடக்கின்றன. ஆனால் சௌந்தரும் சரி, அவர் உதவியாளர்கள் ரவியும் ராமமூர்த்தியும் சரி, பழகிய லாவகத்துடன் தேவையான பொருட்களைத் தேடாமலே எடுத்துக் கேடயங்கள் வடிவமைக்கும் பணியில் மிகச் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

ஒரு ஷீல்ட் எப்படி உருவாகிறது?

“மொத்தத்தில் அடிப்படையா இருபது, முப்பது ஐடியாக்கள்தாங்க இருக்கு... சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி அந்த அடிப்படையிலேயிருந்து கற்பனை கிளை விடும்... யாருக்குக் கேடயம், எந்த காரணத்துக்குன்னு கேட்டுத் தெரிஞ்சு வைச்சுக்கிடணும்; ஷீல்டு கொடுக்கறவங்களோட ஐடியா ஏதாவது இருந்தா அதைத் தெரிஞ்சுக்கிடணும். அவங்க எதிர்பார்க்கறதை விடப் பிரமாதமா பண்ணிக் கொடுக்கணும். அவங்க அசந்து போகணும்; அதுதான் எனக்குச் சந்தோஷம்...

“ஒரு கஸ்டமர் பாருங்க - ஐடியா முழுசையும் அவரே கொடுத்து இப்படித்தான் செய்யணும்னுட்டாரு; எனக்கு அதுல அவ்வளவா திருப்தியில்லை. ஆனாலும் அவருக்காக அதைத் துளியும் மாத்தாம ஒரு



✱ குட்டப்பன் நாயர்

மாடல் செய்து காட்டினேன். அப்புறம் என் திருப்திக்காக எனக்குத் தோன்றிய டிசைனில் ஒரு மாடல் செய்திருந்ததையும் காட்டினேன். அவர் அப்படியே அசந்துட்டார்.... அப்புறம் கொடுத்த ஆர்டரை என் கற்பனைப்படியே பண்ணச் சொல்லிட்டார்....''

நகைகள் தயாரிக்கும் கலைஞரான தமது தந்தைக்கு உதவியாளராக இளம் பிராயத்தில் இருந்தார் சௌந்தர். 'நகாசு' வேலைகள் செய்வதில் நல்ல பயிற்சி. அந்தக் காலத்தில் நகைக் கடைகளில்தான் கேடயங்களும் செய்வார்கள் - அசல் தங்கம், வெள்ளியில்... இப்போது விலை ஏற்றம் கேடயத்தைத் தனிக் கடைக்கு வெளியேற்றி விட்டது! பித்தளை, செம்பு, தாமிரம், அலுமினியம் போன்ற உலோகங்களில் கேடயங்கள் செய்கிறார் சௌந்தர். சமயத்தில், ''நாளைக்கு ஃபங்ஷன் இருபது ஷீல்டு வேணும்...'' என்று திடீர் ஆர்டர்கள் வருவதுண்டு. இரவு பகலாக வேலை செய்து கொடுத்து விட முயற்சி பண்ணும் போது 'பவர் கட்' வடிவத்தில் சோதனையும் வருவதுண்டு!

சௌந்தரின் பட்டறையில் உதவியாக இருக்கும் மற்றொரு கலைஞர் குட்டப்பன் நாயர். கேரளா, சேர்த்தலையில் சிற்ப ஆசிரியராகப் பணியாற்றிய அனுபவஸ்தர். ரவிவர்மாவின் ஓவியங்களுக்கு ரசிகராகி அவரின் தாக்கமும் பெற்றவர். சென்னை, தம்மையும் தம் கலையையும் வாழ வைக்கும் என்று நம்பிக் குடிபெயர்ந்தார். ஆனால் எதிர்பார்த்த உதவிகள் அரசிடமிருந்தோ வங்கிகளிடமிருந்தோ கிடைக்கவில்லை.

''சிற்பக் கலை பற்றி ஒன்றுமே தெரியாதவர்களிடம் அக் கலையின் வளர்ச்சிக்காகக் கடன் கேட்டால் வேறு என்ன நடக்கும்...?'' என்று தாமதமான ஞானோதயத்துடன் சிரிக்கிறார்.

இத்தனைக்கும் வருடாந்திர சிற்பக் கலைப் போட்டிகளில் வி.டி.ஐ.யின் முதல் பரிசைப் பலமுறை தட்டிச் சென்றவர் குட்டப்பன். வி.டி.ஐ.யின் நூற்றாண்டு விழாவின் போது மிகச் சிறந்த கைவினைஞருக்கான குடியரசுத் தலைவர் விருது கூட கிடைத்துள்ளது. பிரபல டைரக்டர் தாசரி நாராயணராவின் உருவத்தை மரத்தில் செதுக்கியது, தஞ்சை சாந்தி தியேட்டரிலுள்ள 113 கிலோ எடை வீர சிவாஜி மார்பளவுச் சிலைக்கு மாடல் செய்து கொடுத்தது. யானை தந்தத்தில் உமா பார்வதி சிற்பம் செதுக்கியது (இது இப்போது டோக்கியோ மியூசியத்தில் இருக்கிறது!) எனப் பல பெருமைகள் குட்டப்பன் நாயரைச் சாரும்.

''ஒரு மரத் துண்டை எப்படி சிற்பமாக்குவீர்கள்; எங்கிருந்து ஆரம்பிப்பீர்கள்...?'' என்று குட்டப்பனிடம் கேட்டால்...

''ஆரம்பிப்பது எப்போதும் தலையிலிருந்துதான்... அப்புறம் ரொம்ப சிம்பிள்... ஒரு யானை உருவம் செதுக்க நினைத்தால், யானை போல் தோற்றமளிக்காத பாகங்களையெல்லாம் செதுக்கி எடுத்து விட வேண்டியதுதான்!'' என்கிறார்.

கட்டுரை, படங்கள் : பிரபுசங்கர்

சண்டமாருதம் கண்ட தென்றல்

கவிஞரை நேரிற் சென்று சந்தித்துக் கவிதை தருமாறு வேண்டினார் பத்திரிகை ஆசிரியர்.

''கடிதம் எழுதியிருந்தால் போதுமே! இதற்காக நீங்கள் நேரில் வந்திருக்க வேண்டிய அவசியம் இல்லையே!''

''உங்களைக் காணும் வாய்ப்பு. அதனால் தான் நேரில் வந்தேன்'' - இளம் பத்திரிகாசிரியர் இதமாகப் பதிலிறுத்தார்.

அதில் மகிழ்ந்து, கவிதையை இப்போதே எழுதித் தருகிறேன். பெற்றுச் செல்லுங்கள்'' என்று தெரிவித்த கவிஞர், ''சண்டமாருதம் விகடா'' எனத் தொடங்கி, முப்பது வரிகள் கொண்ட கவிதையை எழுதித் தந்தார்.



கவிதை வழங்கிய கவிஞருக்கும் அதைப் பெற்றுச் சென்ற இளம் பத்திரிகாசிரியருக்கும் அப்போது கொஞ்சம் கூடத் தெரியாது, பிற்காலத்தில் இருவருமே அரசவைக் கவிஞர்களாக நியமனம் பெறப் போகிறார்கள் என்பது.

கவிதையை வழங்கியவர் 1949 ஆம் ஆண்டில் ஆஸ்தானக் கவிஞராக நியமிக்கப் பெற்ற நாமக்கல் கவிஞர் வே. ராமலிங்கம் பிள்ளை.

கவிதையைப் பெற்றுச் சென்றவர் - 1978 இல் அரசவைக் கவிஞராக நியமனம் பெற்ற கவியரசர் கண்ணதாசன்.

கவிதை வெளிவந்த இதழ் டி. ஆர். சுந்தரத்தின் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனம் நடத்தி வந்த ''சண்ட மாருதம்''.

- தமிழ்ப்பித்தன்
குறிப்புகளிலிருந்து
எஸ்.சங்கரநாராயணன்


இலவசம்!
ஒவ்வொரு
லிவ்பெட்
பாட்டிலுடனும்
ஒரு சிக்
ஜாஸ்மின்
ஷாம்பூ சாஷே
இலவசம்
CHIK
JASMINE
CONDITIONER SHAMPOO
லிவ்பெட்
பாட்டில்கள்
Shree
Livia Polymer Bottles Pvt. Ltd.,
Mandaiyur Salai, Mandaiyur, Pudukkottai Dt. Tamil Nadu - 622 515. Ph: 04339 - 418/472
இந்த சலுகை இல்லாமலும் லிவ்பெட் பாட்டில் கிடைக்கும்.
31.7.1993 வரை உள்ள இச்சலுகை. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரியில் மட்டுமே.

அப்பாவின் சைக்கிள் தொலைந்து விட்டது. பழைய கறுப்பு ராலே சைக்கிள். பச்சை நிற சீட்டும் சாவி போடாமலேயே திறந்து, மூடக்கூடிய பூட்டும் உள்ளது. வ.உ.சி. மைதானம் எதிரில் உள்ள இந்தியன் வங்கி எதிரே சைக்கிளை நிறுத்தி விட்டு, உள்ளே போய்ப் பணம் எடுத்து விட்டு வரும் போது, சைக்கிள் நிறுத்தின இடத்தில் இல்லை.

அப்பா பதறிப் போனார். கிருஷ்ண மூர்த்திக்கு சைக்கிள் தொலைந்து போனதன் ஆக்ரோஷம் புரிய கொஞ்ச நேரமாயிற்று. புரிந்ததும் மனசு கனத்துப் போனது. எத்தனை வருஷங்கள் கூடப் பிறந்த உறவு மாதிரி வீட்டு வாசலில், கேட்டருகே உள்ள வேப்பமரத்தின் நிழலில், வெராந்தாவில் என்று அநேகமாய் வீட்டின் சகல இடங்களிலும் அது நிறைந்திருந்திருக்கிறது.



அடையாளம்

பக்கத்தில் உள்ள கடைகளில், ஹாய்யாக நின்று சிகரெட் பிடித்தபடி பத்திரிகைகளைப் படித்துக் கொண்டும், அரசியல் பேசிக் கொண்டிருந்தவர்களிடம் அப்பா கவலையோடு விசாரித்தார்.

''இங்கு ஒரு ராலே சைக்கிள் பாத்தீங்களா?''

''இல்லையே சார். ஏன் காணலையா?''

''ம். ஒரு பத்து நிமிஷத்துக்கு முன்ன தான் விட்டுட்டு பாங்க் போனேன்.''

''பூட்டலையா?''


''அது சரியான பூட்டு இல்ல. சாவி போடாதயே திறக்கும். மூடும்.''

''ஜாக்கிரதையா இருந்திருக்க வேணாம்?''

''இப்படித்தான் சார்... லாக்குக்குச் செலவாகும்னு பாத்தம்னா சைக்கிளே போயிறும்.''

''போன மாசம் என் மச்சினன் வீட்டு வாசல்ல புது சைக்கிளை விட்டுட்டுப் போயிட்டான். சாப்பிட்டு வந்தா இல்ல. யாரச் சொல்ல பாய்? நம்ம சொத்தை நாமதானே பாக்கணும்.''

அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அப்பா உச்சிவெயில் முகத்தில் பளபளக்க, முகத்தில் வேதனை சுமந்து நின்றார். மனகணக்குப் போட்டிருக்கும்.



ஒரு சைக்கிள் இப்போது ஆயிரத்துக்கும் மேல். முடியுமா? இன்னொன்று வாங்க முடியுமா? மனக கேள்வி கேட்டிருக்கும். பழைய சைக்கிள் என்றாலும் அது சைக்கிள் என்கிற வாகனமாய்ச் சுமந்து போனது. கூட்டத்தில் பலர் ''புதுசா சார்'' என்றார்கள். இல்லையென்றதும் நிம்மதியடைந்தார்கள். அப்ப என்ன என்கிற தினுசில் கூட்டம் கலைந்தது.

''இரு மூர்த்தி. இன்னொரு தடவை தேடிறலாம்.''

அப்பா இன்னொரு முறை கூட்டமாய்க் குவிந்திருந்த சைக்கிள் மத்தியில் தேடினார். சிவப்பும் மஞ்சளும் இருந்த சீட்டுகள் மத்தியில் பச்சை சீட் கண்ணில் தென்படவில்லை.

''எப்படி வீட்டுக்குப் போகப்பா?''

''பஸ்ல போயிடுவோம் மூர்த்தி. வா.''

அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டான். ரோட்டுக்கு எதிர்ப்பக்கம் போய் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டார்கள். அப்பாவின் கண்கள் சைக்கிள் நிறுத்திய இடத்தையே மேய்ந்து கொண்டிருந்தன. அவ்வப்போது தலையைக் குனிந்து கொண்டார்.

கிருஷ்ணமூர்த்தி வருகிற போகிற சைக்கிள்களைப் பார்த்துக் கொண்டிருந்தான். எடுத்துப் போன ஆள் திரும்ப இந்த வழியே வருவானா? எத்தனை முட்டாள்தனம் இப்படி நினைப்பது.

''ப்பா...''

''என்னடா...''

''யார் எடுத்திருப்பா?''

''யாராக்கும் நாம சாவியில்லாம லாக் பண்றதை கவனிச்சிருக்கணும்.''

''ஏம்ப்பா நீ லாக் மாத்தலை?''

அப்பா மௌனமாய் மீண்டும் ரோட்டையே வெறித்தார். புகை கக்கிக் கொண்டு லாரிகள் கடந்து போயின.

''போலீஸ்ல சொன்னா பிடிச்சிருவாங்களாப்பா?''

''தெரிலை. பாக்கணும்.''

தூரத்தில் ஐந்தாம் நம்பர் பஸ் வருவது தெரிய, அப்பா மூர்த்தியுடன் ஏறுவதற்குத் தயாரானார்.

செய்தி சொன்னதும் வீட்டிலிருந்த அனைவரும் அதிர்ச்சியடைந்தார்கள். அன்

தமயந்தி



அருள்வாக்கு

இந்தக் காலத்தில் சில பேரைப் பற்றிக் கேள்விப்படுகிறோம் - பண விஷயத்தில் ரொம்பவும் ந்யாயமாயிருப்பவர், கணக்கு களில் ரொம்பவும் கறார் என்று. ஆனாலும் இப்படிப்பட்டவர்களுடைய ஆல்-ரௌண்ட் காரக்டரை (எல்லா அம்சங்களிலும் அவர்க ளுடைய நடத்தைகளை)ப் பார்த்தால் அவற் றில் சிலதில் திருப்தி இல்லாமலும் பல பேரு டையது இருக்கிறது. ஒன்று இருந்தால் ஒன்று இல்லாமலிருக்கிறது. படிப்பு, வாசா™, கார்யத் திறமை எல்லாம் சேர்ந்து, நடத்தை யிலும் எல்லா அம்சங்களிலும் சுத்தமாக இருக்கிறார்களா என்று பார்த்தால் எங்கேயா வது இடறுகிறது. நாமும் 'பரவாயில்லை; அஞ்சுக்கு ரெண்டு பழுதில்லாட்டா பாதக மில்லை' என்று இவர்களிடம் நாட்டு நிர்வா ஹத்தை ஒப்புவிக்கிறோம். ஆனால் 'ஹ்யூ மன் நேச்சர்' (மநுஷ்ய இயற்கை) போகிற போக்கில், இப்படிக் கலந்தாங்கட்டிகளாக இருக்கிறவர்களுக்கு ஒரு பதவி, ஸ்தானம் என்பது கிடைத்த பிறகு, ஐந்துக்கு இரண்டு என்பது ஒன்று, அரை, கால், ஸைஃபர் என்று சரிந்து கொண்டே போகிறது. இதனால்தான், அர்த்த சுத்தத்தை மட்டும் சொல்லாமல், ஆனாலும் அதுதான் பொது நிர்வாஹத்தில் மிகவும் முக்யமான விஷயமாதலால், அதைப் பிரித்து முதலிடம் கொடுத்துச் சொல்லி, அதோடு கூட, "ஆத்மசுத்தம்" என்பதாக ஒரு வனுடைய ஆல்-ரௌண்ட் காரக்டரும் பழு தில்லாமல் பூர்ணமாயிருக்க வேண்டுமென்று சோழர் கால சாஸனம் சொல்கிறது.

இப்படிப்பட்டவர்கள்தான் பொது நிர் வாஹத்துக்கு வரலாம், வர முடியும் என்று அதன் ஐந்தாவது clause (ஷரத்து) நிர்ண யித்து விடுகிறது.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்க ராச்சார்ய சுவாமிகள்.

ஸன் அப்பாவிடம் நிறைய கோபப்பட் டான்.

"பார்த்து வைக்கக் கூடாது. இந்த மூர்த் தியை காவலுக்கு விட்டுட்டுப் போயிருக்கக் கூடாது?"

"பயங்கர வெயில் சண்முகம்."

"போலீஸ்ல கம்ப்ளெய்ண்ட் கொடுத் துறலாமா?"

"கொடுக்கணும்."

அம்மாவுக்குத் திடீரென்று சந்தேகம் தீப் பொறியாய்த் தட்டியது.

"ஒருவேளை யாராச்சும் மாத்தி எடுத் திட்டுப் போயிருப்பாங்களோ?"

"அப்படி யார் எடுப்பா?"

"ஏதும் யோசனையா, மறதியா எடுத் திருக்கலாமில்லே?"

"இப்ப என்ன செய்ய?"

"கஷ்டத்தைப் பார்க்காம இன்னொரு தரம் போயிட்டு வந்துடறது."

அப்பா மறுபடி பஸ்ஸில் கிளம்பினார். மூர்த்தியும் தொற்றிக் கொண்டான். அப்பா அந்த சைக்கிளை எவ்வளவு நேசித்தார் என்று அவனுக்குத் தெரியும். பழைய சைக்கி ளானாலும் அவருக்கு அதனோடு உண்டான தொடர்பு அலாதியானது.

இன்னும் அவனுக்கு அந்த சைக்கிள் வீட்டுக்கு வந்த முதல் நாள் நன்றாக ஞாபக மிருக்கிறது. அது ஒரு அழகான சாயங் காலம். ஸ்நேகிதர்களோடு விளையாடிக் கொண்டிருக்கும்போதே மனசு அடிக்கடி சிலிர்த்துக் கொண்டது. விளையாட்டில் மனசு லயிக்கவில்லை.

"என்னடா கிருஷ்ணமூர்த்தி. விளை யாடப் பிடிக்கலே?"

"எங்கப்பா வர்றச்சே புது சைக்கிள் வாங்கிட்டு வருவார் ஹரி."

அப்போது அவர்கள் இருந்தது நெரிச லான புதுப்பேட்டை தெருவில். இப்போ திருப்பது போல அங்கே ஒவ்வொரு வீட் டையும் பிரிக்கும் காம்பவுண்ட் சுவர்கள் கிடையாது. ஒவ்வொரு வீட்டுக்கென தனி தோட்டம் கிடையாது. ஒவ்வொரு வீட்டுக் கென தனி ரகசியங்களும் கிடையாது. அப்பா சைக்கிள் வாங்கப் போவது அம்மா மூலம் மற்ற அம்மாமார்களுக்கும், அண் ணன் மூலம் வாலிபப் பையன்களுக்கும் தெரிந்து விட்டது.

அப்பா அன்றைக்கு வீட்டுக்கு வர எட்டரை மணி ஆகி விட்டது. கூடவே ஜன்னத் ஹோட்டல் பிரியாணியும் வந்திருந் தது. அம்மா சைக்கிளைத் தொட்டுப் பார்த் தாள். அண்ணன் அடுத்த தெரு வரை போய் வந்தான். கிருஷ்ணமூர்த்தியைக் காரியரில் வைத்து அப்பா ஒரு சுற்று போய் வர தெரு வேடிக்கையாய்ப் பார்த்தது.

தினமும் அப்பா அந்த சைக்கிளைத் துடைத்தார். வாரா வாரம் எண்ணெய் போட்டார். கிருஷ்ணமூர்த்தியை ஸ்கூலில்

கொண்டு போய் விட்டார். பக்கத்தில் யாரும் சுகமில்லை என்றால் ஆட்டோ கூட்டி வர, டாக்ஸி கூட்டி வர, டாக்டர் கூட்டி வர அப்பாவிடம் சைக்கிள் கேட்டார்கள். என்ன அவசரமானாலும் அப்பா தான் போய் வருவார்.

''ஏன்ப்பா நீங்களே போறீங்க?''

''எங்கேயாவது கொண்டு போய் ஏத்தி வப்பான். ஹேண்டில்பாரை வளைச்சி வப்பான். செலவு நம்ம தலைல விழும். அவனை ஒண்ணும் சொல்ல முடியாது. நீதானே கொடுத்தேம்பான் அப்ப.''

அண்ணன் கூட எப்பொழுதாவதுதான் அப்பாவிடம் பர்மிஷன் வாங்கி சைக்கிளைக் கொண்டு போவான். அவன் கேட் தாண்டிப் போகிற வரை அப்பா பத்துத் தடவை சொல்லி விடுவார்.

''பத்திரம் சண்முகம். பார்த்துப் போ. அவன் கேட்டான் இவன் கேட்டான்னு கொடுத்துறாதே.''

''சரிப்பா.''

திடீரென்று மூர்த்திக்கு அப்பாவின் பெயரை, சில சைக்கிள்களில் உள்ளது போல் எழுத வேண்டும் என்றிருந்தது. லீவ் விட்ட சனிக்கிழமை மத்யானம் அப்பா தூங்கிப் போன பிறகு, அமைதியாய் ஒரு ஆணியை எடுத்துக் கொண்டு செயின் கார்டில் பெரிசாய் சிவசுப்ரமணியன் என்று கிறுக்கினான். கறுப்புநிற பெயிண்ட் பெயர்ந்து வெள்ளைக் கோடுகளாய் மாறியது. ஆனாலும் பெயர் தெளிவாய் இல்லை.

அப்பா சாயங்காலம் எழுந்து, கடை வரைக்கும் போகக் கிளம்பியவர், ஸ்டாண்டைக் கழற்றியதும் சட்டென்று நின்றார்.

''லக்ஷ்மி.''

''என்னங்க?''

''மூர்த்தி எங்கே?''

''டேய்... அப்பா கூப்பிடுறார்.''

மூர்த்திக்கு உள்ளூர பயம். அதையும் மீறி வெளியே போனான். ''என்னப்பா?''

''இதார் வேலை?''

''பேர் எழுதணும்னு... நான் தாம்ப்பா...''

முதுகில் பளாரென்று அடி விழுந்தது.

''செய்வியா ராஸ்கல்?''

''தெரியாம செஞ்சிட்டேன்ப்பா. விட்டுறுப்பா. விட்டுறுப்பா.''

அப்பாவும் என்னென்னவோமோ செய்து பார்த்தார். அந்த வெள்ளைக் கிறுக்கல் கோடுகள் மறையவில்லை. அவ்வப்போது 'ரீ-பெயிண்ட்' பண்ண வேண்டும் என்றார். சமயம் வரும் போது பணமில்லை. பணமிருக்கும் போது சமயம் இல்லை என்று வருத்தப்பட்டார்.

அது குறித்து அவருக்கு மூர்த்தி மீது வருத்தம் உண்டு.

இப்போதும் அந்த இடத்தில் மற்ற சைக்கிள்கள்தான் நின்றன. முன்பு நின்றிருந்த சைக்கிள்களில் சிலது மட்டும் நின்றிருந்தன. மற்றதெல்லாம் அதற்கப்புறம் வந்து நிறுத்தப்பட்டவை.

அப்பா பக்கத்திலிருந்த கடையில் மறுபடியும் விசாரித்தார்.

''அப்ப வந்த சார்தான? நாங்களும் பார்த்தோம். யாரும் வரலை.''

''ஒருவேளை யாராச்சும் தெரியாம மாத்திக் கொண்டு போயிருக்கலாம்னு...''

''அதெல்லாம் இருபது வருஷத்துக்கு முந்தியிருக்கும் வாத்யாரே. இப்ப கலிகாலம். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போ. பத்து ரூவா கேப்பான். கொஞ்ச நாள் கழிச்சு வருவான். திரும்ப ரூவா கேப்பான். திரும்ப கொஞ்ச நாள் கழிச்சு வந்து ஒரு சைக்கிள் கிடக்கு. இருநூறு ரூபா கொடுத்து எடுத்துக்கம்பான். எடுத்துக்க. பாடாவதியாயிருக்கும். பரவால்லையோ?''

மற்றவன் அதட்டினான். ''த்ச். நீ கம்மாரு. நீங்க எதுக்கும் கையோட ஒரு கம்ப்ளெய்ண்ட் ஃபைல் பண்ணிருங்க சார்.''

''போயிறலாமாடா?'' அப்பா மூர்த்தியைக் கேட்டார். பெரிய மனுஷத்தனத்தோடு மூர்த்தி தலையசைத்தான்.

போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். கூட்டமில்லை. பத்து நிமிஷம் காக்க வைத்து விட்டு ஏட்டு ''என்ன...?'' என்றார்.

''சைக்கிள் காணாம போயிடுச்சு.''

''இந்தியன் பாங்க் முன்னயா?''

''ம்.''

''இதுல ஒரு கம்ப்ளெய்ண்ட் எழுதிக் கொடுங்க. சைக்கிள் நம்பர் தெரியுமா?'

''ம்ஹூம்.''


''பச். ஏதும் அடையாளம் உண்டா?''

அப்பா யோசித்தார். மூர்த்தி சட்டென்று ''செயின்-கார்ட்ல ஆணி வச்சுக் கிறுக்கிருக்கும்'' என்றான்.

அப்பா ஏனோ அவன் தோள் மீது கைவைத்து நம்பிக்கையுடன் சிரித்தார்.

பதினோரு தீக்குச்சிகளால் ஜோடிக்கப்பட்ட இந்த வீடு இடதுபுறம் பார்க்க இருக்கிறது. இதையே மிகக் குறைந்தபட்சமாக தீக்குச்சிகளை நகர்த்தி வலதுபுறம் பார்க்குமாறு செய்ய வேண்டும். எத்தனை தீக்குச்சிகளை நகர்த்துவீர்கள்?

விடை ...38.... ஆம் பக்கம்





இரக்கம் காட்டிய சோட்டி இல்லாமல் போகும்

அத்யாயம் - இ

இதமாக அந்தக் குட்டி மைக்ரோ கம்ப்யூட்டரின் பட்டன்களைச் சொடக்கி விட்டாள் சோட்டி. திரையில் எழுத்துகள் விளையாடின. சீதோஷ்ணம் சீராயிருந்தது. பரிசோதனை முடிவுகளை வண்ண வரைபடமாகக் காட்டியது மானிட்டர். வரை படங்கள் பிரிண்டரில் ஜெராக்ஸ் ஆகி வெளி வந்தன.

மீண்டும், மீண்டும், கம்ப்யூட்டர் நொடியின் ஆயிரத்தில் ஒரு பகுதிக்குள் சோதனை முடிவுகளை வட்டமடித்து ஒப்பிட்டுக் கொண்டேயிருந்தது. கொண்டேயிருந்தது. இருந்தது. து.

அப்போது அழைப்பு மணி இசை பாடியது.

''யெஸ் கமின் ப்ளீஸ்.''

சோட்டியின் குரல் இண்டர்காமில் வாசலில் ஒலித்தது.

''மார்னிங்!''

''மார்னிங் ப்ரபஸர் ஆர்யா'' சோட்டி எழுந்தாள்.

''ப்ராஜக்ட் எந்த ஸ்டேஜ்ல இருக்கு?.... ரிசல்ட் வந்ததா? கிராஃப் காட்டுப் பாக்கலாம். கம்ப்யூட்டர் பையா க்விக்! க்விக்!''

''சார் ரிசல்ட்படி நாளுக்கு நாள் மனுஷனோட அறிவு அதிகமாகுது. கிராஃப் பாருங்க.''

''அஃப்கோர்ஸ் ஒருவனுக்கு வேண்டிய எல்லா வசதியும் கிடைக்க அவன் முழு சோம்பேறியா மாறினப்புறமும் புத்திசாலித்தனம் வளர்றது ஆச்சரியம் தான். எல்லா விஷயமும் விரல் நுனில ஒருத்தனுக்குத் தெரியற காலம் பார். அதான் அவன் அறிவு அதிகமாகக் காரணம்.''

''அப்புறம் சார்! இந்த 'மெமரி கர்வ்' பாருங்க - வயசாக ஆக நினைவு குறையணும். ஆனால், சமீப காலமா ஒரு புது ஏற்றம் உண்டாகியிருக்கு.''

''எங்கே? வெரிகுட்! சோட்டி, ப்ரெயின்ல செரிக்ஸான்னு ஒரு புது பார்ட் இருக்கறத போன மாசம் கண்டுபிடிச்சிருக்கிறதா செய்தி வர்ல? அதோட அற்புத வேல இது.

எச்சரிக்கை!

இன்னும் ஒன்பதே வாரங்கள். உத்தண்டராமா, உன் கன்னி நாவலை உடனே எழுதி விடு!

நளினி சாஸ்திரி

இத்தனைக் காலத்துக்குப் பிறகு செரிக்ளர் வேலை செய்ய ஆரம்பிச்சிருக்கு.''

''அப்படின்னா செரிக்ளர் அம்பது வயசுக்குப் பிறகுதான் தன்னோட ஃபங் ஷனை ஆரம்பிக்கும் போலருக்கு!''

''யூர் ஆர் ரைட்! இதப்பத்தி விஸ்தாரமா ஆராய்ச்சிப் பண்றது நல்லது. ஆனால், நம்ம துரதிருஷ்டம் மனுஷனோட ஆயுட்காலம் இப்போ அம்பதிலேயே முடிஞ்சுடறது.''

''நான் முடிஞ்ச வரை அம்பது வயதான வர்களைத் தேடி டெஸ்ட் செய்தேன். எல் லாரும் இறுதி இல்லம் போயிடறதாலே யாரும் கிடைப்பது கஷ்டமாயிருக்கு.''

''என்கிட்டே கூட இரண்டு வயதான வர்கள் முகவரி கிடைச்சது. எங்கே.... ம்... சாரி... மறந்துட்டேன். நாளைக்குச் சொல் றேன்.''

''நாளைக்கு என் பிறந்த நாள். காலை பார்ட்டிக்கு நீங்க கட்டாயம் வரணும் சார். நீங்கதான் முதன்மை விருந்தினர்.''

''ஓ.கே! சோட்டி அவசரமா போகணும். ஒரு டெலிகான்பரன்ஸ் இருக்கு. 'ப்ராஜக்ட் ஹெவன்' முடி யற ஸ்டேஜ். போகணும். நீ கூட இன்னிக்கு இதோட முடிச்சிடு. நாளைக்குத் தொடரலாம்.

''நாளைக்கு மறக்காம வாங்க சார்.''

''ஓ.கே. அட்வான்ஸ் வாழ்த் துக்கள்!''

ஆராய்ச்சி லேபிலிருந்து வெளி வந்த சோட்டி, தன் ஆட்டோ காரில் அமர்ந்ததும் அது 'ஸ்டார்ட்' ஆகியது. விர்ர்ர்ரியது. 149 கி.மீ. யில் ஏறத்தாழப் பறந்தது.

அப்போதுதான் கைகளை விரித்தபடி குறுக்கே நின்றான் குரு. திடீரென்று குறுக்கே தடையாக மனிதன் வரவும் குலுங் காமல் நின்றது கார். அவன் கால்களை அகல விரித்தபடி ரோடின் மையத்தில் 'ஆ' வென்று நின்றான்.

கும்பிடப் போன தெய்வம் எதிரே வந்த கணக்காக ஒரு வயதானவன் எதிரில் நிற் பதைக் கண்ட சோட்டியின் கண்கள் ஆச்சரி யத்தில் விரிந்தன.

''யார் நீ! என்ன வேண்டும்? ஏன் தடுக் கிறாய்?''

இந்த மனிதன் பார்க்க வித்தியாசமாக இருக்கிறானே?....

''நான் ஒரு மனிதன். எனக்கு உணவு வேண்டும்.''

''எந்த ஊர்? உன் பெயரென்ன?''

எப்படி இவன் மட்டும் இத்தனை உயர மாக....

''பூமிக்குச் சொந்தக்காரன். மிருந்த பசி. உடனே உணவு தேவை.''

''உணவு... சரி வா வீட்டுக்குப் போக லாம். உணவு தருகிறேன்.''

பார்த்தால் வயதான தோற்றம். ஆராய்ச் சிக்கு இவன் நிச்சயம் உதவுவான். வயதான வர்கள் கிடைப்பதே அரிதான இவ்வுலகில் இவனை இழக்கக் கூடாது. அழை! அழை!

''பெண்ணே வீட்டிற்குப் போன பின் உணவுக்கு ரூ கேட்கக் கூடாது!'' - முன் ஜாக் கிரதையானான்.

பெர்முடா முக்கோணம்

பெர்முடா முக்கோணம் என்பது பசிபிக் கடலின் ஒரு பகுதி. இப்பகுதியில் விமானங்களும், கப்பல்களும் பயணிக ளோடு மாயமாய் மறைந்து விடுகின்றன. சுமுகமான சீதோஷ்ணத் தில் நல்ல பறக்கும் நிலையில், நல்ல மிதக்கும் நிலையில் தடய மின்றி அவை மறைவது இன்று வரை புரியாத புதிர்.

இனியும் வேறு கிரக வாசிகள் நம்முடன் தொடர்பு கொள் வது கதையாகவோ, கனவாகவோ இருக்காது. நம்முடைய வாழ் நாளுக்குள் அது மனித குலத்தின் இயற்கை நிகழ்ச்சியாக நடக்கப் போகிறது என்று விஞ்ஞானிகள் பலரும் உணர்கிறார்கள்.

- Report of the Astronomy Survey Committee of United States National Academy of Sciences.

ஆத்மாவுக்கு ஆபத்து

''ரூ வேண்டாம். நீ வந்தால் போதும். ஏறு!''

சோட்டியின் பற்கள் வெண்மையாக இருந்தன.

டைனிங் டேபிளில் அமர்ந்த குரு ஏமாற்றமடைந்தான். காலியாக இருந்தது. சோட்டியும் வெறுமனே அமர்ந்து விட்டாள்.

''இனிதான் சமைக்கப் போகிறாயா? அதுவரை எனக்குப் பொறுமையில்லை. தண்ணீராவது கொடு.'' குரு தளர்ந்தான்.

சோட்டி டேபிள் மேலிருந்த ஒரு பட்டனை இயக்க, கவர் விரிந்து, வழுக்கிய உணவு குருவின் முன் வந்தது.

அடுத்த பட்டனின் அமுக்கலில் டேபிளின் ஒரு பகுதி விரிந்து பானங்கள் மேலே வந்தன. குரு பரக்காவெட்டியாய்க் குடித்தான். உணவினை விழுங்கினான்.

சாப்பிட்டு எத்தனை நாட்கள்?

எத்தனை மாதங்கள்?

எத்தனை வருடங்கள்!

ஆம் வருடங்கள்!

''பசி தீர்த்துதா பெரியவரே!''

''நன்றி பெண்ணே! நான் சந்திக்கும் முதல் மனிதாபிமானி.''

''அப்படியென்றல்?''

''தயவு தாட்சண்யம் காட்டும் பெண்.''

''இதுவும் கேட்டிராத வார்த்தை. எப்படி உனக்குத் தெரியும்?''

''எல்லாரும் உணவு தர மறுக்க உன்னால் மட்டும் எப்படி இவ்வளவு உணவு தர முடிந்தது?''

''காரணம் நான் ஒரு முதன்மைப் பிரஜை.''

''முதன்மைப் பிரஜையா?''

''அரசுக்காக - ஆத்மாவுக்காக - நாட்டு வளர்ச்சிக்காக உழைக்க, சிலர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள்தான் முதன்மைப் பிரஜைகள். அவர்கள் கேட்டது கிடைக்கும். ஆராய்ச்சி தடையாகாமல் நடக்க வேண்டி, என்ன கேட்டாலும் தந்து கொண்டிருப்பார்கள்.''

''ரூ கூடவா?''

''ஆமாம்.''

''உன்னிடம் ரூ இருக்கிறதா?''

''இருக்கிறதே!''

''காட்டு பார்க்கலாம்!''

சோட்டி தன் அடையாள காந்த அட்டையை லாக்கரில் தடவ அது திறந்து கொண்டது. உள்ளே கட்டுக் கட்டாக ரூ. புதிது புதிதாக ரூ. உலகை ஆட்டிப் படைக்கும் ரூ!

''ஆமாம் உங்களைப் பற்றிச் சொல்லவில்லையே? நீங்கள் யார்? என்ன பெயர்? என்ன ஊர்? புதிய வார்த்தைகள் எப்படித் தெரியும்?''

''ஒவ்வொன்றாய்க் கேள்.''

''உங்கள் பெயர்?''

''ஸ்ரீனிவாஸ குரு.''

வீட்டை ஆழமாய்ப் பார்த்தான். வசதியான வீடு. சாந்தமான வீடு. சிக்கென்று சில்லென்று.

''உங்கள் ஊர்?''

''கோவிந்தம் பாளையம்.''

யோசி. இந்த உலகில் பிரதானம் ரூ. நாளைய பசிக்குத் தேவை ரூ. கருமமே கண்ணாயிரு.

''உங்கள் வயது?''

''இன்று என்ன தேதி?''

''18. 6. 2500.''

''எனில் என் வயது ஐநூற்றுப் பதினெட்டு.''

''வ்வாட் 518?''

''ஆமாம் 518 வருடங்கள்.''

குரு. உன்னால் முடியும். தயவுதாட்சண்யத்தை ரப்பரால் அழி. முயற்சி செய்; உன்னால் முடியும். இப்போது தேவை ரூ. தேவை ரூ. தேடு ரூ.

''பெரியவரே என்ன சொல்கிறீர்; 518 வயசா? இத்தனை நாள் எங்கிருந்தீர்கள்?''

''ப்ளீஸ் - கேக்காதீங்க.''

உண்ட வீடு. உப்பிட்டவள். உள்ளளவும் நினை.

இரண்டகம் வேண்டாம்.

''இதற்கு முன் எங்கே இருந்தீங்க ஸ்ரீநிவாச குரு?''

''ப்ளீஸ் கேக்காதீங்க.''

முயற்சி செய்; முயற்சி செய்; முடியும்.

''ப்ளீஸ் குரு ஆச்சரியமாருக்கு. நம்ப முடியலை. சொல்லுங்களேன்.''

''தக்க சமயத்துல பசி தீர்த்த பெண்ணே கேள்.

....

....

....

....''

(சென்ற சில நிமிட உரையாடல் விவரித்தால் என் முதல் நாவல் சிறுகதையாக முடிந்து விடும் அபாயத்தால் அவை கடைசியில் - நளினி சாஸ்திரி)

சோட்டியின் அடையாள அட்டை உபயோகித்து வீட்டிலிருந்த ரூக்களையெல்லாம் தேடித் திரட்டி எடுத்துக் கொண்டு, குரு புதிய நம்பிக்கையுடன், உற்சாகத்துடன் வீட்டை விட்டு வெளியேறும் போது -

தான் இருந்ததற்கான அடையாளமில்லாமல், சாட்சியில்லாமல், மாயமாய் மறைந்திருந்தாள் சோட்டி.

(தொடரும்)

உறவுக்குக் கை கொடு; சேவைக்கு உயிர் கொடு!



* முரளி

கல்லூரியில் படிக்கும் போது கிராமங்களுக்குப் போய்ச் சாலைகளைச் செப்பனிடுவார்கள்; குடிசைப் பகுதிகளுக்குச் சென்று குழந்தைகளைக் குளிப்பாட்டி விடுவார்கள்; போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவதில் அவ்வப்போது போலீஸாருக்கும் உதவுவார்கள்.

கல்லூரிப் படிப்பு முடிந்து வெளியே வந்ததும் அந்த சமூக சேவை உணர்வெல்லாம் 'பொய்யாய்ப் பழங் கதையாய்க் கனவாய் மெல்லப் போய்', வெறும் சர்டிபிகேட்டுகள் மட்டுமே எஞ்சி நிற்கும். இதுதான் நிதர்சனம்!

ஆனால் முரளியின் விஷயம் அப்படியல்ல. ''கல்லூரியில் படிக்கும் போது நண்பர்களெல்லாம் ஒன்று சேர்ந்து,



* புவனேஸ்வரி



* தேவராஜ்



* சேவாலயா குழந்தைகள்

'விவேகானந்தா அசோசியேட்ஸ்' என்று ஆரம்பித்துச் சமூக சேவை செய்து கொண்டிருந்தோம். சமூகச் சீர்கேடுகளையெல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டுகிற முறையில், 'ராகமாலிகை' என்கிற பெயரில் கையெழுத்துப் பத்திரிகை ஒன்றும் நடத்தி எங்கள் கருத்துக்களைப் பரிவர்த்தனை செய்து கொண்டோம். குறிப்பாக அநாதைக் குழந்தைகளுக்கு உதவுவதில் நாங்கள் அனைவருமே மிகுந்த ஆர்வம் காட்டினோம்!

''படிப்பு முடிந்து வெளியே வந்து பலரும் வேலைகளில் சேர்ந்த பிறகும் எங்களின் சமூக சேவை உணர்வு போய்விடவில்லை. அவ்வப்போது, அநாதை ஆசிரமங்களுக்கு நிதி சேர்த்துக் கொடுப்பது, அந்தக் குழந்தைகளுக்குத் துணிகள் சேர்த்துக் கொடுப்பது போன்ற பணிகளைத் தொடர்ந்து கொண்டுதான் இருந்தோம்.

''சில சந்தர்ப்பங்களில் நாங்கள் அநாதைக் குழந்தைகளுக்கு என்று சேர்த்துக் கொடுத்த நிதி, அந்தக் குழந்தைகளுக்குச் சரிவரப் போய்ச் சேரவில்லை என்பது தெரிய வர, அதிர்ந்து போனோம். இதற்கு என்ன தீர்வு? தங்கராஜ், தேவராஜ், துவாரகாநாத், நாராயணன் நான் ஆகிய ஐவரும் ஒன்று சேர்ந்து யோசித்தோம். ஒரே வழி நாமே ஓர் அநாதை ஆசிரமத்தைத் தொடங்கி நடத்துவதுதான் என்கிற முடிவுக்கு வந்தோம். அதன் விளைவுதான் 'சேவாலயா!'' என்கிறார் முரளி.

சென்னைக்கு அருகிலுள்ள கொசவு என்னும் கிராமத்தில் முப்பது அநாதைக் குழந்தைகளைத் தன் குழந்தைகளாகக் கொண்டு இயங்குகிறது சேவாலயா!

குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு தங்கராஜுக்கு என்றால், குழந்தைகளுக்கான பள்ளிக் கூடப் பொறுப்பு அவர் மனைவி சாந்திக்கு. நிதி வசூலிக்கும் பொறுப்பு தேவராஜுக்கு. கணக்கு வழக்குகளைக் கவனிக்கும் வேலை துவாரகாநாத்துக்கு என்றால் நிர்வாகச் சிக்கலில்லாமல் கவனிக்கும் பொறுப்பு நாராயணனுக்கு. கடிதப் போக்குவரத்துகளைக் கவனிப்பது முரளியின் மனைவி புவனேஸ்வரி. அனைவருக்குமே உதவுவது முரளியின் வேலை!

''குடும்பப் பொறுப்புகளோடு இந்தப் பொதுநலப் பொறுப்புகளும் சேர்ந்திருப்பது ஒரு சுமையாக இல்லையா?'' - முரளியின் மனைவி புவனேஸ்வரியிடம் கேட்டோம்.

''இல்லை. குடும்பப் பொறுப்போடு சேர்த்து அதையும் செய்ய முடிகிறதே என்று சந்தோஷமாக இருக்கிறது. இந்த சந்தோஷம் முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் பார்த்துக் கொண்டிருந்த இன்சூரன்ஸ் வேலையைக் கூட விட்டு விட்டேன்!'' என்கிறார் புவனேஸ்வரி.

அநாதைக் குழந்தைகளுக்காக நிதியுதவி கேட்டுச் செல்லும்போது, சம்பந்தப்பட்டவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள்?

''நான் ஒருவரைச் சந்திக்கும் முதல் நாளிலேயே நிதியுதவி கேட்டு விடுவதில்லை. 'சேவாலயா' பற்றிச் சொல்லுகிறேன். ஒரு நாள் அங்கு வந்து பார்வையிடச் சொல்லுகிறேன். அவர்கள் வந்து அந்தக் குழந்தைகளைப் பார்க்கும் போது, அந்தக் குழந்தைகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்கிற எண்ணம் அவர்களுக்கே வந்து விடுகிறது!'' என்கிறார் தேவராஜ்.

''தாங்கள் கொடுக்கிற பணம் உண்மையாகவே ஒரு நல்ல காரியத்துக்குத்தான் பயன்படுகிறது என்பது முழுமையாகத் தெரிய வருகிறபோது, பலரும் தங்களால் ஆனதைச் செய்வதற்குத் தயாராய் இருக்கிறார்கள்!'' என்கிறார் முரளி.

'சேவாலயா'வின் ஆண்டு விழாவுக்காகக் கமல்ஹாசனை அழைத்த போது முதல் இரண்டு ஆண்டுகள் சந்தேகத்தின் பேரிலோ என்னவோ தட்டிக் கழித்து விட்டாராம். இவர்கள் விடாமல் மூன்றாவதாண்டும் போய் அழைத்தபோதுதான் நம்பிக்கை வைத்து வந்தாராம். வந்தவர், பார்த்துவிட்டுத் திரும்பியதோடு தம்மாலானதை அவ்வப்போது உதவிக் கொண்டும் இருக்கிறாராம்.

'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை' என்பார்கள். அந்த நன்மைகள் நமக்கு மட்டுமல்ல; பிறருக்கும் தான் என்பதற்கு இந்த 'சேவாலயா' நண்பர்கள் ஓர் உதாரணம்.


– வெ. ஸ்ரீதர்

படங்கள் : கோபிநாத்

''தென்னாப்பிரிக்காவின் மக்கள் தொகை எவ்வளவு?''

''சரி சார். நான் வரேன். உங்க மச்சினிக்கு, என்னோட வாழ்த்துக்களை, மறக்காம சொல்லிடுங்க...''

-- ஆர். வசந்தகுமார்




டாக்டர் மாம்
ஹெர்பல் குரோத் டானிக் உங்கள்
குழந்தை வளர்ச்சி அடைவதற்கு உண்ணும் ஆவலைத் தூண்டுகிறது.
நீங்கள் உணவு ஊட்டும் போதெல்லாம் உங்கள் குழந்தைகள் உணவைத் தட்டிவிட்டு விளையாட்டில் கவனம் செலுத்துகின்றன. ஆகவே வளரும் வாய்ப்பை இழக்கின்றன. உங்கள் குழந்தைக்கு நன்கு சாப்பிடும் பழக்கம் இருந்தால் அது வளர்வதற்கு அத்யாவசியமான புரதம், கார்போஹைட்ரேட்ஸ் தாதுக்கள் வைட்டமின்கள் ஆகிய சத்துக்கள் கிடைக்கும். இதற்கு வழி: குழந்தைக்கு சாப்பாட்டிற்குமுன் ஒன்று அல்லது இரண்டு ஸ்பூன் டாக்டர் மாம் கொடுங்கள். அது உண்ணும் ஆவலை நன்கு தூண்டும். இதில் ஒரு நன்மை என்னவென்றால் இந்த டானிக், தெவிட்டாத ருசி உள்ளது. நீங்கள் நல்ல வித்தியாசத்தை கவனிக்கலாம். குழந்தைக்கு விளையாட்டுக்காட்டியோ பலவறுத்தியோ உணவு ஊட்டத் தேவை இல்லை குழந்தை தானே மேலும் மேலும் கேட்கும். விளையாட்டில் துடிதுடிப்பு, படிப்பிலே கூர்மை வேகம், அத்தனை சக்தி குழந்தைக்கு. உங்கள் குழந்தைக்கு அன்றாடம் டாக்டர் மாம் டானிக் சாப்பிடும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். குறிப்பாக வளர்ச்சியின் முக்கிய காலக்கட்டமான 3 வயது முதல் 12 வயதுக்கு இடையே. உங்கள் குழந்தைக்கு அது வழக்கமாகிவிடும். அதை குழந்தை மிகவும் விரும்பும். டாக்டர் மாம் பல்லாண்டுகளாக நிரூபணம் பெற்ற மூலிகைகளான பிராஹ்மி, அஷ்வகந்தா, அம்லாகி போன்றவற்றை தூய்மையான வடிவில் கொண்டுள்ளது. அது இயற்கையானது, பாதுகாப்பானது, மருத்துவ ரீதியில் நிரூபிக்கப்பட்டது. அத்துடன் உலகெங்கிலும் மருந்துகளுடன் பிராண்டு கடன் கூடிய பலகோடி மதிப்புள்ள கம்பெனியான ஜே.பி. கெமிகல்ஸ் அண்ட் ஃபார்மாசூடிகல்ஸிலிருந்து வருகிறது. டாக்டர் மாம். இன்றே கொண்டுவாருங்கள் இல்லத்திற்கு. உங்கள் குழந்தைகளுக்கு கொடுத்து அவர்களுக்கு உண்ணும் ஆவலைத் தூண்டுங்கள்.
MOM
GROWTH TONIC
டாக்டர் மாம் ஹெர்பல் வரிசைகள் உள்ளிட்டவை: காஃப் ஸிரப் – இருமலுக்கு முற்றிலும் இதமானது மற்றும் பெயின் பாம் – இயற்கையான இதமான வலிநிவாரணி.
டாக்டர் மாம் ஹெர்பல் குரோத் டானிக்
வளரும் குழந்தைக்கு ஒரு வரப்பிரசாதம்.

என் உள்ளத்தினுள் எரிமலை குமுறிக் கொண்டிருந்தது. இன்று அவனை உண்டு, இல்லை என்று பார்த்துவிட வேண்டும்....!

அறுபதாயிரம் ரூபாய் என்பது சாதாரணமா? அதுவும் ஓய்வை எதிர்நோக்கிக் காத்திருக்கும் என்னைப் போன்ற அரசாங்க குமாஸ்தா வர்க்கத்துக்கு.

இப்படி களையாய் எண்ணிக் கொடுத்து விட்டு நிற்கிறேனே! அவன் இப்படி ஏமாற்றுவான் என யார் கண்டது?

பாழும் ஆசை! பணத்தாசை! அதனால் வந்த வினை. நான் உண்டு, ஆபீஸ் உண்டு,



வீடு உண்டு என்று இருந்தவனை, நான்கு மாதம் முன்பு வந்து குறுக்கிட்டது விதி அவன் ரூபத்தில்.

டெண்டர் ஃபைலுக்காக அலைந்து கொண்டிருந்தவனின் கண்ணில் பட்டுவிட்டேன்.

ராஸ்கல்! என்னமாய் பேசினான் தேனொழுக! எவ்வளவு சீக்கிரம் ஒட்டிக் கொண்டு உறவாடினான்.!

''சிங்கப்பூருக்குப் பையனை அனுப்புங்களேன் சார். உங்க நலம்விரும்பிங்ற முறையில் சொல்றேன். மூன்று வருடமோ, அஞ்சு வருடமோ பையன் அங்கே வேலை பார்க்கட்டும்'' என்றான் ஒரு நாள்.

பணம் என்னும் பிசாசு அவன் வாய் வழியே என் காதுக்குள் புகுந்தது.

''பையன் இங்கேயே நல்ல வேலையிலே சேர்ந்துடுவான் போலிருக்கு. அடுத்த மாசம் ஆர்டர் வந்துடும்.''

''என்ன சார் பிச்சாத்து வேலை. மாசம் மூவாயிரம் கிடைக்குமா இங்கே?''

மூவாயிரத்தை அவன் அலட்சியமாய் உச்சரித்த விதத்தில் மயங்கிப் போனேன்.

''சிங்கப்பூரில் மாசம் முப்பதாயிரம் ரூபாய்க்கு வேலை ஏற்பாடு செய்யறேன்.''

தூண்டிலை வீசினான்.

மீனாய் நான் சிக்கிவிட்டேன்.

கலர் டீ.வி., ஃப்ரிட்ஜ், வி.சி.ஆர், ஏர் கூலர், டி.நகரில் வீடு என்ற ஆசைக் கோட்டைகள் என்னுள் எழ ஆரம்பித்தன.

அவனை இன்று ஒரு கை பார்த்தே ஆக வேண்டும்.

''கையாலாகாத மனுஷன் நீங்க'' என்று தாலி கட்டிய மனைவியே இடித்துக் காண்பித்து விட்டாள். அவளுக்காகவாவது என் ஆண்மையை நிரூபித்து ஆக வேண்டும்.

அவன் சட்டையைக் கோத்துப் பிடித்து மூஞ்சியில் அறைய வேண்டும்.

''அறுபதாயிரம் ரூபாய் கொடுத்தால் போதும் சார். மத்தவங்களுக்கு அறுபத்தஞ்சு. என் கமிஷன் ஐயாயிரத்தை உங்களுக்காகக் குறைச்சுக்கிட்டேன் சார்.''

''ஆஹா! என்ன அருமையான நண்பன்'' என்று பூரித்துப் போனேன்.

''அறுபதாயிரத்துக்கு எங்கே போவேன்?'' என்றேன் தயக்கமாய்.

''இப்படி யோசிச்சா எப்படி சார். பையன் ஆறே மாசத்துல உங்க வாழ்க்கையையே மாத்திடுவான். பணத்தாலேயே அடிப்பான் பாருங்க.''

உண்மைதான். பணத்தை வாங்கிக் கொண்டு இவன் என் மனத்தில் அடித்து விட்டான். வாழ்க்கை முறையே மாறித்தான் போய்விட்டது.

ஏதோ நூறு, இருநூறு கைமாற்றுக் கடனுடன் யோக்கியமாய் வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தவனை, பிச்சைக்காரனாக்கி விட்டான், துரோகி!

ஆபீஸ் லோன் இருபது ஆயிரத்துக்கு மேல் கிடைக்காமல், உறவினர், நண்பர்களிடம் கெஞ்சி, துண்டு விரித்து மேலும் இருபது சேர்த்து விட்டேன். மீதி இருபதை மூன்று வட்டிக்கு பைனான்ஸ் கம்பெனி ஒன்றில் புரோநோட்டில் கையெழுத்துப் போட்டுச் சமாளித்தேன்.

பையன்தான் சிங்கப்பூர் சீமானாகப் போகிறானே. ஆயிரமாயிரமாய்க் குவியப் போகிறதே. தயக்கமின்றி வாங்கினேன்.

ஆனால் இப்போது?

பைனான்சில் வட்டி மட்டும் கட்டவே மூழி பிதுங்குகிறது. கடன் கொடுத்த நட்பும், சுற்றமும் நான் ஏமாந்தது தெரிந்தவுடன் நெருக்குகிறது - பணத்தைத் திரும்பி வாங்க.

இது போதாதென்று 'ஏமாந்த சோணகிரி' என்ற அக்கம்பக்கத்தவர் கேலிப் பார்வை வேறு.

இதற்கெல்லாம் காரணம் அந்த சாத்தானின் மகன் தானே!



பாவம் என் மகன்! மதிப் பெல்லாம் இழந்து நிராயுத பாணியாய் அவனை ஆக்கிவிட் டானே அந்த சதிகார சத்ரு.

'வொர்க் பர்மிட்' இருந்தால்தான் சிங் கப்பூரில் வேலை செய்ய முடியுமாம். டிராவ லர்ஸ் விசாவில் வேண்டுமென்றே என் மகனை விமானம் ஏற்றி அனுப்பிவிட்டான். யாருக்குத் தெரியும் இதெல்லாம்?

சிங்கப்பூர் ஏஜண்ட் எல்லாம் செய்து தருவான் என்று பச்சையாய்ப் புளுகியிருக் கிறான். ஆனால் அங்கு கைவிரித்து விட் டார்கள்.

நல்லவேளை போலீஸ் கையில் சிக்கி ஜெயிலில் அடைபட்டு, அவதிப்படாமல் திரும்பினானே, என் பையன்!

சுத்தியால் அவன் நெஞ்சில் குத்த வேண்டும் போல ஆத்திரம் பீறிட்டது. இன்று அவனைச் சும்மா விடப்போவ தில்லை! என்னை என்ன ஏமாளி என்றா நினைத்திருக்கிறான், படவாப் பயல்!?

என் மகன் திரும்பியதும் போய்க் கேட்டதற்கு ஏதோ சால்ஜாப்பு சொல்லி விட்டான். சிங்கப்பூர் அரசாங்கம் விதி களைத் திடீரென மாற்றி விட்டதாக ஜோடித் தான் கதையை.

ஆனால் இவன் பிழைப்பே இதுதான் என்று விசாரித்தபோது தெரிந்தது. இப் போது இதைச் சொல்பவர்கள் முன்பே சொல்லித் தொலைத் திருக்க லாம். அப்போதெல் லாம் கொழுக்கட்டையையா வாயில் அடக்கி வைத்திருந்தார்கள். எல் லாம் கலி காலம்! யார் கஷ்டப்பட்டால் நமக்கென்ன என்ற விகார புத்தி! ப்ச!

இதோ அவன் வீடு வந்து விட்டது. ஊரான் காசைக் கொள்ளையடித்த பணத் தில் பளபளத்தது வீடு. கடப்பாரையால் நாலு போடு போட வேண்டும் போலிருந் தது.

உள்ளே சென்றேன்.

''என்ன சார்? அங்கேயே நின்னுட் டீங்க? உள்ளே வாங்க'' என்று அழைத்தான் அவன்.

அவன் முகத்தைப் பார்த்ததும் ரௌத் ரம் தலைதூக்கியது.

''பணம் விஷயமாய்த்தான்'' என்று அதட்டலாய் ஆரம்பித்தேன்.

''உங்களை நம்பித்தான் இவ்வளவு செலவழிக்க அனுப்பினேன் பையனை. இப் படி ஏமாத்திட்டீங்களே. சுற்றிவர கடன் கொடுத்தவர்கள் மென்னியை முறிக்காத குறை. தயவு செஞ்சு பாதிப் பணமாவது திருப்பிக் கொடுத்தீங்கன்னா....''

- என்னையறியாமல் என் குரலில் கடுமை குறைந்து, தழுதழுத்து, அழுகை யாய்ப் பீறிட்டது.



* லேயில் புத்த விஹாரம்



இந்திய விமானப் படையின் விமானம் ஒன்று அந்த ஊரில் முதன் முதலில் சென்றிறங்கிய போது உள்ளூர்வாசிகள் கட்டுக் கட்டாகப் புல்லை எடுத்துக் கொண்டு வந்தார்கள் - விமானத்தை 'ஒரு பிரும்மாண்டமான காளை மாடு போலும்' என்று எண்ணி அதற்குத் தீவனமாகத்தான் புல் கொண்டு வந்தார்கள் அந்த



இமயத் தொடரில் ஒரு கனவுப் பிரதேசம்



* குழந்தையுடன் லடாக்கி பெண்



* பிரார்த்தனை சக்கரம் சுழற்றும் இளைஞன்

எளிய மக்கள்! இது நடந்தது லடாக்கின் தலைநகரான லே(Leh)வில் - 1948 ஆம் ஆண்டில். இன்னும் சமீபத்தில் - 1980இல் - ஒரு ஜெனரேடரைக் கொண்டு மின் விளக்குகளை எரியச் செய்த போது, தலாய் லாமாவிடமிருந்தே அந்த ஒளி புறப்பட்டு வருவதாக நம்பினார்கள் லடாக்கி மக்கள்!

- இப்படி நாகரிக வளர்ச்சியின் நிழல் கூட படாமல், இமய மலையின் மடியில் புதைந்து கிடந்த லடாக், கடந்த சில ஆண்டுகளாகத்தான் ஒரு சுற்றுலா தலமாகப் பிரபலமாகி வருகிறது. 'பக்கா'வான விமான தளம் கூட இன்றிச் சேறும் சகதியுமான மண் தளத்தில் விரிப்புகளைப் பரப்பி விமானப் படையின் விமானங்களைத் தரை இறங்கச் செய்த காலம் மாறி விட்டது. உறுதியான இறங்கு தளத்தில் இந்தியன் ஏர்லைன்ஸ் விமானங்கள் 'ஜிவ்'வென்று வந்து இறங்குகின்றன.

லடாக்கி மக்களும் தோற்றத்தில் மாறி விட்டார்கள். பாரம்பரிய உடை அணிந்து வளைய வருவோரிடையே 'லீவை' ஜீன்ஸ் அணிந்த இளைஞர்களையும் காண முடிகிறது.

எனினும், லடாக்கின் முரட்டு கம்பீர அழகும் அதன் மக்களின் இதமான பழகும் பண்பும் இன்னமும்

அப்படியேதான் இருக்கின்றன - பல்லைக் கிட்டச் செய்யும் குளிரும் கூட மாறாமலேதான் இருக்கிறது! (மைனஸ் 6.5 டிகிரி செல்ஷியஸ்!).

லடாக்கி மக்கள் இன்னமும் வாரத்துக்கு இரு முறைதான் குளிக்கிறார்கள் - ஆனால் அவ்வழக்கம் 'மருத்துவர் அறிவுரைப்படி' ஏற்பட்டதாக விளக்கம் தரக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்!

குளிர் காலத்தில் உள்ளூர்வாசிகள் கூட வீட்டை விட்டு வெளியே வருவதில்லை. கணப்புகளைச் சுற்றி வாழ்க்கை வட்டமிடுகிறது. பருவநிலை கருணை காட்டும் காலத்தில் குளிர் காலத்துக்கும் சேர்த்து, கடுமையாய் உழைத்து உணவும் பொருளும் சேர்த்து வைக்கிறார்கள்.

சுற்றுலா பயணிகளான நமக்கோ லடாக்கி கோடையின் பகல் பொழுதுகளில் கூட குறைந்தபட்சம் இரட்டை சாக்ஸும் ஷூஸும் தேவைப்படுகின்றன. கடல் மட்டத்திலிருந்து 13,000 அடி உயரத்தில் இருப்பதால் வழக்கமான சுறுசுறுப்புடன் வளைய வந்தால் நமக்கு மூச்சிரைக்கிறது! எனினும் 'நிலவு தேசம்' என்று பிரியத்துடன் அழைக்கப்படும் லடாக்கின் அற்புத அழகு இந்த சிரமங்களை மறக்கடிக்கிறது : மலை முகடுகளில் அங்கங்கே பாறைகளுக்கிடையே துருத்திக் கொண்டு நிற்பது போல் கட்டப்பட்டுள்ள புத்த விஹாரங்கள், அவற்றின் வண்ணமிகு பிரார்த்தனைச் சக்கரங்கள் (படம்), லே நகரின் ஒற்றைக் கடைவீதியில் விற்கப்படும் தாயத்துகள், அங்குள்ள உணவகங்கள் பரிமாறும் ஷோல்ஜா தேனீர்...

இந்தத் தேனீர், 'யாக்' என்ற காட்டெருமையொத்த விலங்கின் பாலிலிருந்து பெறும் வெண்ணெய்யைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது. மோ மோ... இது ஒரு வகை மாமிச இட்லி! மிளகாய் சாஸுடன் இதைத் தருகிறார்கள்.

'கொம்பா' என்று லடாக்கிகள் அழைக்கும் புத்த வழிபாட்டு தலங்களுள் முக்கியமானது ஹெமிஸ் கொம்பா. ஜொராவர் சிங் என்பவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தப் பகுதியில் தாக்குதல் நடத்திய போது மலைகளின் மறைவில் இருந்த ஹெமிஸ் கொம்பா தப்பி விட்டது.


போதிசத்துவரான பத்மசம்பவரின் பிறந்த தினத்தையொட்டி பத்து நாள் விழா கொண்டாடப்படுகிறது. இந்த விழாக் காலத்தில் பாரம்பரிய உடைகளுடன் ஆண்கள் தொப்பிகளும் பெண்கள் நீலநிறக் கற்கள் பதித்த கிரீடம் போன்ற தலைப் பாகைகளும் அணிகிறார்கள். பல நாட்கள் நடையாய் நடந்து மலையேறி ஹெமிஸ் கொம்பாவில் பிரார்த்தனை செய்கிறார்கள்.

லடாக்கி மக்களில் பாதி பேர் 'லாமா'க்கள்தானோ என்று வியக்கும் அளவுக்கு அந்த பௌத்த சன்னியாசிகளின் நடமாட்டம் மிக அதிகமாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு லடாக்கி குடும்பத்திலும் ஒரு மகன் தலை மழித்து அங்கி அணிந்து கொண்டு இறைப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறான். லடாக்கின் ஜீவ நாடியே அதன் புத்த விஹாரங்களில்தான் உள்ளதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஆன்மிகப் பண்புகள் ஒரு பக்கம் இருக்க, இந்த மலைப் பகுதியிலுள்ள பாறைகளிலிருந்து கடும் வெயில் காலத்தில் கசியும் ஒரு 'பேஸ்ட்' போன்ற திரவம் 'வாலிப வயோதிக அன்பர்களின் குறை தீர்க்க வல்லது...' போன்ற நம்பிக்கைகளும் இன்னொரு பக்கம் நிலவுகின்றன. இதை நிரூபிக்க ஒரு மாஸ்கோ பேராசிரியர் ஆராய்ச்சி கூட செய்திருக்கிறாராம்!

லடாக்கி மக்களின் நம்பிக்கைகளை நாம் ஏற்காமல் போகலாம்... ஆனால் ஹெமிஸ் கொம்பாவில் நின்றபடி சுற்றிலும் விரியும் அழகுக் காட்சிகளைத் திணறத் திணறத் துய்க்கும் போது 'ஆகா! இது உலகத்து அழகுகளுள் உச்சம் அல்லவா!' என்ற நம்பிக்கை நிச்சயம் ஏற்படும்!

- ரன்பீர் சிங்
நியூஸ்மென் ஃபீச்சர்ஸ்



- கே. சம்பத்குமார்



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதரவர்களால், 1542-ல் ஸ்தாபிக்கப்பட்டு, தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை ஸமிதியானது தாய் போல் இரங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 90 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஓர் நாள் உணவளிக்க, உணவு வகைகளை அனுசரித்து சுமார், முறையே ரூ. 300/- அல்லது 500/- ஆகிறது. இந்தத் தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 3000/- அல்லது 5000/- மூலதனம் ஏற்படுத்தியோ, அவ்வப்போது தொகை அனுப்பியோ, ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்குகொள்ளக் கோருகிறோம். நன்கொடை அனுப்ப வேண்டிய பொருளும் முகவரியும் :

அத்வைத வித்யாசார்யா மஹாராஜா ஸாஹேப் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் - 612 001.

செக் (or) டிராப்ட் முதலியவைகளை A.V.M.S.G.D.P.S. ஸமிதி என்ற பெயருக்கு அனுப்பலாம்.

*****இந்த நன்கொடைக்கு 80-G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு*****

வேத வைதிக நூல்கள் (விலை தபால் செலவு உட்பட)

I
1. ரிக்வேத ஸம்ஹிதா - நாகராக்ஷரம் - 10 மண்டலங்கள் - ரூ. 265/-
2. யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதா - 7 காண்டங்கள் - விலை ரூ. 165/-
3. ஸாமவேத ஸம்ஹிதா - கிரந்தாக்ஷரம் - 2 பாகங்கள்
(முதல் பாகம் - ரூ. 185/-, இரண்டாம் பாகம் - ரூ. 210/-)
4. ஸாமவேத அஷ்டப்ராம்மணம் - நாகராக்ஷரம் - 3 பாகங்கள்
(முதல் பாகம் - ரூ. 210/- இரண்டாம் பாகம் - ரூ. 110/- மூன்றாம் பாகம் - ரூ. 85/-)
5. ஸாமவேத பூர்வாபர ப்ரயோகம் - கிரந்தாக்ஷரம் - ரூ. 80/-
6. சாந்தி குஸுமாகரம் (2 பாகங்கள்) - விலை ரூ. 170/-
(1 ம் பாகம் ரூ. 85/- 2 ம் பாகம் ரூ. 85) (கிரந்தாக்ஷரம்)

II கிரந்தாக்ஷரத்தில் காரிகையுடன் பிரம்மஸ்ரீ முத்துச்ரௌதிகளால் பதிப்பிக்கப்பட்ட கிரந்தங்களின் மறுபதிப்புகள்
1. போதாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 95/-
2. ஆபஸ்தம்ப பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 90/-
3. ஆபஸ்தம்ப ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 55/-
4. ஆச்வலாயன பூர்வாபர ப்ரயோகம் - ரூ. 85/-
5. ஆச்வலாயன ச்ராத்த ப்ரயோகம் - ரூ. 50/-
6. கல்ப சிந்தாமணி - ரூ. 55/-

III நாகராக்ஷரம்
1. மனாசேச்லோக - ராமமந்த்ராசே ச்லோக - ரூ. 25/- (மராத்தி மூலம் தமிழ் பதவுரை)
2. ஸ்ரீ ராதாக்ருஷ்ண பூஜாவிதானம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் - தமிழ் பதவுரை)
3. நயோதத்தம் - நைஷதகாவ்யத்தின் சுருக்கம் - ரூ. 25/- (ஸம்ஸ்க்ருத மூலம் - ஆங்கில பதவுரை)
4. வடமொழிச் சொற்கடல் - ஸம்ஸ்க்ருதம் தமிழ் Dictionary 2 முதல் 8 தரங்கங்கள் வரை. முதல் தரங்கம் நீங்கலாக - ரூ. 70/-)
5. வேதபாட வழிமுறை (syllabus) ரிக், யஜுர், ஸாம - ரூ. 25/-
6. ரகோத்தந்த்ரம் - நாகராக்ஷரம் - விலை ரூ. 25/-

V.P.P. யில் அனுப்புவதில்லை. முழுத் தொகையையும் M.O. (or) Draft மூலம் கீழே குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும். செக் மூலம் அனுப்ப வேண்டாம். "எமது நூல்கள் பற்றிய விவரமான கேட்லாக் வாங்க விரும்புவோர் ரூ. 3/- தபால்தலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்."

பிரஸிடெண்ட் - டிரஷரர் - A.V.M.S.G.D.P.S. ஸமிதி, D-76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம் - 612 001.

நேரில் வாங்க விரும்புவோர் கண்டிப்பாக - ராஜா வேதகாவ்ய பாடசாலை, யாகசாலை தெரு, (சக்கரை படித்துறை அருகில்) கும்பகோணம் - 612 001 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளவும்.

படிப் பாதை

13

செங்கல்பட்டிலிருந்து திரும்பும் வழியில் நித்யா பேசிக் கொண்டே வந்தாள். பிரசன்னா மௌனமாகக் காரை ஓட்டி வந்தான்.

பிரபல மருந்துக் கம்பெனியின் வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. கடந்த ஒரு வாரமாக மேல்தளம் கட்டும் வேலையில் ஆழ்ந்து போயிருந்தாள். பிரசன்னாவுக்கு இந்தத் தொழிற்சாலையைக் காண்பிக்க அவள் மிகவும் விருப்பம் கொண்டிருந்தாள். அவனுக்கு அன்று வேலை அதிகமில்லாததால் மாலை மூன்று மணிக்குக் காருடன் அவளுடைய அலுவலகத்துக்குச் சென்று அவளுடன் தொழிற்சாலையைப் பார்க்கப் புறப்பட்டிருந்தான்.

தொழிற்சாலை வளரும் வேகம் அவனுக்குப் பிரமிப்பூட்டியது ஆழ்ந்த அறிவும், ரசனையும் கட்டடத்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் தெரிந்தன.

ஆறு மணிக்கெல்லாம் இருட்டத் தொடங்கி விட்டிருந்தது. மதுராந்தகத்தை அடைய சிறிது தூரமே இருந்த நிலையில் கார் நின்று விட்டது. என்ன முயன்றும் அதைக் கிளப்ப முடியவில்லை.

''இப்போ என்ன பண்ண, நித்யா? பஸ்ஸைப் பிடிச்சுண்டு போகலாமா?''

''சரி பிரசன்னா.''

காரைப் பூட்டி விட்டு இருவருமாக நடந்தார்கள். ''நான் நாளைக்குக் காலம்பற வந்து சரிபார்த்துக்கறேன். கிடைச்ச பஸ்ஸில ஏறிப் போயிடலாம்.''

சாலையில் ஒரு வண்டியும் தென்படவில்லை. மதுராந்தகத்தை அடைந்த போது ஜனங்கள் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். பஸ் ஸ்டிரைக்!

இருவரும் டாக்ஸியோ, ஆட்டோவோ கிடைக்குமா என்று பார்த்தார்கள். ஒன்றும் கிடைக்கவில்லை. மூடிக் கிடந்த வானம் இப்போது குமுறி, நீர்த்துளிகளைப் பொழிந்தது.

''இப்போ என்ன பண்ண, பிரசன்னா?''

''இங்கே ஏதாவது நல்ல ஓட்டலில் தங்கி, காலையில் புறப்பட்டுப் போயிடலாம்.''

இருவரும் நனைந்து கொண்டே நடந்தார்கள். புதிதாகக் கட்டியிருந்த ஓட்டல் ஒன்றில் இரண்டு அறைகள் கிடைத்தன. ரிஸப்ஷனில் இருந்த சிறிய கடையில் பற்பசையும் பிரஷ்ஷும் வாங்கிக் கொண்டார்கள். பிறகு டிஃபன் சாப்பிட்டு விட்டு, அறைக்குச் சென்றார்கள்.

மேலே ஏறிச் சென்ற இவர்களை விஷமமாகப் பார்த்துக் கொண்டு நின்ற ராமனை இவர்கள் கவனிக்கவில்லை. ராமன் சில நிமிடங்கள் அங்கேயே நின்று விட்டு, வெளியே வந்து காரில் ஏறிக் கொண்டு திருச்சியை நோக்கிப் பறந்தான்.

இரண்டு மூன்று நாட்கள் விடாமல் மழை பெய்தது. வேலை ஒன்றும் நடக்கவில்லை.

இரண்டு பெரிய தொழிலதிபர்கள் தங்களுக்கு நவீன பாணியில் வீடு கட்டித் தருமாறு அவளைக் கேட்டிருந்ததால் நித்யா சசியின் உதவியுடன் அந்த வீடுகளின் வரைபடங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தாள்.

ஜகன்னாதன் பதற்றத்துடன் உள்ளே நுழைந்தார்.

''நித்யா - அந்த செங்கல்பட்டு பில்டிங் - ரூஃபிங் இடிஞ்சு விழுந்துடுத்தாம்!''

''என்ன?'' நித்யா அதிர்ச்சியுடன் எழுந்து நின்றாள்.

''இருக்காது... இருக்காது...''

''அம்மா - தாயீ - நான் சொல்றது நிஜம். யாருக்கும் அடிகிடி இல்லை. ஆனா நம்ம கம்பெனிக்கு...'' அவர் குரல் நடுங்கியது. ''பெருமாளே... பெருமாளே! நீதான் காப்பாத்தணும்...''

''இது என்ன மாமா? இந்த மூணு வருட சர்வீஸ்ல இந்த மாதிரி ஆனதே கிடையாதே, மாமா. எங்கேயும் 'ஃபால்ட்' இல்லையே மாமா...''

விளைவுகள் பயங்கரமாக இருந்தன.

நித்யா விபத்து நடந்த இடத்துக்குப் போன போது அங்கு குழுமியிருந்த அரசு அதிகாரிகள் அவளைக் குடைந்து எடுத்து விட்டார்கள்.

சிமெண்டைச் சரியாகக் கலக்காமல் கட்டடம் கட்ட முயன்றதாக அவள் மீது மேலெழுந்தவாரியாகக் குற்றம்சாட்டப்பட்டது. விசாரணைகள் முடியும் வரையில் கட்டட வேலைகள் நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்று அரசுக் குழு கட்டளை பிறப்பித்தது.

இந்த நேரத்தில் பிரசன்னா மட்டும் அவளுக்குப் போதிய தைரியத்தை அளித்

ஆபஸ்தம்பன்

திருக்காவிடில் அவள் உடைந்தே போயிருப்பாள்.

''எங்கோ - ஏதோ சூது நடந்திருக்கு நித்யா. உனக்கு சிமெண்ட் சப்ளை பண்ற ஆளு யாரு?'' - பிரசன்னா கேட்டான்.

''சொக்கலிங்கம்னு தம்புச்செட்டி ஸ்டிரீட்டுல இருக்கார் பிரசன்னா. ரொம்பவும் நல்ல மனுஷன். மூணு வருஷமா ஸ்டாக் அவர்கிட்டத்தான் வாங்கறேன். அங்கே ஏதும் நடந்திருக்காது.''

''புதுசா யாரையாவது வேலைக்கு - ஆட்களை - ரெக்ரூட் பண்ணினியா?''

''இல்லை பிரசன்னா.''

அவள் உட்கார்ந்திருந்த நிலை, அந்த முகத்தில் தெரிந்த சோகம் வாடிப் போயிருந்த உடல் - அவளை நெஞ்சோடு அணைத்துக் கொண்டு ஆறுதல் கூற வேண்டும் என்று மனம் துடித்தது. கையை நீட்டி அவள் கரத்தைப் பற்றி அழுத்துகையில் அழைப்பு மணி ஒலித்தது.

நித்யா எழுந்து போய்க் கதவைத் திறந்தாள்.

ராதா நின்று கொண்டிருந்தாள்.

நித்யா ஆச்சரியத்துடன் அவளைப் பார்த்தாள்.

''வா ராதா. பிரசன்னா - இது ராதா, ராமனோட வைஃப். ராதா - மீட் மிஸ்டர் பிரசன்னா - என்னோட ஃபிரெண்ட், ஃபிலாஸஃபர், கைடு - எல்லாமே.''

ராதா உட்கார்ந்தாள்.



அவள் முகத்தில் ஜீவகளையே தெரியவில்லை.

''காப்பி குடிக்கறியா ராதா?''

ஒன்றும் வேண்டாம் என்பது போல் தலையசைத்த ராதா, இனிமேலும் தாள முடியாது என்பது போல் கைகளால் முகத்தை மூடிக் கொண்டு விசித்து அழலானாள்.

பிரசன்னா குழப்பத்துடன் நித்யாவைப் பார்த்தான். நித்யா எழுந்து சென்று அவள் தோள்களை ஆதரவுடன் பற்றி அணைத்துக் கொண்டாள்.

''என்ன விஷயம் ராதா? எதுக்கு அழறே? ராமனுக்கும் உனக்கும் ஏதாவது மனஸ்தாபமா?''

இந்தப் பரிவின் கனிவில் நெகிழ்ந்து போன ராதா போலியான புன்னகையுடன் கூறினாள் -

''மனஸ்தாபமா? மனங்கள் இரண்டும் இணையவே இல்லையே அக்கா! அப்புறம் எங்கேருந்து மனஸ்தாபம் வரும்?''

நித்யா அதிர்ந்து போனாள்.

''ராதா - என்னம்மா பேசறே? நீயும் ராமனும் ஒருத்தரை ஒருத்தர் விரும்பிச் செஞ்சுண்ட கல்யாணம்தானே இது!''

''அக்கா - ஒரு தாற்காலிக மயக்கத்தை அன்புன்னு நெனைச்சு ஏமாந்து போயிட்டேன். அக்கா - நான் இப்போ பேச வந்தது என்னோட பிரச்னைப் பற்றியில்லை. ஒங்க தொழிற்சாலை பற்றி முக்கியமான தகவல் தெரிவிக்கத்தான் வந்தேன்.''

''நீ என்ன சொல்றே ராதா?''

''சொக்கலிங்கத்துக்குப் பணம் கொடுத்து, அவரோட மனச்சாட்சியை விலைக்கு வாங்கி, சிமெண்டுல கலப்படம் பண்ணச் சொன்னது ராமும், விசுவமும் தான். இருபது நாள் முன்னால சொக்கலிங்கம் வீட்டுக்கு வந்திருந்தார். உங்க தம்பி பணம் குடுத்ததை நான் கண்ணால பார்த்தேன். ஆனா - விஷயம் இதுன்னு எனக்குச் சத்தியமாத் தெரியலை. தெரிஞ்சிருந்தா... கடவுளே! ஒரு சின்ன யூகம் இருந்திருந்தால் கூட உங்ககிட்டே வந்து சொல்லியிருப்பேனே...''

நித்யா கல்லாக நின்றாள்.

பிரசன்னாவின் மனம் ஆத்திரம் தாங்காமல் துடித்தது. ராதாவைப் பார்த்துக் கேட்டான்.

''உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமா?''

''தெரியும்.''

இதற்குள் தன் நிலைக்கு வந்த நித்யா கேட்டாள் - ''ராதா... இதையெல்லாம் ஏன் இங்கே வந்து சொல்றே? யூ நோ, யூ ஆர் இன்க்ரிமினேட்டிங் யுவர் ஹஸ்பண்ட்...?''

ராதா ஜீவனில்லாமல் சிரித்தாள் -

''அக்கா - அவர் ஒரு பண்பாளர், லட்சியவாதி, திறமையானவர், நேர்மையானவர் என்றெல்லாம் நம்பி அவர்கிட்டே என் மனசைப் பறிகொடுத்தேன். ஆனா... வேஷம் கலைஞ்சு போயிடுத்து! பணத்துக்காக மனச்சாட்சியைக் கழற்றி வைக்கிறவர் மேல அன்பு செலுத்த முடியுமா? மனசுக்கு அருவருப்பா இருக்கு. அவரைத் திருத்த முடியலை. பிளட் கேன்ஸர் போல உடம்பு முழுக்க நீசத்தனம் பரவிண்டிருக்கு. என் மனசுலேருந்து என்னைக்கோ அவர் சரிஞ்சு விழுந்தாச்சு. ஓ காட்! அட் டைம்ஸ் ஐ திங்க் ஐ ஹேட் ஹிம்! நான் உங்களுக்கு உதவ முடியுமான்னு கேட்க வந்திருக்கேன்.''

பிரசன்னா பிரமிப்புடன் அவளைப் பார்த்தான்.

''மேடம் - நாளைக்கு என்கொயரியில நித்யாவுக்காக நீங்க சாட்சி சொல்ல முடியுமா?''

''பிரசன்னா!'' நித்யா தவிப்புடன் கூவினாள்.

''பிரசன்னா - என்ன இருந்தாலும் அவ ராமனோட மனைவி. அவனுக்கெதிராக அவளைச் சாட்சி சொல்ல...''

''முடியும்... நிச்சயமாகச் சொல்லுவேன்'' என்று அழுத்தமாகக் கூறினாள் ராதா.

''மிஸ்டர் பிரசன்னா, நல்லவர்களுக்காக, நேர்மையானவர்களுக்காக நான் எதையும் செய்வேன்.''


''ராது'' நித்யாவின் குரல் பரிவுடன் ஒலித்தது.

''இது எங்க பிரச்னை மட்டுமில்லை, ராது. இது உன்னோட வாழ்க்கைப் பிரச்னையும் கூட.''

''அக்கா - என்னோட இந்த வாழ்க்கை இந்த அத்தியாயத்தோட முடிஞ்சு போயாச்சு. முடியும்னா, எங்கேயாவது எனக்கு ஒரு வேலை வாங்கிக் கொடுங்க. நான் தனியாக இருக்க விரும்பறேன்.''

(தொடரும்)


23 - ஆம் பக்க விடை :



ஒரே ஒரு தீக்குச்சியை நகர்த்தினால் போதும்!

நன்றி : நியூஸ்வீக்


B.நாகிரெட்டி
சந்தமாமா விஜயா
கம்பைன்ஸ்
ரஜினிகாந்த்
உழைப்பாளி
இளையராஜா
M.C.சேகர்
P.வாசு
B.வெங்கட்ராமரெட்டி



எல்லாம் நன்மைக்கே!

"புரொபஸர் வேதா...?" தயங்கிக் கேட்டார்.

"நான்தான்..... உள்ளே வாங்க...."

"உங்க காலேஜிலே தேர்ட் இயர் படிக்கிறானே விஜய்.... அவனோட ஃபாதர் நான். அவசர காரியம். விஜய் விஷம் சாப்பிட்டுட்டான். பக்கத்திலே இருக்கிற மூர்த்தி கிளினிக்கிலே அட்மிட் பண்ணியிருக்கோம்."

"விஷமா?..." வேதா அதிர்ந்து விட்டாள்.

"ஆமாம் நீங்க கொஞ்சம் உடனே ஆஸ்பத்திரி வரைக்கும் வரணும். ஏதோ ஆர்சீனியஸ் ஆசிட் சாப்பிட்டேன்னு சொல்றான். டாக்டருக்கே என்ன மாற்று மருந்து தருவதுன்னு தெரியாம குழம்பியிருக்கார். அதான் ஓடி வந்தேன்... வெளியே ஆட்டோ நிக்குது..."

"ஆர்சீனியஸ்!.... மைகுட்நெஸ்... அப்பா... நான் போயிட்டு வந்துடறேம்ப்பா..." கைப்பையுடன் அவள் புறப்பட்ட போது இரவு மணி ஒன்பது.

டாக்டர் ஏதோ ஒரு புத்தகத்தை அவசரமாக முன்னும் பின்னுமாகப் புரட்டிக் கொண்டிருந்தார்.

"இவங்கதான் புரொபஸர் வேதா...."

"வாங்க மேடம். உங்க காலேஜ் லேபிலே ஆர்சீனியஸ் ஆசிட் இருக்கா...?"

டாக்டரின் குரலிலும் பதற்றம்.

"ஆசிட் இல்லை. அது ஆர்சீனியஸ் ஆக்ஸைடு. லேபில் இருக்கு. டாக்டர்..."

"அதைத் தான் சாப்பிட்டதாச் சொல்றான்..."

"ஆர்சனிக் விஷத்துக்கு ஆன்ட்டிடோட் என்னன்னு பார்த்தீங்களா டாக்டர்?..."

"நானும் ஒரு மணி நேரமாத் தேடறேன். ஒண்ணும் பிடிபடலை. உங்களுக்குத் தெரிஞ்சுருக்குமேன்னு தான் வரச் சொன்னேன்."

'என்ன மாதிரி டாக்டர் இவர்?.... இவ்வளவு பொறுப்பில்லாமல்!...'

"வேறு எக்ஸ்பர்ட் டாக்டர் யாரையும் கன்சல்ட் பண்ணுங்களேன் டாக்டர்..."

"இந்த ஊரிலே வேற யாருக்குத் தெரியப் போகுது?... உங்களுக்குத் தெரிஞ்சிருந்தாத் தான் உண்டு...." - குரலில் அலட்சியம்.

ஆர்சனிக் விஷத்துக்கு மாற்று மருந்து என்ன?... வேதா யோசித்தாள். தெரியவில்லை. இது வரை தெரிந்து கொள்ள முயற்சித்ததும் இல்லை. அதற்கான தேவையும் ஏற்பட்டதில்லை. எத்தனையோ முறை வகுப்பில் ஆர்சனிக் விஷத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறாள். ஆனால் அதற்கு மாற்று என்ன என்று அதிகம் கவலைப்பட்டதில்லை. இன்று கவலைப்பட வேண்டியதாகி விட்டது.

"புத்தகங்களில் தேடிப் பார்த்துத்தான் சொல்ல முடியும் டாக்டர்."

"சீக்கிரம் செய்யுங்க..... பேஷண்டுக்கு பல்ஸ் டௌன் ஆகிட்டிருக்கு..."

மீண்டும் புறப்பட்டாள். வாசலில் நின்றிருந்த விஜய்யின் வகுப்புத் தோழன் பாஸ்கரன் ஓடி வந்து ஆட்டோவில் ஏறிக் கொண்டான்.

"என்ன பாஸ்கர் இது? ஏன் இப்படிப் பண்ணினான்?...."

"கல்பனாவோட அப்பா அவளை காலேஜிலே இருந்து நிறுத்திட்டாங்க. அவளுக்கு வேற இடத்திலே கல்யாணம்

ராஜ்கோகுல்

நிச்சயமும் பண்ணிட்டாங்க. அவனும் சம்மதிக்கட்டாளாம். அதனாலதான் இப்படி பண்ணியிருக்கான் மேடம்...'' - அவன் கவலையோடு சொன்னான்.

'**க**ல்பனா?...'

வேதாவுக்குச் சென்ற வருடம் நடந்த சம்பவம் நினைவுக்கு வந்தது. கல்பனா ஒரு நாள் ஒரு கடிதத்துடன் அவளிடம் முறையிட வந்த சம்பவம். அக்கடிதம் விஜய், கல்பனாவுக்கு எழுதிய காதல் கடிதம்!

''எங்கே போனாலும் என் பின்னாலேயே வருது மேடம் அந்த விஜய். நேத்திக்கு லேபிலே வாலுமெட்ரிக் பிராக்டிகல் செய்த போது இந்த லெட்டரை கொடுத்தது....'' - அச்சமும் கோபமும் கலந்த குரலில் சொன்னாள் கல்பனா.

''சரி, நீ போ. நான் அவனைக் கூப்பிட்டுக் கண்டிக்கிறேன்...''

பத்து பேர் பணி புரிந்த அவளது துறையில், அவள் மட்டுமே பெண் என்பதால் மாணவிகள் எந்தப் பிரச்னை ஆனாலும் அவளைத் தான் சந்திப்பார்கள். முறையிடுவார்கள். அப்படித்தான் கல்பனாவும் கம்ளெயின்ட் பண்ணினாள்.

விஜய் புத்திசாலி. படிப்பில் கெட்டிக்காரன். யாரிடத்திலும் கண்ணியக் குறைவாக நடந்து கொண்டதாக இதுவரை குற்றச்சாட்டு எதுவும் வந்ததில்லை.

வேதா அவனை வரவழைத்தாள். மதிய உணவு நேரமாதலால் மற்றவர் எவரும் இல்லை. அவளும் அவனும் மட்டுமே. கோபப்படாமல் சாந்தமாகப் பேசினாள்.

''இதெல்லாம் இப்போ வேண்டாம் விஜய். நல்லாப் படிச்சு நிறைய மார்க் வாங்குறதிலே கவனம் செலுத்து.''

''படிச்சிட்டுத்தானே இருக்கேன்.'' வேறு பக்கம் பார்த்துச் சொன்னான்.

''கவனம் சிதறாமப் படிச்சா இன்னும் நிறைய மார்க் வாங்கலாம்...''

''காதலிக்கிறது தப்புன்னு சொல்றீங்களா?''

அவள் லேசாக அதிர்ந்தாள். இப்படி நேரடியான ஒரு கேள்வியை அவன் கேட்பான் என்று எதிர்பார்க்கவில்லை.

''நான் அப்படிச் சொல்லலையே விஜய்?''

''நீங்களும், தங்கமணி சாரும் காதலிக்கலையா....? நாங்க மட்டும்....?''

வேதா மேலும் அதிர்ந்தாள். 'பூச்சி மாதிரி இருந்த இவனுக்கு எவ்வளவு தைரியம்?.... பெண்ணார்வம் ஒருத்தரை எவ்வளவு தைரியமாக்கி விடுகிறது...?'

கொஞ்ச நேரம் அமைதி. அவனும் தரையைப் பார்த்தபடி நின்றிருந்தான்.

வேதாவும் அதே துறையில் பணியாற்றிய தங்கமணியும் காதலித்ததும், கல்



யாணம் செய்து கொள்ள முடிவெடுத்திருந்ததும் அக்கல்லூரி முழுவதும் தெரிந்து போயிருந்த சிதம்பர ரகசியம்.

''நாங்க கல்யாணம் செய்துக்கிட்டா இந்தச் சமுதாயத்திலே தன்னிச்சையா வாழ முடியும். உன்னாலே முடியுமா?... முதலிலே உன் காலிலே நிற்கிற சக்தியைத் தேடு. அப்புறமா காதலிக்கலாம்....''

அவன் பதில் பேசத் தெரியாமல் நின்றான்.

''காதலிக்கிறது தப்புன்னு நான் சொல்லவே இல்லை. கொஞ்சம் காத்திருன்னு தான் சொல்றேன். இல்லே, ரொம்ப அவசரம்னா.... சேரி ஆன்... அதுக்கு முன்னாடி இன்னொன்றும் தெரிஞ்சுக்கோ. நீ மட்டும் விரும்பினாப் போதாது. அவளும் உன்னை விரும்பணும்....''

அவன் லேசாகத் தலையை ஆட்டி விட்டுப் போய் விட்டான்.

ஆனால் அடுத்த ஆறு மாதத்திற்குள்ளேயே விஜய்-கல்பனா ஜோடி ரொம்ப நெருக்கமாகி விட்ட விஷயம் அவள் காதுகளுக்கு எட்டத்தான் செய்தது. அவள் ஆச்சரியப்படவில்லை. அதைப் பற்றிக் கவலைப்படவும் இல்லை.

இப்போது கவலைப்பட வைத்து விட்டானே?....

''பாஸ்கர், உனக்கு டாக்டர் மூர்த்தி வீடு தெரியுமா?...''

''தெரியும் மேடம். சாந்தி தியேட்டர் பக்கத்திலேதானே?...''

''நீ உடனே அங்கே போய் நான் அனுப்பினதாச் சொல்லு. ஆர்சனிக் விஷத்துக்கு ஸ்பெஸிபிக் ஆண்டிடோட் என்னன்னு கேட்டு, தகவலை கிளினிக்கில் போய்ச் சொல்லு...''

ஆட்டோவை நிறுத்தி அவனை வழியில் இறக்கிவிட்டாள்.

பாஸ்கர் புறப்பட்டான்.

''பாஸ்கர்... அப்படியே உன் ஃப்ரெண்ட்ஸ் ரெண்டு பேரைவிட்டு எல்லா மெடிக்கல் ஷாப்பிலேயும் மாற்று மருந்து இருக்கான்னு விசாரிக்கச் சொல். நான் காலேஜ் போயிட்டு நேரே கிளினிக் வந்துடறேன்.''

கல்லூரி. வாட்ச்மானுடன் அந்த அறையை அடைந்தாள்.

அவசரத்தில் சாவி பூட்டின் துவாரத்தில் நுழைய மறுத்தது. கையை ஸ்திரப்படுத்தித் திறந்து உள்ளே போனாள். விளக்கைப் போட்டாள். வரும் போதே யோசித்து வைத்திருந்தாள். பூச்சிக் கொல்லிகள் என்ற புத்தகத்தைப் பற்றி. ஆர்சனிக் சேர்மங்கள் பூச்சிக் கொல்லிகளாகப் பயன்படுவதுண்டு.

புத்தக பீரோ அருகே வந்தாள். கண்ணாடி முகப்புடைய பீரோ. தேடினாள். அதோ... மூன்றாம் வரிசைக் கடைசியில் அந்தப் புத்தகம்....

ஆனால் பீரோ சாவி?.... அது துறைத் தலைவரிடம் தானே இருக்கிறது.... என்ன செய்வது?...

ஒரு டஸ்டர் கட்டையை எடுத்து, கண்ணாடியைத் தட்டினாள் - லேசாக. உடைய மறுத்தது. அடுத்த அடி சற்று பலமாக.

கண்ணாடி நீள நீள துண்டுகளாக உடைந்து சரிந்து சிதறியது. அதில் ஒரு துண்டு அவளது மணிக்கட்டில் பட்டு உடனேயே ரத்தத் துளிகள் எட்டிப் பார்த்தன. கையை விட்டு அந்தப் புத்தகத்தை எடுத்தாள்.

இன்டெக்ஸ் பார்த்தாள். அவசரமாகப் புரட்டினாள். பக்கம் 460. இதோ... இதோ... ஆர்சனிக்... விலங்குகளுக்கும், மனிதருக்கும் இது ஒரு நச்சு ஆகும்... ஆங்கில வாக்கியங்களை அவளது மூளை உடனுக்குடன் தமிழாக்கம் செய்தது.

'இதோ!... இதோ கிடைத்து விட்டது!....' கண்கள் விரிந்தன. 'இந் நச்சுக்கான ஸ்பெஸிபிக் ஆண்டிடோட் B.A.L. ஆகும். டைமெர்கேப்டா புரொப்பனால்...!

அவசரமாகப் பூட்டி விட்டுப் புறப்பட்டார்கள்.

அவள் மீண்டும் கிளினிக்கை அடைந்த அதே நொடியில் பாஸ்கரனும் சைக்கிளில் வந்து இறங்கினான்.

''மேடம், வெளியூர் போயிருந்த டாக்டர் இப்போதான் வந்தார். ஆண்டிடோட் பெயர் B.A.L. ஆம். ஆனா அந்த ஊசி மருந்து கிடைக்கிறது சிரமமாம். நாலைஞ்சு பசங்களை விட்டு எல்லா மெடிக்கல் ஷாப்பிலேயும் தேடச் சொல்லியிருக்கேன் மேடம்......''


''வெரி குட்! அதே மருந்துதான்....''

''தஞ்சாவூரிலே பங்காரு மெடிக்கல்ஸிலே கிடைக்கலாம்னு சொன்னார் மேடம்....''

பங்காரு மெடிக்கல்ஸ் என்றதும் அவளுக்குத் தங்கமணி நினைவு பளிச்சிட்டது. உள்ளே டாக்டர் நம்பிக்கையிழந்து காணப்பட்டார்.

''இது வழக்கமா நாங்க ஹேண்டில் பண்ற விஷயமில்லை. பெக்யூலியர் கேஸ். பல்ஸ் கௌண்ட் பண்ண முடியலே. சீக்கிரம் தஞ்சாவூருக்கோ திருச்சிக்கோ கொண்டு போகணும்...''

''இருங்க டாக்டர். ஆண்டிடோட் கிடைக்கும்னு நினைக்கிறேன். ஒரு எஸ்.டி.டி.. பண்ணிக்கட்டுமா?... ப்ளீஸ்...''



ஆண்டுதோறும் தமிழக அரசின் பாடப் புத்தக விலை பிரச்னைக்குரியதாகவே இருக்கிறது. புத்தகத்தில் போட்டிருக்கும் விலை ரூ. 4.50 என்றால் கடைக்காரர் ரூ. 6.00 கேட்கிறார். ஏன் இப்படி என்றால் ஒரு (Pricelist) தாளைக் காட்டு



டாக்டர் டேபிளில் இருந்த போனில் தஞ்சாவூருக்குச் சுழற்றினாள். காத்திருந்தாள்.

''ஹலோ... தங்கமணி சார் இருக்காரா? நான் புரொபஸர் வேதா...''

''இருக்கார்... தூங்கிட்டார். காலையிலே பேசுங்க...'' - போனில் பெண் குரல். தங்கமணியின் மனைவி! - வேதாவின் பெயரைக் கேட்டதும் எரிச்சல்பட்டிருக்க வேண்டும்.

''ரொம்ப அர்ஜண்ட்...... ப்ளீஸ்....'' - வேதா கெஞ்சினாள்.

அதற்குள் ரிசீவர் கைமாறும் ஓசை....

''ஹலோ... தங்கமணிதான். நீங்க யாருங்க?...''

''நான்..... நான் வேதா... ஒரு ஹெல்ப் வேணும்....''

''வேதாவா?... ஹௌ ஆர் யூ வேதா?... எப்படியிருக்கே?... என்ன இந்நேரத்திலே?...''

''இங்கே ஒரு பையன்... விஜய் தெரியுமில்லே?..... அவன்தான் ஆர்சினியஸ் ஆக்ஸைடைச் சாப்பிட்டுட்டான். அதுக்கு ஆண்டிடோட் வேணும்....''

''ஆர்சனிக்கா?... B.A.L. ன்னு ஒரு இன்ஜெக்ஷன்... 1, 3 டைமெர்கேப்டா புரொப்பனால்... ஆனா அது சாதாரணமாக் கிடைக்காதே....'' - பளிச்சென பதில் வந்தது தங்கமணியிடம் இருந்து!

எப்போதாவது பயன்படும் என்று எல்லாவற்றையும் படித்து வைப்பவன் அவன். வரும் காலத்தை எதிர்நோக்கிக் கணக்கிட்டுச் செயல்படும் அவனது குணம் தான் வேதாவை அவனை நோக்கி ஈர்த்த முதல் விசையாகும். அதே குணம்தான் அவளை விட்டு அவன் பிரிந்து விலகிப் போகவும் காரணமாக அமைந்து விட்டது!

''அது உங்க மாமனாரோட மெடிக்கல் ஷாப்பிலே இருக்குதுன்னு சொல்றாங்க. நீங்க கொஞ்சம்....''

''நான் உடனே போய்ப் பார்க்கிறேன். இருந்துதுன்னா காரிலே கொடுத்தனுப்புறேன்....''

''ரொம்ப அவசரம்...''

''மருந்து இருக்கணும். இருந்துட்டா அடுத்த முப்பதாவது நிமிஷத்திலேயே உனக்குக் கிடைக்கும்...''

''தேங்க்யூ சார்... பக்கத்திலே யார் உங்க மனைவியா?''

''ஆமாம்....'' என்ற போது அவனது குரல் தேய்ந்திருந்தது.

அடுத்த நாற்பதாவது நிமிடத்தில் மின்னல் வேகத்தில் வந்து நின்ற காரில் இருந்து இறங்கிய டிரைவரின் கையில் B.A.L. ஊசிப் பெட்டி!

''தங்கமணி சார் அனுப்பி வைச்சார் மேடம்....'' என்றான் வியர்வையைத் துடைத்தபடி.

காலையில் வேதா மீண்டும் கிளினிக்கிற்குப் போன போது ''விஜய் கொஞ்சம் தெளிவும் தெம்பும் பெற்றிருந்தான். அவளைப் பார்க்கவே கூச்சப்பட்டான். நரம்பு ஊசி மூலம் சலைன் டெக்ஸ்ட்ரோஸ் இறங்கிக் கொண்டிருந்தது.

''ஏன் அவசரப்பட்டு இப்படிப் பண்ணினே விஜய்?'' ஆதரவாகக் கேட்டாள்.

அவன் பதில் சொல்லவில்லை. பார்த்து விட்டுத் திரும்பிக் கொண்ட கண்கள் கலங்கின.

''நானும் தங்கமணி சாரும் விரும்பினது உனக்குத் தெரியுமில்லே?... ஆறு மாசத்துக்கு முன்னாடி அவர் வேறு ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்துக்கிட்டார். அதுவும் உனக்குத் தெரியும். அப்போ நான் விஷமெல்லாம் எதுவும் சாப்பிடலை தெரியுமா?... வாழ்க்கையிலே எது எது எப்படி நடக்குதோ அதை அப்படியே ஏத்துக்கிறது தானப்பா நல்லது.''

அவன் இமைக்காமல் அவளையே பார்த்தான்.

''பாவம், தங்கமணி சார் என்ன செய்வார்! வயசு ஏறிக்கிட்டே போச்சு. எவ்வளவு காலம்தான் எனக்காகக் காத்திருப்பார். எப்போது என் அக்கா சீதாவுக்கு மாப்பிள்ளை தகைந்து, திருமணமாகி... அது வரை அவரைக் காக்க வைப்பது எனக்கே நியாயமாகப் படவில்லை. அவருடைய நல்ல நேரமோ இல்லை என்னுடைய நல்ல நேரமோ தெரியவில்லை, அவருக்குப் பெரிய பணக்கார இடத்தில் இருந்து பெண் தேடி வந்தது. அவர் கழன்று கொண்டார். நானும் கலங்கித்தான் போனேன். ஆனால் இடிந்து போயிடலை... நடக்கிறது எல்லாமே ஏதோ ஒரு நன்மைக்காகத்தான்னு நினைக்கிற மனப்பக்குவம் வந்துடுச்சன்னா, நாம துன்பத்தைக் கண்டு துவண்டு போகமாட்டோம்... நேத்திக்கு உனக்கு அவசரமா மருந்து தேவைப்பட்டப்போ தங்கமணி சார்தான் தன் மாமனார் கடையிலேருந்து அனுப்பி வைச்சார்.... வாழ்க்கையில எதிர்நீச்சல் போடத் தயாரா இருக்கணும். அதை விட்டுட்டு, கல்லைக் கட்டிக்கிட்டு மூழ்கிப் போக முயற்சி செய்வது முட்டாள்தனமில்லையா?....''


அவன் கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு மெதுவாகத் தலையை மேலும் கீழும் ஆட்டினான்.

அவனது முகத்தில் ஒரு மலர்ச்சி தெரிந்தது. கண்களில் புதிய ஒளி பிறந்திருந்தது.

கிறார். காகிதம் விலை கூடியுள்ளது என்றால் புதிய விலையைப் புத்தகத்திலேயே போட வேண்டியதுதானே? ஏதாவது ஓர் ஆண்டில் இது இலலாமல் போகலாம். வருஷா வருஷமா?

- பொடுசி





24. விக்கிரமன் விரித்த வலை

தஞ்சையைச் சார்ந்த கருந்திட்டைக் குடி என்னும் ஊரை இன்று நாம் கண்டால் அந்தச் சிறிய ஊருக்கும் தமிழகத்தின் சரித்திரத்தில் ஓர் இடம் கிடைத்திருக்கிறதா என்ற ஆச்சரியமேற்படும். யவனரும், சீனரும், அராபியரும், ஈழத்தவரும் தமிழகத்தில் நடத்திய வாணிபம் நாட்டில் செல்வத்தை உருவாக்குகிறதென்பதை நன்கு உணர்ந்த குலோத்துங்கன் தான் அரியணையேறியவுடன் ஆண்டுதோறும் செலுத்தப்பட்டு வந்த சுங்க வரியை நீக்கி, ''சுங்கம் தவிர்த்த சோழன்'' என்று புலவராலும் மக்களாலும் போற்றப் பெற்றான். அதற்கு அடையாளமாக அக் காலத்தில் பெரும் வணிகத் தலமாக இருந்த கருந்திட்டைக் குடிக்குச் ''சுங்கந் தவிர்த்த சோழனல்லூர்'' என்று பெயரும் சூட்டினான்.

சோழ மன்னன் அளித்த சலுகையால் நாட்டின் பல்வேறு நகரங்களில் வாணிபம் ஓங்க அயல்நாட்டு வணிகரின் நடமாட்டம் அதிகரித்தது. இது ஒற்றர்களுக்கும் வசதியாக இருந்தது. வணிகர் என்ற போர்வையில் வேவு பார்ப்பது எளிதாயிற்று.

காஞ்சியின் அந்த வணிகர் வீதியில் உலவிய சீன, யவன, அராபிய, ஈழ வணிகருள் எத்தனை பேர் உண்மையில் வாணிபம் செய்பவர் என்பதும் எத்தனை பேர் ஒற்றர் என்பதும் அந்தக் காஞ்சி வரதன் ஒருவனே அறிவான்.

தினமும் வணிகர்களின் பெரும் மூடு வண்டிகள் காளைகளால் இழுக்கப்பட்டு ராஜ வீதியில் மல்லைத் துறைமுகத்தை நோக்கிப் போவதும் வருவதுமாக இருந்தன.

அன்றும் ராஜவீதியில் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாகச் சென்ற வண்டிகள் சற்று நேரம் சாதாரண மக்களையும், ரதங்களையும் சாலையைக் கடக்க விடாமல் நிறுத்தியிருந்தன. காஞ்சியின் மக்களுக்கும் இது பழகிப் போயிருந்ததால் பொறுமையாக அவை கடந்து செல்லும் வரை அவர்கள் காத்து நின்றனர்.

முன்னும் பின்னும் வீரர்கள் காவல் வர, கைகள் பிணைக்கப்பட்ட நிலையில் குதிரை மீது அமர்ந்திருந்த மார்க்கியனையும் அந்த வண்டிகள் சற்று நேரம் நிறுத்தி வைத்தன.


வண்டிகளின் வரிசை இலேசில் முடிவதாக இல்லை. தாமதமானால் அமைச்சரின் கோபத்திற்கு இலக்காக வேண்டியிருக்குமென்ற அச்சம் சிறைக் காவலனை உந்தவே அவன் முன்வே சென்று வண்டிகளை நிறுத்த முயன்றான்.

அடுத்து நிகழ்ந்தது தான் விபரீதம்! சட்டென்று நிறுத்தப்பட்ட வண்டியின் பின்னால் வந்த வண்டிகள் ஒன்றுடன் ஒன்று மோதி விடாமலிருக்க இடமும் வலமுமாகத் திருப்பப்பட்டு சாலையில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தின. காளைகள் சில மிரண்டு மக்கள் ஒதுங்கி நின்ற பக்கமாகப் பாய்ந்தன. வேறு சில வண்டிகள் சரிந்து பொதிகள் சிதறின.

இந்தக் குழப்பத்தினால் பதறிப் போன சிறைக் காவலன் என்ன செய்வதென்பது புரியாமல் சற்று திகைத்தான். வண்டிகள் சாய, மூட்டைகள் பல சரிந்து அவிழ்ந்து கொட்டியதாலும், வண்டியோட்டிகளும் மக்களும் இட்ட கூச்சல்களாலும், மிரண்டு போய் பாய்ந்த காளைகளாலும் ஏற்பட்ட குழப்பம் அடங்கவும் கிளம்பிய புழுதி விலகவும் சற்று நேரம் ஆனது. மார்க்கியன் இருந்த திசையில் கவலையும் பரபரப்புமாகப் பார்வையைச் செலுத்திய சிறைக் காவலனுக்குத் தலை சுற்றியது. புரவி மட்டுமே நின்றது; மார்க்கியனைக் காணோம்!



இதே சமயம் அரண்மனையிலிருந்து குதிரை ஏறி விரைந்து வந்த நீலகண்ட சேதிராயன் மார்க்கியன் தப்பி விட்டானென்பதை அறிந்து கொண்டதால் சினம் தலைக்கேற வீரர்களிடமும் சிறைக் காவலனிடமும் கூச்சலிட்டான்.



மகளிர்

வண்டிகளை அப்படியே நிற்கச் சொல்லி உத்தரவிட்டவன் ஒவ்வொரு வண்டியாகப் பரிசோதிக்க வீரர்களை ஏவி னான். காஞ்சியின் கோட்டைக் கதவுகள் வேகமாக மூடப்பட்டன. வீரர்கள், வணிகர் வீதி முழுவதையும் சல்லடை போட்டுச் சலித்து ஓய்ந்தனர். மார்க்கியன் மறைந்த மாயம் மட்டும் புலப்படவே இல்லை. ஈழத் திற்குச் செல்ல கடல் மார்க்கமே எளிது என்பதால் சில வீரர்களை மல்லைத் துறைக்கும் விரட்டினான், நீலகண்டன்.

தன்னுடைய கையிலிருந்த ஓலை ஆரு யிர்க் காதலியால் எழுதப்பட்டதோ என்று எண்ணும்படி அதைப் படித்துப் படித்துத் தடவிக் கொடுத்த விக்கிரமனது விழிகளில் கனிவு காணப்பட்டது. ஆனால் எதிரில் நின் றிருந்த புவனமாதேவியும் அம்மங்காவும் கூட அந்த ஓலை அளித்த மகிழ்ச்சியில் நிலைத்துக் கொண்டிருந்ததால் அது காதல் ஓலை அல்ல என்பதும் உறுதியாயிற்று. சாளுக்கியருடன் நடந்த போர், வெற்றியு டன் முடிந்ததும் குலோத்துங்கன் அதிகப்படி யான ஆயிரம் யானைகளுடன் திரும்புவதும் தான் அதில் எழுதப்பட்டிருந்தது.

''அம்மா, இந்த வெற்றிச் செய்தியை வெளியிடவோ, கொண்டாடவோ வேண் டாமென்று தந்தை எழுதியிருப்பதுதான் ஏனென்று புரியவில்லை'' என்றாள் அம்மங்கை.

''காரணமின்றி எதையும் செய்வ தில்லையம்மா உன் தந்தை'' என்ற புவன மாதேவி விக்கிரமனை ஏறிட்டாள். அவள் விழிகளில் அம்மங்கை கேட்ட அதே கேள்வி தொக்கி நிற்பதைக் கண்ட விக்கிர மன், பதிலேதும் கூறாது மெல்ல நகைத் தான்.

அந்த நகைப்பு அவன் காரணத்தை உணர்ந்திருக்கிறான் என்பதையும் அதை வெளியிட மறுக்கிறான் என்பதையும் புரிய

விஷ்வக்சேனன்

வைக்கவே அம்மங்கையின் முகத்தில் கோபம் படர்ந்தது.

''கார்குழலி எங்கே?'' பேச்சை மாற்றி விக்கிரமன் கேட்ட கேள்விக்கு அம்மங்கை 'நறுக்'கென்று பதிலளித்தாள், ''அவள் இருந்தால்தான் காரணத்தைக் கூறுவாயா? அவள் வைகுந்தன் ஆலயத்தில் நடக்கும் வைபவத்திற்குச் சென்றிருக்கிறாள்.''

அதே நேரத்தில் வாசலில் கேட்ட அரவம் விக்கிரமனையும் மற்ற இருவரையும் திரும்ப வைத்தது.

வீரன் ஒருவன் அவசரமாக ஓடி வந்து கொண்டிருந்தான். இளவரசனை வணங்கியவன், ''இளவரசே, மார்க்கியன் காஞ்சியிலிருந்து தப்பி விட்டான்'' என்றான்.

அறையில் நின்றிருந்த மூவரும் அதிர்ச்சியில் சிலையானார்கள். அதிலிருந்து மீளவே சற்று நேரமாகி விட்டது. பிறகு, ''என்ன நேர்ந்தது? விவரமாகச் சொல்!'' - உத்தரவிட்ட விக்கிரமனது குரலில் கடுமை ஒலித்தது.

வந்த வீரன் விளக்க விளக்க விக்கிரமன் முகத்தில் இன்னும் கடுமை ஏறியது. விடுவிடுவென வெளியேறினான் விக்கிரமன். சற்று நேரத்தில் வீரர்கள் தொடர விக்கிரமனின் புரவி வைகுந்தன் ஆலயத்தை நோக்கி விரைந்தது. சற்றுத் தொலைவு செல்வதற்குள்ளாகவே எதிரில் புழுதியைக் கிளப்பியபடி வீரர்கள் வருவதையும், முன்னால் நீலகண்ட சேதிராயன் வருவதையும் கண்டு வேகத்தை மட்டுப்படுத்தினான். விக்கிரமனைக் கண்ட காஞ்சியின் கோட்டைக் காவலன் தலையைத் தாழ்த்தினான்.

''சிறு தவறு நேர்ந்து விட்டது இளவரசே. மார்க்கியன் தப்ப ஈழத்து வணிகன் ஒருவன் உதவியதை சற்று தாமதமாகத்தான் உணர்ந்தோம். ரதமொன்றில் மார்க்கியனை உறையூருக்கு அனுப்பியதாகத் தகவல் அறிந்து உடனே வந்து கொண்டிருக்கிறேன்'' என்றான் நீலகண்டன்.

''ஆகா'' என்ற விக்கிரமனின் புருவங்கள் ஒன்று கூடின. மார்க்கியனின் நோக்கம் என்னவாக இருக்கும் என்று அவனுக்குச் சட்டென்று புரியவே வைகுந்தன் ஆலய வைபவத்துக்குத் தனியே சென்றுள்ள கார்குழலியை எண்ணி மனம் பதைத்தான். ''நீலகண்டா! என்னோடு வா!'' என்று ஆணையிட்டு விட்டுப் புரவியைத் தட்டி விட்டான். ஆனால் அவன் வைகுந்தன் ஆலயத்தை அடையு முன்னர் காரியம் கைமீறிப் போயிருந்தது.

''கிரிக்கெட் வர்ணனையாளரைக் கட்டிக் கிட்டது தப்பாப் போச்சுடி!''

''ஏண்டி?''

''கோபத்துல எதையாவது எடுத்து வீசினா உடனே, 'இன்ஸ்விங்கர்; லெக்பிரேக்; நோபால்'ன்னெல்லாம் கத்த ஆரம்பிக்கறார்!''

- எஸ். ஏ. சரவணகுமார்



உறையூர் வைகுந்தன் திருக்கோயிலில் அன்று மக்கள் வெள்ளம் அலைமோதிக் கொண்டிருந்தது. அலங்கார தீபங்களும், மாவிலைத் தோரணங்களும், வாழையும் கண்களைக் கவர்ந்தன. காரணம் அன்று நடன மண்டபத்தில் நடக்க இருந்த அரங்கேற்றம்தான்.


சோழ நிருத்தப் பேரரையன் உடைய நாயகனின் மாணவி அவள். அதனால் பெரும் எதிர்பார்ப்புடன் உறையூர் மக்களும், முக்கியப் பிரமுகர்களும் நடன மண்டபத்தில் காத்திருந்தனர்.

மேடையிலிருந்து சற்றுத் தள்ளியிருந்த ஆசனமொன்றில் அமர்ந்து நோக்கிக் கொண்டிருந்த கார்குழலியினருகில் இரு இருக்கைகள் சோழ மகாராணிக்கும், இளவரசிக்கும் சித்தமாயிருந்தன. ஆனால் அவர்கள் வரத் தாமதமாகும் என்றும் நிகழ்ச்சி தொடங்கக் காத்திருக்க வேண்டாம் என்றும் அரண்மனை வீரனொருவன் வந்து கூறிச் செல்லவே அவர்களின்றியே நடனம் தொடங்கியது.

அவையை வணங்கிய அந்தப் பெண் பார்வைக்குத் தேவதை போலிருந்தாள். நிருத்தத்தில் தொடங்கி சீக்கிரமே அபிநயத்துக்கு வந்து விட்டாள். முகபாவங்கள்தாம் அவள் ஆற்றல்களின் உச்சநிலை போலும். அவையினர் கவலைகளையும், சூழ்நிலைகளையும் மறந்து லயித்தனர். பாடலும், நடனமும் அவர்களை ஆயர்பாடிக்கே அழைத்துச் சென்றன. ஆயர்குலத்துதித்த மாயனை, தேவகிநந்தனை, கோபாலனை, கொஞ்சியது, கெஞ்சியது, பாராட்டியது யசோதையிடம் முறையிட்டது, மீண்டும் விளையாட அழைத்தது, கோபித்தது, பின் தாபத்தால் உருகியது எல்லாவற்றையும் அவள் நிகழ்த்திக் காட்டினாள். அத்தனை உணர்ச்சிகளையும் அவையினரும் உணர்ந்தனர்.

வெளியே ஆலய வாசலில் ரதமொன்று வந்து நின்றது. அரண்மனை ரதமொன்று கோயிலின் வாசலில் நிற்பதையும் அதன் சாரதியையும் திரும்பி நோக்கினாள் கார்குழலி. சாரதி நேராக அவளிடம் வந்து வணங்கிப் பணிவுடன், ''மகாராணியார் உடனே அழைத்து வரப் பணித்தார்கள்'' என்றான்.

'மகாராணியையும், இளவரசியையும் இதுவரையிலும் காணவில்லையே ஏன் தாமதம்?' என்று குழம்பியிருந்த கார்குழலி கலைஞர்களிடம் நிகழ்ச்சி தொடரலாமென்றும் விரைவில் திரும்பி வருவதாகவும் கூறிவிட்டு அரங்கத்திலிருந்து எழுந்து வெளியே வந்தாள்.



''அந்தக் கட்சிக்காரங்க ரெண்டு பேரும் இப்பத்தான் அந்த மேடையில ஒண்ணு சேர்ந்தாங்க... அதுக்குள்ள அடிச்சிக்கறாங் களே... என்ன விஷயம்...?''

''இருக்கிற ஒரேயொரு சோடாவை யார் குடிக்கிறதுன்னு...!''

- இரா. கி. மதிராஜ்

'அம்மங்கையும் புவனமகாதேவியும் ஏன் வரவில்லை? இந்த அவசர அழைப் புக்கு என்ன காரணம்?' என்று கலங்கிய மனத்துடன் ஆலயத்தை விட்டு வெளியே வந்தவள், புலிக்கொடி பறக்க நின்று கொண் டிருந்த ரதத்தில் ஏறினாள். அடுத்த நொடி யில் ரதத்தின் உள்ளே ஒரு நெடி புகையுடன் பரவியது. அவள் கண்கள் செருகின. ஏதோ விபரீதம் என்று உணர்ந்து திரும்பவும் கீழே இறங்க முற்படுமுன் அவள் உடல் துவண்டு சரிந்தது. ரதம் அதிவேகமாகப் பறப்பதாகத் தோன்றியது. பின்னர் நினைவிழந்து விட் டாள் கார்குழலி.

உறையூர் அரண்மனையின் மேன் மாடத்தில் புவனமாதேவி ஆழ்ந்த சிந்தனை யில் அமர்ந்திருந்தாள். என்றும் கவலை யைக் காணாத அவள் முகத்தில் அன்று கவலை குடிகொண்டிருந்தது. எதிரிலிருந்த மங்கையர்க்கரசி ஏதும் பேசவில்லை யென்றாலும் அவள் துயரம் விழிகளில் நீராகி உதிர்ந்து கொண்டிருந்தது. அம் மங்கை செய்வதறியாது நின்று கொண் டிருந்தாள்.

விக்கிரமன் விரைந்து கிளம்பிய போது எப்படியும் மார்க்கியனைப் பிடித்து விடுவா னென்று நம்பிய அவர்கள், அந்த மார்க்கியன் உறையூருக்கே வந்து கார்குழலியைக் கடத் திச் சென்று விடுவானென்பதை எதிர்பார்க் கவேயில்லை.

வீரர்களுக்கு இளவல் விக்கிரமன் சர மாரியாக உத்தரவுகள் பிறப்பித்துக் கொண் டிருந்தான். உறையூரிலிருந்து செல்லும் அத்தனை சாலைகளையும் கண்காணிக்கவும் சேர பாண்டிய எல்லைகளுக்குத் தகவல் அனுப்பவும் வீரர்களை ஏவினான்.

வீரர்களை அனுப்பி விட்டு அரண் மனைக்குள் வந்த விக்கிரமனின் முகம் கல் லாக இருந்தது. சிந்தனையுடன் உலவிய அவனிடம் விவரம் கேட்கவும் தயங்கினாள் புவனமாதேவி. தலையைத் தொங்க விட்டுக் கொண்டு நின்ற நீலகண்டனை நெருங்கி விசாரிக்கத் தொடங்கினான் இளவல்.

அவன் தெரிவித்த விவரங்களை உன் னிப்பாகக் கேட்டபடியே வேங்கை போல் உலவிய விக்கிரமன் சட்டென்று நின்றான்.

விடுவிடுவென்று உள்ளே சென்றவன் தன் அறையை அடைந்து வேலைப்பாடுகள் நிறைந்த பெரும் மரப்பேழையொன்றைத் திறந்தான். உள்ளிருந்து வண்ணச் சீலை யொன்றை எடுத்தவன் அதைத் தரையில் விரித்தான். கருக்கங்கள் இன்றி பரப்பப் பட்டதும் சோழவள நாட்டின் முக்கிய நக ரங்களையும், அவற்றை இணைக்கும் சாலை களையும், ஏரிகளையும் ஆறுகளையும் தெளி வாகக் காட்டியது அந்தச் சீலை. பார்த்தபடி நெடுநேரம் யோசனையாக அமர்ந்திருந் தான் விக்கிரமன்.

ஒவ்வொரு சாலையாக நகர்ந்த அவனது சுட்டுவிரல் உறையூரிலிருந்து கிளம்பி பல ஊர்களையும் இணைத்துப் பார்த்தது. இறுதியாகக் கிழக்குக் கடலின் நீர்ப்பரப்பில் வந்து அமர்ந்து அங்கிருந்து நேர் கீழாகச் சென்று ஈழத்தை அடைந்து அதனை நகக்கி யது.

திடீரென ஒரு முடிவுக்கு வந்து விட்டவ னாக எழுந்த விக்கிரமன் அந்தச் சீலையை வெகு நிதானமாக மறுபடி மடித்துப் பேழை யினுள் வைத்தான்.

புவனமாதேவியும் மங்கையர்க்கரசியும் அம்மங்கையும் அவனையே பார்த்தபடி நின்றிருந்தனர். நீலகண்ட சேதிராயனின் முகம் தரையை நோக்கித் தாழ்ந்திருந்தது. என்றைக்கும் தலைதாழ்த்தாத அந்த வீரன் வெட்கத்தால் தலைகுனிந்து நின்றதைக் கண்ட விக்கிரமன் மனம் சற்று இளகியிருக்க வேண்டும்.

இரண்டே எட்டில் அவனை அடைந்து அவன் தோளில் கைவைத்த இளவல், ''நீல கண்டா, வருந்தாதே. எதிரி மிகச் சாமர்த்திய சாலியாக இருக்கிறான். ஈழத்து வணிகர் சிலரின் உதவி அவனுக்குக் கிடைத்திருக் கிறது. அதனால்தான் தப்ப முடிந்திருக் கிறது. இன்னும் இரண்டு தினங்களில் அவ னிருப்பிடத்தைக் கண்டுபிடித்து விடுகி றேன். அவன் தானாகவே வந்து சிக்குவான் பார்! நீ சென்று மன்னரிடமிருந்து ஓலை கொண்டு வந்த வீரனை அழைத்து வா'' என்றான்.

நீலகண்டன் திகைத்தான். மன்னரிட மிருந்து ஓலை கொண்டு வந்த வீரனுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்பதை அறி யாது குழப்பத்துடன் வீரனை அழைத்து வரக் கிளம்பினான்.

திரும்பி மங்கையர்க்கரசியை நோக்கிய விக்கிரமன் விழிகளில் கனிவு ததும்பியது. ''வருந்தாதீர்கள். கார்குழலியை எப்படியும் மீட்டு விடலாம்'' என்ற விக்கிரமன் முகத் தில், வழக்கமான தெளிவும், புன்னகையும் காணப்பட்டதானது அவன் தீர்மானமான தொரு முடிவுக்கு வந்து விட்டான் என்பதை உணர்த்தியது. இருந்தாலும் அவன் என்ன செய்யப் போகிறான் என்பதை ஊகிக்க முடியாததால் அங்கிருந்தவர்கள் முகத்தில் திகைப்பே நிரம்பிக் கிடந்தது.

நீலகண்டன் வீரனுடன் திரும்பினான். மற்றவர்களை அங்கேயே இருக்கச் செய்து அந்த வீரனுடன் மட்டும் தன் அறைக்குள் சென்றான் விக்கிரமன்.

சிறிது நேரத்துக்குப் பின் வெளியே வந்த அந்த வீரன், நீலகண்ட சேதிராயனையோ, மகாராணி புவனமாதேவியையோ கூடக் கவனியாது கடமையே நினைவாக வெளியேறினான். அவன் கச்சையில் இரு ஓலைக் குழல்கள் இருந்தன. அடுத்த சில நொடிகளில் உறையூரிலிருந்து சற்று வடகிழக்காகச் சென்ற பாதையில் புரவியின் கால்கள் தரையில் பாவாத வேகத்தில் பறந்தான். அதிவேகமாகச் செல்வதற்கென்றே பழக்கப் படுத்தப்பட்டிருந்த அந்தப் புரவி கண்ணுக்கு மறைவதை மேன்மாடத்திலிருந்து பார்த்தபடி நின்ற விக்கிரமன் முகத்தில் திருப்தி நிலவியது.

(தொடரும்)

அமராவதி



தலைவனும் தலைவியும் புதுமுகங்கள் - அஜித்குமார், சங்கவி.

முன்னவர் நினைவில் நிற்கிறார். பின்னவர்... தாற்காலிக மறதியா அல்லது மனநிலை சரியில்லையா என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் போய் விடுவதற்கு யார் காரணம்?

தலைவனும் தலைவியும் சந்தித்துப் பேசத் துணைநிற்கும் நண்பர்கள் - சார்லி, முரளி, கௌதம். கையில் குடையும் வாயில் மலையாளமுமாக வளையவரும் நாயர் முரளி - 'பளிச்'சுக்கு உதவும் சொட்டு நீலம்.

சார்லிக்கு டிரேட் மார்க்காக வழங்கப்பட்டிருக்கும் வசனத்துக்கு ஆதாரம் பிஸ்கட் விளம்பர 'பஞ்ச் லைன்'. அடிக்கடி இது பயன்படுத்தப்படுவதால் ஏற்படுவது அலுப்பு, அலுப்பு, மேலும் அலுப்பு.

சற்று நேரமே வந்து போய், சக்கர நாற்காலியில் முடங்கிக் கிடக்கும் நாசர் சரியான வேஸ்ட். மிக எளிதாக நம்முள் ஊடுருவி விடுகிறார்.

இவர் கணவர் விஜய், தத்துப் பெற்றோர் கல்யாண்குமார் - கவிதா, தாய்மாமன் சிட்டிபாபு, சங்கவியை மணக்க விரும்பும் வசந்த்... தனித்தனியே குறிப்பிடப்பட வேண்டியவர்கள். படத்தில் முழுமை பெறாமல் தனித் தனியே நின்று விடும் பாத்திரங்கள்.

முழுமை பெறுகிறவை - பாலமுருகனின் படப்பிடிப்பும் பாலபாரதியின் இசையும்.

கூடையோடு அள்ளி மொத்தமாகக் கொட்டியது போலப் படம் நெடுகிலும் பாடல்... பாடல்... பாடல்... ஆடல்... ஆடல்... ஆடல்...



- சி.ஆர்.கே.

● வி. பரமசிவம், மதுரை ❑

? பதவிக்கு வரும் வாய்ப்பு பிரகாசமாகி வரும் நேரத்தில் தி.மு.க. உட்கட்சிப் பூசல்களால் திணறுகிறதே?

! அந்தப் பிரகாசம்தான் இந்தக் கரு நிழலுக்குக் காரணம்.

● தென்றல் கார்த்தி, நாட்டரசன் கோட்டை.

? "அரசியலில் ஈடுபட்டாலும் என் உயிர் மூச்சு சினிமாவில்தான் இருக்கிறது" என்று என்.டி.ஆர். கூறுகிறாரே?

! அங்கும் ஆக்ஸிஜன் சிலிண்டர் தேவைப்படுகிறது.

● கலை, இரணியல்.

? "அண்ணா ஆட்சி responsive ஆட்சி" என்றும், "கலைஞர் ஆட்சி progressive



சசிகலா ஜெயலலிதா

ஆட்சி" என்றும், "எம்.ஜி.ஆர். ஆட்சி compassionate ஆட்சி" என்றும் கூறும் பண்ருட்டி, ஜெயலலிதாவைப் பற்றிக் குறிப்பிடும் போது, "தவறான இடத்தில் தவறான மனிதர்" என்று கூறுவது பற்றி?

! Misfit ஆட்சி என்று சொல்லி விட்டுப் போக வேண்டியதுதானே.

● டி. ஜெயசீலன், பூதலூர்.

? சசிகலா + ஜெயலலிதா = ?

! சஜெசியகலலாலிதா!

● வி. பி. திருநாவுக்கரசு, கொளப்பாடு.

? தமிழ்நாட்டில் ஆலயங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களிலிருந்து பல்கலைக் கழகம் தொடங்க திட்டமிட்டிருப்பது பற்றி...?

! தவறு ஒன்றுமில்லை. திருப்பதியில் ஏற்கெனவே நடப்பதுதான். முதலில் வருமானம் கணக்கமின்றி வர ஏற்பாடு செய்யட்டும். பிறகு அவசியமான நித்யவழிபாடுகளுக்கு நிதி ஒதுக்கட்டும். பாக்கி கல்விக்கு.

● கே. ஆர். தேவேந்திரன், கொணவட்டம்.

? "தமது விமர்சனங்கள் நட்பின் அடிப்படையில்" என்று கூறும் கல்கி, கலைஞரின் பிறந்த நாள் குறித்து கிண்டல் கார்ட்டூன் பிரசுரிப்பது எப்படி பொருந்தும்?

! கார்ட்டூனும் தோழமை உணர்வுடன் வரையப்படுவதுதான். கார்ட்டூன் என்பதே கிண்டலுக்காக ஏற்பட்டது. அதை சீரியஸ்லாகவா போட முடியும்? எழுபது வயதுக்குப் பிறகும் முதல்வராக விளங்கியவர்கள் பட்டியலில் மு.கவும் சேரப் போகிறார் என்பதில் பெருமைப்படவும் கூடுமே? Take things in the right spirit!

● விஜயபாலன், சென்னை - 18.

? வரும் ஆகஸ்டு 15 முதல் தூர்தர்ஷன் மேலும் நாலு சானல்களை வழங்கவிருக்கிறதாமே?

! ஓடாத படத் தயாரிப்பாளர்களுக்கெல்லாம் இது பொற்காலம் போலும்!

● மு. அயூப்கான், சத்திரம்கருப்பூர்.


? தி.மு.க.வில் வை. கோபாலசாமியின் நிலை குறித்து...?

! அவருக்கு ஒரு 'நிலை' என்று ஏற்பட்டு அது குறித்து நீங்கள் கேள்வியும் எழுப்ப நேர்ந்ததே வருத்தம் தருவது ஆயிற்றே. எல்லாவற்றுக்கும் பெருந்தன்மைக்குறைவே காரணம்.

● த. குணசேகரன், கவுந்தப்பாடி.

? "அ.தி.மு.க. என் கோயில், ஜெயலலிதா என் தெய்வம்" எனப் புதிய அமைச்சர் சி.பி. பட்டாபிராமன் பேசியுள்ளது பற்றி...?

* உயிர் மூச்சு! * ஆட்சி வர்ணனை







✱ நிலைல குறித்து...? ✱ ஸ்தோத்திரமாலா

! கோயில் ஆச்சு, தெய்வம் ஆச்சு, அடுத்து அமைச்சர்கள் கூறியதையெல்லாம் தொகுத்தால் ஸ்தோத்திரமாலா!

● ஈ.டி. விஜயகுமார், ஈரோடு.

? ரயில் விபத்து ஏற்பட்டால் மந்திரிகள் தற்சமயம் ராஜினாமா செய்வதில்லையே, ஏன்?

! அபூர்வமாகக் குற்றம் குறைகள் ஏற்பட்டால் ராஜினாமா செய்யலாம். தப்பும் தவறுகளுமே தேசிய குணமாகி விட்ட பிறகு ஒவ்வொன்றுக்கும் ராஜினாமா என்றால் ராஜினாமா நமது தேசிய விளையாட்டு ஆகி விடும்.

● ப. கணேஷ், சென்னை - 19.

? ''தமிழகத்தின் நிரந்தர முதல்வர் ஜெயலலிதாதான்'' என்கிறாரே, கு.ப. கிருஷ்ணன்?

! அப்படிச் சொன்னாலும் மந்திரி பதவி நிரந்தரம் என்ற உறுதி அவர்களில் யாருக்குமே இல்லையே!

● எல். பாண்டியராஜ், காரைக்குடி.

? லஞ்சத்துக்கும் மாமூலுக்கும் என்ன வித்தியாசம்?

! லஞ்சம் - சிறுகதை; மாமூல் - தொடர்கதை.

● கே. ஆர். உபேந்திரன், தஞ்சாவூர்.

? ''முதல்வர் கொடைக்கானல் சென்று ஓய்வெடுப்பதை அரசின் வீண் செலவு என்று கூறும் காங்கிரஸ்காரர்கள் கண்களுக்கு கவர்னர் ஊட்டிக்குச் சென்றிருப்பது புலப்படவில்லையா?'' என்று அ.தி.மு.க கேட்டிருக்கிறதே?

! அப்படி அ.தி.மு.கவில் கேட்டவர் கதி அதோகதிதான். முதல்வரின் கொடைக்கானல் பயணம் வீண் செலவு என்று ஒப்புக் கொண்டவராகி விடுகிறாரே!

● டி. ஆர். வி. ஸ்டாலின், சிதம்பரம்.

? ஸ்கூல் டொனேஷனெல்லாம் எங்கேயோ போய் நிற்கிறதே?

! எங்கே நின்றது? இன்னும் ஏறிப் போய்க் கொண்டேதான் இருக்கிறது!

● யோகஸ்ரீ ராஜ், பம்பாய் - 81

? ஸ்ரீராமன் மறைவு குறித்து?

! சின்ன வயதில் கிரிக்கெட் ஆட ஆரம்பித்து, அதில் பிரமாதமாக முன்னேற முடியவில்லை என்றாலும் அந்த ஆட்டத்தின் மீது உள்ள காதலால் அதன் முன்னேற்றத்துக்காகவே தமது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்டவர். வீட்டில் அரிசி வாங்கத் தந்த பணத்தை கிளப்புக்காகக் கிரிக்கெட் பந்து வாங்கச் செலவிட்டு, வாங்கிக் கட்டிக் கொண்ட இளைஞர், படிப்படியாக உயர்ந்து இந்திய கிரிக்கெட் கன்ட்ரோல் போர்டின் தலைவராகவும் ஆனார். பிரிட்டனின் மேரிலிபோன் கிரிக்கெட் கிளப் இவரைக் கௌரவ அங்கத்தினராக்கிக் கொண்டது. 31 ஆண்டுகள் தமிழ்நாடு கிரிக்கெட் சங்கக் காரியதரிசி. எம்.ஏ. சிதம்பரம் ஸ்டேடியம் உருவாவதில் பெரும் பங்கு வகித்தவர். அங்கே ஆலோசனைக் கூட்டம் நடத்தும் அரங்குக்கு அவர் பெயர்ச்சூட்ட





✱ நிரந்தரப் பதவி ✱ ஜென்டில்மேன்

முடிவெடுக்கப்பட்ட சமயம் காலமாகி விட்டார். தமிழிசைச் சங்கத்தில் தொடர்பு கொண்டு கலைகள் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்திருக்கிறார். கமர்ஷியல் பிரிண்டிங் துறையில் அவர் பணியாற்றிய போது ''கல்கி''யின் ''சோலை மலை இளவரசி'' அங்கு அச்சாக, நான் 'புரூப்' பார்த்த காலத்திலிருந்து அவரை எனக்குத் தெரியும். A perfect gentleman.

● எம். பிரபு, குமராட்சி.

? இந்த வாரம் உங்கள் முகத்தைச் சுருங்க வைத்த செய்தி?

! தொட்டியம் எம்.எல்.ஏயின் ஆணவப் போக்குடன் கூடிய டுமீல் டுமீல், முகத்தை மட்டுமா, உள்ளத்தையும் சுருங்கச் செய்து விட்டது.

❑ ரூ 25 பரிசு பெறுபவர் :
வி. பரமசிவம்,
'ஜோ' இல்லம்,
ஐந்தாவது தெரு,
பாண்டியன் நகர், மதுரை - 16.

சக்கரவர்த்தித் திருமகன்

42. விராதன் தீர்ந்தான்.

மூவரும் தண்டகாரணியப் பெருங்காட்டுக்குள் நடந்து சென்று ரிஷிகள் பலர் வாசம் செய்து கொண்டிருந்த பிரதேசத்தை யடைந்தார்கள். போகும் போதே அங்கே வேள்விக்கான பொருள்களும் முனிவர்கள் உடுத்தும் மரவுரி ஆசனத்துக்குரிய தோல் முதலியனவும் இங்குமங்கும் இருப்பதைக் கண்டார்கள். அந்த இடமே பார்ப்பதற்கு மிக லக்ஷணமாக இருந்தது. பறவைகளும் மிருகங்களும் பயமின்றிச் சஞ்சாரம் செய்து கொண்டிருந்தன. பழங்கள் நிறைந்து தொங்கும் பல மரங்களைக் கண்டார்கள். வேத மந்திர சப்தம் காதுக்கு இனிமையாக இருந்தது. அருகில் சென்றதும் வயோதிக முனிவர்களுடைய ஒளி வீசும் முகங்களைக் கண்டார்கள்.

ரிஷிகள், மூவரையும் கண்டு அளவு கடந்த மகிழ்ச்சி யடைந்தார்கள். ''அரசனே! நீ எங்களைக் காப்பவன். வனத்திலிருந்தாலும் நகரத்திலிருந்தாலும் நீ எங்களுடைய அரசன்'' என்றெல்லாம் சொல்லி உபசரித்து அவர்களுக்கு வேண்டியதைச் செய்து தங்க இடமும் காட்டினார்கள்.

மறுநாள் காலையில் எழுந்து, ரிஷிகளிடம் விடை பெற்றுக் கொண்டு காட்டுக்குள் சென்றார்கள். பெருங்காடு. புலி, சிங்கம், ஓநாய் முதலிய மிருகங்களும் பலவித பறவைகளும் நிறைந்த காடு. சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே மெதுவாகச் சென்றார்கள்.

திடீர் என்று மலைபோன்ற ஒரு பெரிய உருவம் எதிர்ப்பட்டது. நரமாமிசம் தின்னும் ராக்ஷசன் இடிபோல் கர்ஜனை செய்தான். அவன் வடிவம் சகிக்க முடியாத கோர சொரூபமாக இருந்தது. மாமிசமும் ரத்தமும் படர்ந்த புலியின் தோல், இன்னும் நன்றாக உலரவில்லை, அதைப் போர்த்தியிருந்தான். கையில் ஒரு பெரிய சூலாயுதம். அதில் அப்பொழுது குத்திக் கொன்ற மூன்று சிங்கங்கள், ஒரு யானைத் தலை முதலியவை தொங்கிக் கொண்டிருந்தன.

ராக்ஷசன் ஆயுதத்தைத் தூக்கி, பயங்கரக் கூப்பாடு போட்டுப் பாய்ந்து சீதையை அப்படியே பிடித்துத் தூக்கிக் கொண்டு, ''யாரடா நீங்கள் இந்தக் காட்டுக்கு வந்திருக்கிறீர்கள்? நீங்கள் யார்? பார்ப்பதற்குப் பாலர்கள் போல் இருக்கிறீர்கள், வேஷமோ ஜடையும் மரவுரியும் தரித்து முனிவர்கள் போல் நடிக்கிறீர்கள்! கையில் வில்லும் அம்பும், பக்கத்தில் ஒரு பெண்! ஏன் இப்படிப் பொய் வேஷம் போட்டுத் திரிகிறீர்கள்? வெட்கம் இல்லையா? நீங்கள் ரிஷிகளின் சம்பிரதாயத்துக்கும் விரத உடைக்குமே அபகீர்த்தி கொண்டு வருகிறீர்கள். ஏமாற்றித் திரியும் வஞ்சகர்களே! நான் யார் தெரியுமா? நான்தான் விராதன். ரிஷிகளைத் தின்று வருபவன். இந்த அழகி என் பாரியையாக இருக்கட்டும், தெரிந்ததா? உங்கள் ரத்தத்தைக் குடிக்கப் போகிறேன், பாவிகளே!'' என்று கர்ஜனை செய்தான்.

சீதை அவன் கையில் பிடிபட்டு நடுங்கித் துடித்துக் கொண்டிருந்தாள். மனைவியை அரக்கன் பிடித்து எடுத்திருப்பதைக் கண்ட ராமன் தன் அமைதியை இழந்து, ''ஐயோ லக்ஷ்மணா, பார்த்தாயா? எதையும் பொறுக்கும் என்னால் இதைப் பொறுக்க முடிய

ராஜாஜி

வில்லையே! இதைத் தெரிந்தே பாவி கைகேயி நம்மைக் காட்டுக்கு அனுப்பினாளோ!'' என்று கதறினான்.

சீதையைத் தூக்கி நின்ற அரக்கனை எந்த விதத்தில் எதிர்ப்பது என்று தோன்றாமல் இந்தச் சந்தர்ப்பத்தில் ராமன் தைரியமும் அமைதியும் இழந்து போய்ப் பேசினதைக் கேட்ட லக்ஷ்மணன் குழப்பமடையாமல், பாம்பைப் போல் சீறி, ''ராம! இந்திரனுடைய பலம் பெற்றவன் நீ. உன் பக்கத்தில் நானும் இருக்க ஏன் இப்படிப் பேசுகிறாய்? பார், இப்போது என் வில்லும் அம்பும் என்ன செய்யப் போகிறது என்பதை! இவன் மடிந்து கீழே விழுந்து, இவன் ரத்தத்தை மண் குடிக்கப் போகிறது. அயோத்தியையில் என் ரோஷத்தை நீ அடக்கினாயே அந்த ரோஷம் இவன் மேல் இப்போது பாயப் போகிறது! சிறகு கொண்ட மலைகளை இந்திரன் தாக்கியது போல், இவனைத் தாக்கி இவன் உயிரை வாங்கப் போகிறேன்'' என்றான்.

விராதன் அச்சமயம் மறுபடியும் கர்ஜித்து, ''ஏ! வாலிபர்களே! யார் நீங்கள்? உடனே சொல்லுங்கள்!'' என்றான்.

ராமன் அதற்குள் தெளிந்துவிட்டான். கலவரம் தீர்ந்து முகத்தில் வீரம் ஜொலிக்க ஆரம்பித்தது.

''நாங்கள் இக்ஷ்வாகு வம்சத்து ராஜகுமாரர்கள். வனவாசம் செய்ய வந்திருக்கிறோம். நீ யார் சொல்லுவாய்?'' என்றான் ராமன்.

''அப்படியா? தசரத குமாரனே, கேள், சொல்லுகிறேன். என் தகப்பனார் பெயர் ஜயன், தாயார் சதஹ்ரதை. விராதன் என்று என்னை ராக்ஷசர்கள் அறிவார்கள். ஆயுதம் தரிக்கும் க்ஷத்திரியப் பயல்களே, உங்களுடைய ஆயுதங்களால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. பிரம்மாவிடம் வரம் பெற்றிருக்கிறேன். இந்தப் பெண்ணை விட்டு விட்டு ஓடிப் போங்கள். உயிருடன் தப்புங்கள்!'' என்றான் ராக்ஷசன்.

இதைக் கேட்டதும் ராமனுடைய கண்கள் சிவந்து கோபம் மேலிட்டு, ''யமனிடம் நீ போகும் சமயம் நெருங்கி விட்டது!'' என்று சொல்லி வில்லை வளைத்து, கூரிய அம்பொன்றை அரக்கன் மேல் விடுத்தான். அம்பும் அவன் உடலைத் துளைத்து விட்டு ரத்தத்தோடு நெருப்பைப் போல் பிரகாசித்துக் கொண்டு பூமியை அடைந்தது. ஆனால் அரக்கன் அப்படியே நின்றான். அவன் வலியினால் கோபங் கொண்டு சீதையைக் கீழே வைத்து விட்டுச் சூலத்தைக் தூக்கி



வாயைத் திறந்து கொண்டு ராமலக்ஷ் மணர்கள் மேல் பாய்ந்தான். உடனே ராஜ குமாரர்கள் இருவரும் அவன் மேல் அம்பு மாரி பெய்தார்கள். அம்புகள் பாய்ந்து அவன் உடலில் குத்தி நின்றன. பெரியதொரு முள்ளம் பன்றியைப் போல் காட்சி தந்தான். அரக்கன் சிரித்து விட்டு, ஒரு முறை நெட்டி முறித்து உடலை ஒரு சிலுப்புச் சிலுப்பினான். குத்தி நின்ற அம்புகள் எல்லாம் பலபல வென்று கீழே உதிர்ந்தன. அதன் பிறகு சூலாயுதத்தைத் தூக்கி நின்றான். ராம லக்ஷ்மணர்கள் இரண்டு அம்புகளை விட்டுச் சூலத்தைத் துண்டு படுத்திவிட்டு, கத்திகளை எடுத்துக் கொண்டு அரக்கன் மேல் பாய்ந்தார்கள். அவனோ இருவரையும் இரண்டு கைகளில் தூக்கி எடுத்துத் தோளின்மேல் வைத்துக் கொண்டு, வனத்துக்குள் குதித்துச் சென்றான். அடர்ந்து இருள் மூடிய வனத்துக்குள் ராம லக்ஷ்மணர்கள் மறைந்து போனதைக் கீழே நின்ற சீதை கண்டு உரக்கப் புலம்பினாள்.

அரக்கனுடைய தோளின் மேலிருந்த ராமனும் லக்ஷ்மணனும் அவனுடைய இரு கரங்களையும் ஒடித்துப் பிய்த்து எறிந்தார்கள். ராக்ஷசன் கீழே விழுந்தான். ஆயுதத்தால் இவனுக்குச் சாவில்லை என்பதையறிந்து கைகளால் அவனை நொறுக்கியும் காலால் மிதித்தும் பிண்டமாக்கினார்கள். அப்படியும் அவன் சாகவில்லை. வரத்தின் பலத்தால் உயிர் போகவில்லை. ஆனால் இம்சையைப் பொறுக்க முடியாமல் கதறினான். கேட்டு அடைந்த வரத்தில் இது விட்டுப் போன அம்சம்! மரணம் வந்து அவனுக்குச் சாந்தி தரவில்லை. ஒரு பெருங் குழி வெட்டி அவனை அதில் போட்டு மூடிவிட நிச்சயித்தார்கள்.

அவனே ராமனை இவ்வாறு செய்யும்படி கேட்டுக் கொண்டான். அவன் கழுத்தின்மேல் கால் வைத்து மிதித்துக் கொண்டு நிற்கையில் அரக்கன் சொன்னான் :

"பகவானே! உன் பாதம் என் மேல் பட்டது. எனக்கு அறிவு வந்தது. என் சாபம் உன்னால்தான் தீர வேண்டும். நான் பிறப்பில் அரக்கன் அல்ல. நான் ஒரு கந்தர்வன். நான் பெற்ற வரமே என் விமோசனத்துக்குத் தடையாக இருக்கிறது. எப்படியாவது என் உயிரை மாய்த்தாயானால் நான் மறுபடி என் சொரூபத்தையடைந்து மேலுலகம் செல்வேன்'' என்றான்.

அவ்வாறே ராம லக்ஷ்மணர்கள் ஆயுதமின்றி அவன் உடலை நொறுக்கிப் பிண்டமாக்கிப் பெருங் குழியில் போட்டுப் புதைத்து விட்டார்கள். அரக்கனும் கந்தர்வர்களுக்குரிய மேலுலகம் எய்தினான்.

பிறகு ராஜகுமாரர்கள் தனியே நின்ற சீதையை அடைந்து அவளுக்கு விஷயத்தைச் சொல்லி, மூவரும் சரபங்க ரிஷியின் ஆசிரமத்துக்குச் சென்றார்கள்.

அவ்விடம் இந்திரன் தன் தேவ கணங்களுடன் வந்து முனிவருடன் பேசிக் கொண்டிருந்தான். ராமன் வந்ததை இந்திரன் அறிந்து தன் பேச்சைச் சீக்கிரம் முடித்துக் கொண்டு மறைந்தான். பிறகு ராமனும் தம்பியும் சீதையும் சரபங்க ரிஷியை வணங்கினார்கள்.

வயோதிக ரிஷியானவர், "உனக்காகத்தான் காத்திருக்கிறேன். நான் என் உடலை நீத்து மேலுலகம் செல்ல வேண்டிய காலம் வந்த போதிலும் உன்னைக் காணாமல் போக விரும்பவில்லை. அதனால் காத்திருந்தேன். இப்போது என் விருப்பம் பூர்த்தியாயிற்று. என் புண்ணிய பலன்களை உனக்குத் தந்தேன்'' என்றார்.

ரிஷி சொன்னதைக் கேட்ட ராமன், "பகவானே, என் புண்ணியத்தை நானே செய்து பெற வேண்டும். எனக்குத் தாங்கள் கொடுத்து நான் பெறுவதில் என்ன இருக்கிறது? நான் எல்லாவற்றையும் விட்டு விட்டுக் காட்டில் வசிக்க வந்திருக்கிறேன்'' என்றான்.

ரிஷி அவதார விஷயத்தை யறிந்தவரானபடியால், "சுதீக்ஷண ரிஷியைக் கேட்டு இந்த வனத்தில் நீ எங்கே வசிக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வாய்'' என்றார்.

அதன்மேல் சரபங்க ரிஷி தீ வளர்த்து அதில் பிரவேசித்தார். நெருப்பில் உடல் எரிந்து போய், அதனின்று ஒரு திவ்விய குமார உருவத்தோடு கிளம்பி மேல் உலகம் சென்றார்.

"ஆபரேஷன் தோல்வி, பேஷண்ட் பிழைச்சிட்டார்."


"என்னய்யா தப்பா சொல்றே? ஆபரேஷன் வெற்றி; ஆள் காலின்னு சொல்லு."

"ஊகும். அதோ பாரு! ஆபரேஷன் தியேட்டரிலிருந்து தப்பிச்ச ஓடிவர பேஷண்டை டாக்டரும் நர்சும் துரத்திக்கிட்டு வர்றாங்க!"

– இரத்தின மனோகரன்.

விராதன் மாண்ட செய்தி ரிஷி கூட்டங்களில் பரவியதும் ராமனைப் பார்க்க அந்தப் பிரதேசத்துத் தபஸ்விகள் எல்லோரும் வந்து கூடிவிட்டார்கள். ராக்ஷசர்களால் தாங்கள் அனுபவித்து வரும் உபத்திரவங்களையெடுத்துச் சொல்லி, ''அரசனே, நீ இங்கே வாசம் செய்ய வந்தது நம்முடைய பாக்கியம். இனி நம்முடைய தவங்களும் விரதங்களும் இடையூறின்றி நடைபெறும். வனத்தில் விழுந்து கிடக்கும் எலும்புகளைப் பார்! அவையெல்லாம் ராக்ஷசர்களால் கொல்லப்பட்ட தபஸ்விகளுடைய அஸ்திகள் என்று அறிவாயாக. ராக்ஷசர்களின் உபத்திரவத்தால் பம்பை நதிக்கரையிலும் மந்தாகினி நதிக்கரையிலும் உள்ள ரிஷிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அரசனுடைய கடமை பிரஜைகளைக் காப்பாற்றுவதாகும். இந்தக் கடமையைச் செய்யாத அரசன் அதருமம் செய்தவனாவான். குடும்பங்களுடன் இருப்பவர்கள் வரி செலுத்துவது போல் ரிஷிகளுடைய தவத்தின் பயனில் நான்கில் ஒரு பங்கு சொல்லாமலே அரசனுக்குப் போகும். தேவராஜனுடைய தேஜஸுக்குச் சமானமான தேஜஸ் பெற்றவனாய் இருக்கிறாய். எங்களைக் காப்பாற்றுவாயாக. எங்கள் கஷ்டம் மிகப் பெரிது. சொல்லுக்கு அடங்காது. நீயே சரணம்!'' என்று மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டார்கள்.

''பெரியோர்களே! ஏன் வருந்துகிறீர்கள்? நீங்கள் இட்ட ஆணையைச் செய்யக் கடமைப் பட்டவன் நான். அயோத்தியில் என் ஸ்தானத்தை நீத்துத் தந்தையின் ஆணையை நடத்த நான் வனம் வந்தேன். தந்தையின் ஆணைப்படி நடந்து கடன் தீர்ப்பதில் இத்தகைய நன்மையும் என்னால் உங்களுக்கு உண்டாவது என் பாக்கியமல்லவா? நான் வனத்திலிருந்து கொண்டு ராக்ஷசர்களை ஒழித்து உங்களுடைய உபத்திரவத்தை நீக்குவேன். தைரியமாக இருங்கள்'' என்று ராமன் மிக வினயமாகச் சொன்னதைக் கேட்டு ரிஷிகளுக்கு அளவு கடந்த மகிழ்ச்சி யுண்டாயிற்று. ராம லக்ஷ்மணர்கள் சீதையுடன் சுதீக்ஷண முனிவர் ஆசிரமத்தை நோக்கிச் சென்றார்கள்.



சமீபத்தில் ஒரு பெரிய மலையும் நல்ல அடர்த்தியான வனமும் காணப்பட்டன. அதுவே சுதீக்ஷணருடைய ஆசிரமம் இருக்கும் பிரதேசம் என்று அறிந்து அதை நோக்கி ஆசிரம வனத்துக்குள் சென்றார்கள். மரவுரிகள் காயப் போட்டிருந்ததைக் கண்டார்கள். பிறகு வயோதிக ரிஷியையும் தெரிசித்தார்கள். அவரை நமஸ்கரித்துச் சக்கரவர்த்தித் திருமகன், ''என் பெயர் ராமன். தங்களை தெரிசிக்க வந்தேன். அடியேனை ஆசீர்வதிக்க வேண்டும்'' என்றான்.

வீரனைப் பார்த்ததும் முனிவர் எழுந்து கட்டியணைத்துக் கொண்டார்.

''தருமத்தைக் காக்கும் சிரேஷ்டனே! உனக்கு நல்வரவு. நீ வந்து இந்த ஆசிரமம் ஒளி பெற்று விளங்குகிறது. நீயே இதற்கு எஜமானன். நான் உன் வரவுக்காகக் காத்திருந்தேன். இல்லையேல் இதற்கு முன்னமே நான் இந்த உடலை நீத்திருப்பேன். நீ ராஜ்யத்திலிருந்து நீக்கப்பட்டு, சித்திர கூடம் வந்திருப்பதைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். நான் சம்பாதித்திருக்கும் புண்ணியம் உனதாகும். வீரனே! நீயும் உன் பாரியையும் லக்ஷ்மணனோடு அதைப் பெற்றுக் கொண்டு அனுபவிப்பீர்களாக'' என்றார் சுதீக்ஷண முனிவர்.

இவ்வாறு ஆசீர்வதிப்பது முனிவர்களுடைய வழக்கம். ஆசீர்வதிக்கப் பட்டவர்கள் சொல்ல வேண்டிய மறுமொழியும் ராமன் சொன்னதிலிருந்து பார்த்துக் கொள்ளலாம். இவையெல்லாம் அந்தக் காலத்தில் வழங்கிவந்த அழகிய பண்பாடு.

உக்கிர தவம் செய்து பொலிவடைந்த முகத்தைப் பெற்ற முனிவரை வணங்கி ராமன் சொன்னான்

''முனிவரே! என் புண்ணியத்தை நானே செய்து அடைய வேண்டும். தங்களுடைய ஆசீர்வாதத்தால் நான் அவ்வாறே செய்வேன். காட்டிலிருந்து கொண்டு வனவாசம் செய்ய நான் விரும்புகிறேன். மகாத்மா சரபங்கர் ஆணையின் பேரில் எல்லாம் அறிந்த தங்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற வந்தேன்'' என்றான்.



"நம்ம ஊர்லதான்யா கார்ப்பரேஷன் தேர்தலை நடத்தவே தயங்கறாங்க. மேற்கு வங்கத்துல பார்த்தியா? இடது முன்னணி அரசு பதினாறு வருஷத்துல நாலு தடவை உள்ளாட்சி தேர்தல்களை நடத்திருக்க!"

"கொஞ்சமாவா? எழுபதாயிரத்துக்கும் அதிகமா கிராமப் பஞ்சாயத்து, பஞ்சாயத்து சமிதி, ஜில்லா பரிஷத் தேர்தல்கள்..."

"மூணுல ரெண்டு பங்கு இடது முன்னணிக்குத்தான், கவனிச்சியா?"

"ஆனா ஜெயிச்சவங்க கௌரவமா நடந்துக்கலையே, தோத்தவங்களைத் தாக்கி..."

"தோத்தவங்களும்தான் திருப்பித் தாக்கியிருக்காங்க."

"ஆக மொத்தம், மார்க்ஸிஸ்ட் கட்சியின் வன்முறையைக் கண்டிக்க பி.ஜே.பியும் காங்கிரஸும் பந்த் நடத்தும் படியாயிடுச்சு..."

"ஆமாய்யா, பந்த் வெற்றிதான்! சம்பளக்காரனுக்கு ஒருநாள் கூடுதல் லீவு. அன்னாடங் காய்ச்சிக்கு வயித்துக்கு ஒருநாள் கட்டாய லீவு!"

"கருணாகரன் வெந்நீர் குளத்திலேதான் நீச்சலடிக்கிறாராம், செய்தி பார்த்தியா?"

"போன வருஷம் ஒரு விபத்துல சிக்கிட்டாருல்ல... அதனால டாக்டர் அட்வைஸ்."

"இவரு நீச்சலடிக்க கேரள அரசுக்குச் சொந்தமான மஸ்கட் ஓட்டல்ல உள்ள நீச்சல் குளம் கைகுடுத்திருக்கு."

"சூரிய ஒளி கொண்டு தண்ணிக்குச் சூடேத்தறாங்களாம். இந்தியாவிலேயே இந்த ஏற்பாடு இந்த ஒரு ஓட்டல்லதான் இருக்காம்!"

"அது சரி, மழைக் காலத்துல அது உதவாதே! இப்ப கட்டுக்கட்டா விறகு எரிக்கத்தான் செய்யறாங்க. நீச்சல் குளத்தைச் சுடுநீரால நிரப்பறது... யார் செலவு?"

"விடுய்யா; முதலமைச்சருக்கு வெந்நீர் போட்டுக் குடுக்கக்கூட நாம கணக்குப் பார்க்கணுமா? அவர் என்ன மலர்ப் பாதை கேட்டாரா இல்லை ராத் தங்கறதுக்கு மாளிகையை இடிக்கக் கட்டி வாரா?"



முனிவருடைய முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. குறிப்பாகப் பேசினார் :

"இந்த ஆசிரமத்தையே நீ உன் இருப்பிடமாக வைத்துக் கொள்ளலாம். ரிஷிகள் பலர் அருகே வாசம் செய்கிறார்கள். நல்ல பழமும் கிழங்குகளும் நிறைந்த வனம். ஆனால் ரிஷிகளுடைய தவங்களைக் கெடுக்க துஷ்ட மிருகங்கள் அநேகம் இந்தப் பிரதேசத்தில் திரிந்து கொண்டிருக்கின்றன. அவைகளின் தொந்தரவை ரிஷிகள் சகிக்க முடியவில்லை. இந்தத் துஷ்ட மிருகங்களைத் தவிர இவ்விடம் ஒரு குறையுமில்லை" என்றார்.

ரிஷியினுடைய சொல்லின் பொருளைச் சக்கரவர்த்தித் திருமகன் தெரிந்து கொண்டான். தன்னுடைய கோதண்டத்தை வளைத்து நாண் பூட்டி :

"பகவான் முனிவரே! இந்தத் துஷ்ட மிருகங்களை அடியோடு ஒழிப்பது என் பணியாகும். என் வில்லும் கூர்மையான பாணங்களும் வீண் போகாது. இந்த ஆசிரமத்திலேயே நாங்கள் இருப்பது அவ்வளவு உசிதமல்ல. தங்களுடைய தவத்துக்குத் தடையாகும். அருகில் ஓரிடம் பார்த்துக் கொள்ள வேண்டும். அனுக்கிரகிப்பீராக!" என்று சொன்னான்.

அன்றிரவு முனிவருடைய ஆசிரமத்திலேயே அதிதிகளாகத் தங்கினார்கள்.

அதிகாலையில் மூவரும் எழுந்திருந்து கருங்குவளை வாசனையோடு சுகமாகக் குளிர்ந்திருந்த ஜலத்தில் ஸ்நானம் செய்து, ஹோமம் செய்து விட்டு முனிவரை வணங்கி நின்றார்கள்.

''பாலக் பிரும்மச்சாரியை அவர் சிஷ்யங்க சாக விட மாட்டேங்கறாங்க பார்த்தியா? மே அஞ்சாம் தேதி காலமாயிட்டார். ஆனாலும் அவர் சமாதிலதான் இருக்காரு, சாகலைன்னு சொல்லி ஐஸ் கட்டி மேல வைக்க...''

''அதைத் தரிசனம் பண்ண கல்கத்தாவுலே பக்தர்கள் கியூ! அவங்களுக்கு வசதியாகச் சாப்பாட்டுக் கடைங்க... திருவிழாக்



கோலம்தான் போ!''

''மறுபடி விழிக்கக்கு வாருன்னு நம்பறாங்கய்யா!''

''ஒருத்தன் உயிர் போயிட்டா இருபத்தி நாலு மணி நேரத்துக்குள்ள எரிக்கணும் இல்லே புதைக்கணும்னு சட்டமே இருக்கே அதை நம்ப வேணாமா?''

''அதைவிட, பாலக் பிரும்மச்சாரி பக்தர்களின் வோட்டு மேலதானே அரசியல்வாதிக்கு அதிக நம்பிக்கை!''

''இருபத்தஞ்சு வருஷமா சட்ட சபை உறுப்பினரா இருந்து வர்றவங்களுக்கு கேரளாவிலே கௌரவமும் சலுகையும் தரப் போறாங்க.''

''என்ன சலுகையாம்?''

''ஒரு கட்சித் தலைவருக்கு உண்டான மரியாதை. கருணாகரன் உள்பட இப்படி ஆறு எம்.எல்.ஏங்க இருக்காங்களாம். சபை விவாதங்கள்ல தலையிட்டு இவங்க கருத்துச் சொல்ல விரும்பினா, தடை போட மாட்டாங்க. மத்தவங்களை விடக் கொஞ்சம் அதிக நேரமும் இவங்களுக்குச் சபாநாயகர் ஒதுக்குவாரு.''

''அது சரி, ஏதாவது உருப்படியா சொல்வாங்கன்னு உத்தரவாதம் உண்டா?''

''நாலு தூறல் விழுந்தா கரண்ட் கட்டாயிடுதுன்னு குறை பட்டுக்கிட்டியே... டெல்லியில பாத்தியா... ஒன்பது மணி நேரம் சுத்தமா 'பவர்' இல்லையாம்... எல்லோரும் ராத்திரி பன்னண்டு மணியிலேருந்து



அவஸ்தை பட்டிருக்காங்க...''

''வி.ஐ.பி. ஊருக்கே இந்த கதியா...?''

''பேருதான் தலைநகர்னு... கரன்டுக்கு உத்தர் பிரதேசத்தைத்தான் நம்பியிருக்கோ. உ.பி. மின் துறை மோசமான நிர்வாகத்துக்கு ஃபேமஸ்... அதனால டெல்லிக்குன்னு தனியா நம்பகமான மின் சப்ளை வேணும்னு அங்க எல்லாரும் இப்ப வற்புறுத்தறாங்க...''

''ரொம்ப சரி! நாடே இருள்மயமா இருக்கறதுக்கு அடையாளமாத்தான் தலைநகரும் இப்படி இருக்குன்னு யாரும் சொல்லிடக் கூடாது பாருங்க...''

தகவல்கள் :
கல்கத்தாவிலிருந்து
எஸ்.கிருஷ்ணமூர்த்தி;
திருவனந்தபுரத்திலிருந்து
எஸ். எஸ். மணி ;
டெல்லியிலிருந்து
ராஜீவி நரசிம்மன்.

''தங்களுடைய அருளினால் இரவு நன்றாகக் கழிந்தது. இந்தப் பிரதேசத்திலுள்ள பல ரிஷி சிரேஷ்டர்களையும் தெரிசித்து ஆசிபெற விரும்புகிறோம். எங்களுடன் வந்திருக்கும் இந்த மகான்கள் அழைத்துப் போவார்கள். வெய்யிலுக்கு முன் புறப்பட்டுப் போவது நலமான படியால் விடை கொடுக்க வேண்டும்'' என்று ராமன் சொல்ல மூவரும் முனிவருடைய பாதங்கள் தொட்டு நமஸ்கரித்தார்கள்.

ராஜகுமாரர்களை முனிவர் அன்புடன் ஆலிங்கனம் செய்து, ''க்ஷேமமாகப் போய் வாருங்கள். தண்டகாரணியத்து ரிஷி சிரேஷ்டர்களைப் பார்த்து ஆசி பெறுங்கள். அனைவரும் தவம் செய்து சித்தியடைந்தவர்கள். மிக ரம்மியமான வனம். மான்களும், பறவைகளும், புஷ்பங்கள் நிறைந்த தடாகங்களும், மலையருவிகளும், மயில்களும் - எல்லாம் மிக அழகாக இருக்கும். லக்ஷ்மணா, அண்ணனும் நீயும் சீதா தேவியுடன் போய் வாருங்கள். இஷ்டமான போது ஆசிரமத்துக்குத் திரும்ப வாருங்கள்'' என்றார்.

மூவரும் முனிவரை வலம் செய்து விட்டுப் புறப்பட்டார்கள். இருவருடைய கத்தி, வில், அம்பறாத் தூணி முதலியவற்றைச் சீதை எடுத்துத் தர அவர்களும் அவற்றைத் தரித்து ஆயுதபாணிகளாகப் புறப்பட்டார்கள். முனிவருடைய ஆசியைப் பெற்று ராஜகுமாரர்களுடைய அழகும் காந்தியும் முன்னைவிட அதிகமாகப் பிரகாசித்தன.

(தொடரும்)



பகவத்கீதை

சற்றுக் கனமான சமாசாரம்.

''கீதோபதேச''த்தை மட்டுமே கதைப் பொருளாக எடுத்துக் கொண்டு, திரையில் அதற்கு விஷுவலாக அளிக்கப்படும் விளக்கம். மிகக் கொஞ்சமாக வசனம் - சமஸ்கிருதத்தில். மற்றபடி முழுக்க முழுக்க சுலோகங்கள் - பாலமுரளி பரவசப்படுத்துகிறார்.

மனிதன் தன்னைத்தானே உணர்ந்து, பந்தபாசங்களிலிருந்து விடுபடுவது படத்தின் முக்கிய பகுதி. மாயையை முழுமையாக உதறி, நிர்வாண நிலையை எட்டுகிறான். ஆடுபவன் அர்ஜுனன் - ஆட்டுவிப்பவன் கிருஷ்ணன். முழுக்க முழுக்க இமயத்தின் பனி மூடிய பகுதிகளில் எடுக்கப்பட்ட காட்சிகள். மாயையின் உருவகமாகப் பனி.

ஜி.வி. அய்யரை இப்படியொரு படம் எடுக்கத் தூண்டியிருப்பது ஆழ்ந்த ஈடுபாடு காரணமாக விளையும் துணிவுதான்.

காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம்.... இவற்றின் உருவகமாக துரியோதனன், கர்ணன், ஜயத்ரதன், திருதராஷ்டிரன், துச்சாதனன், சகுனி ஆகியோர். சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரசம், கந்தம்... இவற்றின் உருவகமாக பீஷ்மர், துரோணர், கிருபர், சல்யன், அஸ்வத்தாமன். பஞ்சப் பிராணன்கள் பஞ்சபாண்டவர்கள். திரௌபதி ஜீவாத்மா. கிருஷ்ணன் பரமாத்மா...

மேலெழுந்தவாரியாக கீதையைத் தெரிந்துள்ளவர்களுக்கு இந்த விஷுவல் விளக்கம் புரிவது சற்று... சற்று என்ன, நிறையவே சிரமம்.

இடைச்செருகலாக, சன்னியாசியும் தாசியும் முறையே நரகத்துக்கும் சுவர்க்கத்துக்கும் போன கதை.

விஞ்ஞானபூர்வமான விஸ்வரூப தரிசனம்.

இடம்பெறுவது வானளாவ எழுந்து நிற்கும் பகவானின் திருவுருவம் அல்ல. பிரபஞ்சம், அதன் தோற்றம், கிரகங்களின் பிறப்பு... உயிர்களின் தோற்றம், வளர்ச்சி...

The 'Big Bang' and 'Black Hole' Theory என்று சொல்வார்கள். அதுதான் இந்த விஸ்வரூப தரிசனம்.

ஆர்ட் டைரக்டரின் கைவண்ணத்தைப் பிரதிபலிக்கிறவை: அரங்க அமைப்பு, ஆடை அணிகள்.

கிருஷ்ணராக கோபி மனோகர் - எல்லா வகையிலும் பொருத்தமோ பொருத்தம். எங்கே அந்த டீ.வி. மகாபாரத கிருஷ்ணர்? இவரிடம் வந்து 'சலாம்' வாங்கச் சொல்லுங்கள்.

– சி.ஆர்.கே.

சௌகார் ஜானகி

சிகரத்தைத் தொட்ட காவியத் தலைவி



● காவியத் தலைவி

சச்சி தன் தாலிச் சரடைத் திருப்பதி பெருமாள் கோவில் உண்டியலில் போட்டு விட்டாள்! அப்போது, ''பெருமாளே! நீ என் கணவரை என்னிடமிருந்து பிரித்து விட்டாய்! எந்த இதயநோயால் என் கணவர் இறந்தாரோ, அந்தத் துறையில் என் மகனை ஸ்பெஷலிஸ்ட் ஆக்க வேண்டும் என்பதுதான் என் லட்சியம்! அந்த லட்சியத்தை நிறைவேற்றத் தேவையான மனோபலத்தை எனக்குக் கொடு!'' என்று வேண்டிக் கொண்டாள். அதே போலவே, இன்று வரை தன் மகனுக்காவே வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

தன் தாயின் கனவுகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறான் என் பேரன் சஞ்சய். பள்ளிக்கூட நாட்களிலேயே, படுபுத்திசாலியான அவன், இப்போது சான்பிரான்ஸிஸ்கோவில் உள்ள, ஸ்டான்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படித்துக் கொண்டிருக்கிறான். இப்போது இரண்டாவது வருடம். தன் திறமையின் மூலமாக, பல்கலைக் கழகத்தின் ஸ்காலர்ஷிப் பெற்றுப் படித்து வருகிறான். தவிர, பகுதி நேர வேலையும் செய்து சம்பாதிக்கிறான்.

இன்று அமெரிக்காவில் சச்சியும், சஞ்சயும் சந்தோஷமாய் இருப்பதற்காக, நான் என் மகனுக்கு, மனப்பூர்வமாய் நன்றி சொல்லிக் கொண்டிருக்

கிறேன். காரணம் இங்கே தன் எதிர்காலம் இருண்டு விட்டதாய் நினைத்து வருந்திக் கொண்டிருந்த அம்மலுவை - அதுதான் சச்சிக்கு நான் வைத்த செல்லப் பெயர் - என் மகன், அமெரிக்காவுக்கு வரும்படி அழைத்தான். அவளும் அங்கு சென்று அவனுடைய நிறுவனத்திலேயே சுமார் ஒன்றரை வருடம் பணியாற்றினாள். அந்த அனுபவத்தின் அடிப்படையில் வேறு வேலை தேடிக் கொண்டதுடன் கம்ப்யூட்டர் துறையில் பயிற்சியும் பெற்று ஒரு ஸாஃப்ட்வேர் நிறுவனத்தில் இப்போது மானேஜராகப் பணியாற்றி வருகிறாள்.

சச்சி மறுமணம் செய்து கொண்டிருந்தால் நான் சந்தோஷப்பட்டிருப்பேன். ஏனென்றால் தனிமையின் கொடுமை என்ன என்பது எனக்கு அனுபவபூர்வமாகத் தெரியும். ஆனால் சச்சி மறுமணத்தை விரும்பவில்லை. மறுமணம் செய்து கொண்டால் வரும் கணவர், தன் மகன் சஞ்சயை, முழு மனத்துடன் ஏற்றுக் கொண்டு அன்பு செலுத்தாமல் போய் விட்டால், அவனுடைய எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடுமென்கிற பயம்தான் காரணம். அவள் உணர்வுகளை மதிப்பதே சரி என்று நானும் இது விஷயத்தில் அவளை வற்புறுத்தவில்லை.

அம்மலுவும் அவள் கணவரும் சஞ்சய் பற்றிக் கண்ட கனவுகளை அவள் ஒருத்தியே தனியே நின்று நனவாக்கி வருகிறாள்...

''எனக்கு இன்னும் நாலு வருஷம் 'டைம்' குடு ஜானு. படிப்பை முடிச்சுட்டு உன்னை இங்கே வரவழைச்சு வைச்சுக்குவேன்... உழைச்சதெல்லாம் போதும். ராணி மாதிரி நீ என்னோடு இருக்கலாம்...'' என்று சஞ்சய் என்னிடம் அடிக்கடி சொல்கிறான். அவன் அப்படிச் சொல்லும்போதெல்லாம் எனக்கு அவன் அப்பா ஞாபகமே வருகிறது... அவரும் என்னைத் தம்முடன் வந்திருக்கும்படி அழைத்துக் கொண்டேயிருப்பார்... அப்போதைப் போலவே இப்போதும் ஒரு புன்னகைதான் என் பதில்!

இரு கோடுகள் என் திரையுலக வாழ்வின் உச்சம் என்று குறிப்பிட்டேன். அதற்குப் பிறகு அதில் செய்ததைக் காட்டிலும் சிறப்பான கதாபாத்திரத்தில் நடிக்க எனக்கு ஆவலாக இருந்தது. ஆவல் நாளடைவில் ஏக்கமாகவே மாறி விட்டது...

'உத்தர் பல்குனி' என்று ஒரு வங்க மொழித் திரைப் படத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட போது, தமிழில் அதை யாராவது எடுத்தால், எப்பாடுபட்டாவது அதில் நடித்து விட வேண்டும் என்று ஆசைப்பட்டேன். மிக அற்புதமான கதை. சுசித்ரா சென் தாயாகவும் மகளாகவும் இரட்டை வேடத்தில் நடித்திருந்தார் அப் படத்தில். 'மம்தா' என்ற அதன் இந்தி வடிவத்திலும் அவரே இரட்டை வேடமேற்று நடித்திருந்தார். அதே இரட்டை வேடத்தை ஏற்றுச் செய்ய எனக்குக் கொள்ளை ஆசை.

'மேடம் எக்ஸ்' என்ற ஆங்கிலப் படத்தின் இன்ஸ்பிரேஷன்தான் 'உத்தர் பல்குனி.' ஆங்கிலத்தில் தந்தை - மகன் உறவை விவரித்ததை, வங்காளத்தில் தாய் - மகள் உறவாக மாற்றியிருந்தனர்.

அப்போதெல்லாம் வங்க மொழியில் மிக அற்புதமான படங்கள் எடுக்கப்பட்டு வந்தன. அவற்றுள் வெற்றிப் படங்களின் உரிமைகளை வாங்கிக் கொண்டு வந்து தமிழிலும் தெலுங்கிலும் தயாரித்தார்கள்.

வெற்றிப் படமான 'உத்தர் பல்குனி'யை யாரும் தமிழிலோ தெலுங்கிலோ எடுக்க முன்வரவில்லை என்ற போது, (சர்ச்சைக்குரிய கதைதான் காரணம்) நானே அதைத் தமிழில் எடுத்தால் என்ன என்று யோசித்தேன். கதையின் தமிழ் உரிமையை வாங்கினேன்.

படத்தை டைரக்டர்கள் ஸ்ரீதர் அல்லது கே. பாலசந்தர் இருவரில் ஒருவர் இயக்க வேண்டும் என்றுதான் விரும்பினேன். ஆனால், ஸ்ரீதருடைய படங்களில் நான் நடிக்காததால் அவருடன் எனக்கு அறிமுகமில்லை. எனவே அவரை அணுக முடியவில்லை. கே. பாலசந்தர் டைரக்ஷனில் நான் ஏற்கெனவே பல படங்களில் நடித்திருந்தாலும், ஒரு சர்ச்சைக்குரிய சப்ஜெக்டை பாலசந்தர் சாரால் திறமையாய் இயக்க முடியும் என்று நான் நினைத்ததாலும் அவரையே என் சொந்தப் படத்தை டைரக்ட் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

கதை மிகவும் புரட்சிகரமானது என்பதை ஒப்புக் கொண்ட கே.பி, 'ஒரு பெண் தன் கணவரையே சுட்டுக் கொல்வதை எத்தனை பேரால் ஏற்றுக் கொள்ள முடியும்...?' என்ற கேள்வியை எழுப்பினார். 'உத்தர் பல்குனியில்' அப்படியொரு சம்பவம் இடம்பெற்றிருந்தது!

'நீங்களே இது குறித்து சிந்தித்து ஒரு நல்ல முடிவுக்கு வாருங்கள்...' என்று பாலசந்தரிடம் கூறினேன். அவரும் நீண்ட யோசனைக்குப் பின் படத்தை டைரக்ட் செய்ய ஒப்புக் கொண்டார்.

'காவியத் தலைவி' என்ற பெயரில் வெளிவந்த அப் படம் எத்தகைய வெற்றி பெற்றது என்பது உங்களுக்குத் தெரியும். திரையுலகில் ஏராளமான புகழை எனக்குப் பெற்றுத் தந்த அப்படம் ஓர் எதிர்மறையான விளைவையும் ஏற்படுத்தும் என்று நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

(தொடரும்)

படம் உதவி : ஃபிலிம் நியூஸ் ஆனந்தன்

சிக்கலில் தவிக்கும் சித்த மருத்துவ மாணவர்கள்



சின்ன காம்பவுண்டுக்குள் சிறியதாக ஒரு கட்டடம். மூன்றே அறைகள்தாம். சுவர் முழுக்க, தங்கள் கல்லூரியை இடமாற்றம் செய்யக் கோரி ஆங்கிலத்தில் வேண்டுகோள்கள்.

இடம் : பழநி சித்த மருத்துவக் கல்லூரி.

ஒரு மருத்துவக் கல்லூரிக்கான அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத இந்த இடத்திலிருந்து, கல்லூரியைச் சென்னைக்கு மாற்றக் கோரி மாணவ - மாணவியர் போராடி வருகிறார்கள்.

மாணவர் விடுதிக்குச் சென்று, ரங்கநாதன், பாண்டியராஜன், பாலமுருகன், ஜோதி குமார், கிறிஸ்டியான் ஆகிய மாணவர்களைச் சந்தித்தோம்.

''இங்கே மூணு ரூம் தான் இருக்கு. இதில் தான் வகுப்புகளும் நடக்க வேண்டியிருக்கிறது... இது தனியார் கட்டடம். வாடகைக் கட்டடம். அதனால் உடற்கூறு, உடல் செயல் இயல் செய்முறைப் பயிற்சிகளுக்கான வசதிகளுடன் கூடிய ஆய்வகங்கள் கிடையாது. பிணக்கூறு செய்ய முடியாது. பிரேதங்களை உள்ளே அனுமதிப்பதில்லை...''

''எத்தனை வருட கோர்ஸ்?''

''ஐந்து வருட கோர்ஸ். இதில் மூன்று வருடங்கள் இங்கே படிக்க வேண்டும். நாலாவது வருஷம் சென்னையில். ஐந்தாவது வருஷம் பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில்! அந்த மாணவர்கள் ஸ்டாண்டர்டை நாங்கள் எட்டவே ஆறு மாதம் ஆகி விடுகிறது...

''தாவர ஆராய்ச்சிக்கூடம் கிடையாது. மூன்றாவது வருடப் படிப்பிற்கான ஃபார்மகாலஜிக்கு இடம் கிடையாது'' என்றார் கிறிஸ்டியான்.

''முதல் வருட, மூன்றாம் வருட மாணவர்களுக்கான மூலிகைப் பண்ணை, மருந்துத் தயாரிப்புப் பயிற்சிக்கூடம் - எதற்கும் வசதிகள் இல்லை.''

''மொத்தம் எத்தனை மாணவ - மாணவிகள் நீங்கள்?''

''இருநூற்றைம்பது பேர்.''

''உங்கள் முதல்வரிடமும், மக்கள் நல் வாழ்வுத் துறைச் செயலரிடமும் உங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தினீர்களா?''

''இப்போது ஆறு மாதமாகத் துணை முதல்வர்தான். முன்னாள் முதல்வர் 'மாற்றி விடுகிறோம்' என்று எழுத்து மூலம் தரா விட்டாலும், வாய்மொழியாகவாவது சொல்லியிருக்கிறார். செயலரிடம் சொல்லி யாயிற்று.''

''அடுத்து என்ன செய்வதாக இருக்கிறீர்கள்?''

''ஸ்ட்ரைக்தான். வேறு வழி இல்லை. ஏன் என்றால் நல்வாழ்வுத் துறை அமைச்சர், முதலமைச்சர் வரை எடுத்துச் சொல்லி விட்டோம். 'மாற்றி விடுகிறோம்' என்று சொல்லுகிறார்களே தவிர, நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை!''

''இந்தத் துறை மருத்துவத்துக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்று நம்புகிறீர்களா?''

''தாராளமாக இருக்கிறது. நல்ல சயன்ஸ். டெவலப் பண்ண முடியாமல் இப்படி இருக்கிறதே என்ற ஆதங்கம் இருக்கிறது எங்களுக்கு!'' என்கிறார் ஜோதிகுமார்.


மாணவ - மாணவியரின் கோரிக்கையை நியாயம் என்று அறிந்து ஏற்றுக் கொண்ட பிறகு, அரசு அவர்கள் வேண்டுகோளை நிறைவேற்ற எதற்குத் தாமதம் செய்ய வேண்டும்?

இந்தக் கேள்வியைச் சென்னையிலுள்ள சுகாதாரத் துறைச் செயலர் இன்பசாகரனிடம் கேட்ட போது, ''முன்பு கொடுத்த உறுதி மொழிப்படி பழநியிலுள்ள சித்த மருத்துவக் கல்லூரியைச் சென்னைக்கு மாற்றுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் விரைவாகச் செய்து கொண்டிருக்கிறோம். இந்தக் கல்வி ஆண்டிலேயே மாற்றப்பட்டுவிடும்!'' என்றார்.

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்ட நமக்கு எழும் சந்தேகம் : சித்த மருத்துவக் கல்லூரிக்கு வசதிகள் மேலும் தேவைதான். ஆனால் சென்னைக்கு மாற்றினால்தான் அவை கிடைக்குமா? 24 படுக்கைகள் கொண்ட இந்த சித்த மருத்துவமனைக்கு நோயாளிகள் வந்தால்தானே மாணவ - மாணவியர் நேரடிப் பயிற்சி பெற முடியும். அதனால்தான் சென்னைக்கு மாற்றப் போவதாகவும் சொல்கிறார்கள். வசதிகள் இருந்தால்தானே நோயாளிகள் நம்பிக்கையோடு வருவார்கள்! பழநியிலேயே அந்த வசதிகளைச் செய்து கொடுக்க முடியாதா? இப்படி ஒன்றன்பின் ஒன்றாக எல்லாமே பட்டணத்துக்கு இடம்பெயர வேண்டுமென்றால் மற்ற நகரங்கள் அபிவிருத்தி அடைவது எப்படி?

– சித்தார்த்

படம் : கோபிநாத்



அது கிடக்கட்டும்; அசத்தி கர்நாடகம்!

◆ பிருந்த அழகுடனும், கவனமுடனும் அதே சமயம் சற்றும் கலைவில் குறையாமல் தயாரிக்கப்பட்டுள்ள கர்நாடக மாநிலச் சிறப்பிதழ் மூலம் நானே கர்நாடகத்திற்குச் சென்று சுற்றிப் பார்த்து விட்டு வந்த ஓர் உணர்வு ஏற்பட்டது. பாராட்டுக்கள்.

சென்னை - 94, வெ. பாண்டுரங்கன்.

◆ உஷா நவரத்னராம் பேட்டியைப் படித்த போது அவர் ஒரு தேசிய எழுத்தாளர் என்பது தெளிவாகத் தெரிந்தது.

கோவகிருஷ்ணன்புதூர், ஆர். கே. லிங்கேசன்.

◆ உஷா நவரத்னராமின் இதுவும் நம் தேசம் கதை படித்தேன். கதையின் பிற்பகுதி என்னை ஆட வைத்து விட்டது. 'தாய்நாட்டையே விற்பனைக்காக மார்க்கெட் வந்தானே வச்சிருக்காங்க' என்ற வரிகள் சவுக்கடி போன்றவை!

சொர்பொன்னார்கோயில், எஸ்.வி.ஏ. பிரகாஷ்.

◆ 'இதுவும் நம் தேசம்' சமீபமாய்ப் படித்த சிறுகதைகளுள் நெஞ்சில் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து கொண்டது. கதையின் இறுதியில் சிறுவன் 'அம்மா' எனச் சொல்லி இருந்தால் கூட இந்த அளவு இதயம் கனத்து போயிருக்காது. தலைகவிழ்ந்தது சிறுவன் மட்டுமல்ல... நாங்களும்தான்.

கோட்டுமகாதானபுரம், எம். சந்திரசேகர்.

◆ மந்திரியாகி விட்டால், பல தோட்டங்களையே வசப்படுத்தி விடுபவர்களின் மத்தியில் தோட்டக் கலைக்கு என்றே ஒரு மந்திரியா? பலே!

கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

◆ நல்லவேளை! "ஆன்ட்டி" பேட்டி கொடுப்பதோடு நிறுத்திக் கொண்டார்கள் - நாங்களும் தப்பித்தோம்! அதை விடுத்து, மாலாஸ்ரீக்குப் பதில் நானே நடிக்கிறேன் எனக் கிளம்பி இருந்தால் எங்கள் கதி! யப்பா! நினைக்கையிலே உடம்பு கிடுகிடு...

அருகந்தம்பூண்டி, மலை அரசன்.

◆ சுப்ரமண்யம் சுவாமியின் அரசியல் நடவடிக்கைகள் பித்துக்குளித்தனமானவைதான் என்ற போதிலும், அவரைப் பற்றி ஹெக்டே விமர்சித்திருந்த விதம், 'ஜென்டில்மேன் ஹெக்டே' என்று என்னுள் இருந்து வந்த இமேஜை சற்று சரிய வைத்துள்ளது.

சென்னை - 114, என். எழிலரசன்.

◆ ஹெக்டேயிடம் திருபார்கள் சுப்பிரமணிய சுவாமியைப் பற்றிக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லி, "இதை அப்படியே வெளியிடுங்கள்" என்று கூறிய மனத்தெம்பைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

ஸ்ரீவில்லிபுத்தூர், தேனம்மாள் ராமசாமி.

◆ வெரிகுட் சார்! தலையங்கம் இந்த அளவுக்கு எழுதுகிற வீரம் உள்ள பத்திரிகை கல்கிதான் என்பதை மீண்டும் ஒருமுறை நிரூபித்து விட்டீர்கள்.

கும்பகோணம், ஜி. சாமிசத்துரு.

◆ 'மனசு சுத்தமாக இருந்தால் போதாதா?' என்ற அற்புத கொள்கையுடைய நம் கார்ப்பரேஷன் முன்பு பெங்களூர் கார்ப்பரேஷன் எந்த மூலை? அது கிடக்கட்டும் சுத்த கர்நாடகம்!

சிதம்பரம், என். எம். கிருஷ்ணா.

◆ நடுப்பக்கத்தில் இயற்கை எழில் கொஞ்சும் பிருந்தாவனம், ஜோக் நீர் வீழ்ச்சியின் வண்ணப் படங்கள் (கொள்ளை அழகு!) கண்களுக்கு விருந்து என்றால் அதைவிட கட்டுரையின் நடுநடுவே உமது நிருபர்கள் அளித்திருந்த நகைச்சுவை விருந்து அட்டகாசம்!

அரூர், மு. மதிவாணன்.

◆ கர்நாடக மாநிலச் சிறப்பிதழ் சிறப்பாகவே அமைந்துள்ளது. ஆனாலும், சிரவணபெலிகுளா பற்றிய கருத்துக்கள் தவறானவை. சமண தீர்த்தங்கரர் ஒவ்வொருவருக்கும் ஒரு சாசன தேவ, தேவி உண்டு. தங்கள் நிருபர் லட்சுமியாகவும், விஷ்ணுவாகவும் நினைத்துக் கொண்டது சக்ரேஸ்வரன் மற்றும் கூஷ்மாண்டி யக்ஷ, யக்ஷியாகும். நிருபரது பணி சந்தேகத்தை நிவர்த்தித்துக் கொண்டு உண்மையை வெளியிட வேண்டியதே தவிர தமது சந்தேகத்தையே உண்மை போல் வெளியிடுவதல்ல. இது கல்கிக்கு ஒவ்வாதது.

சென்னை - 34, எம்.டி. இராஜேந்திரன்.

◆ ஐம்பது வருடங்களாகப் பொது வாழ்வுக்கெனத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் ஹெக்டே... ஐனதா தளம் ஆட்சிப் பொறுப்பேற்ற ஆரம்பித்த போது, "முதல்வர் பதவி" தம்மை வந்து அடையும் எனத் திட்டமிட்டுச் செயல்படவில்லை. இப்போது எழுபதாவது வயதிலும் அப்படித்தான். அவரைப் போய் பதவிக்கு அலைபவர் போல கல்கி கார்ட்டூன் வரைவது நியாயமா?

அரகண்டநல்லூர், ஆர். விஜி.

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் : வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : சீதா ரவி. நிர்வாக ஆசிரியர் : கி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.

சிக்கரியும்

சிக்கரி என்பது ஒரு உலர்ந்த வேர். காஃபிக்குப் பதிலான ஒரு எளிய மாற்றாக உலகப்போரின் சமயத்தில் புழக்கத்தில் வந்தது. விரைவில் ஒரு பழக்கமாகி விட்டது. சிக்கரி காஃபிக்கு இணையல்ல.

தோற்றத்தில், மணத்தில், சுவையில் எதிலுமே காஃபிக்கு எள்ளளவும் இணையல்ல. காஃபி அருந்தியபின் உங்கள் நாவில் சிக்கரியின் சுவை பின்தங்கினால், அது ஒரு சாதாரண காஃபி

காஃபியும்

என்று நீங்கள் அறிந்து கொள்ளுவீர். அப்படியானால் காஃபியுடன் சிக்கரியை சேர்க்கக் காரணம்? அசல் காஃபியின் அருமையான சுவையை கை விடுவானேன்?

அதன் மலிவான விலையினாலா? அல்லது கலப்படமற்ற காஃபியின் அருமையான சுவையை ருசிக்க உங்களுக்கு இது நாள்வரை வாய்ப்பு இல்லாததாலா?

ஒன்றல்ல.

அறிமுகம்

ஆசியாவின் மிகப்பெரியதும், மிகச் சிறந்ததுமான, டாடாவின் குடகு மலைச்சாரல் தோட்டத்திலிருந்து வழங்கும் "கூர்க்". தேர்ந்தெடுத்த காஃபி கொட்டைகளை வறுத்துப் பொடித்து, புத்துணர்ச்சி நறுமணம் குறையாத வண்ணம் உடனடியாக பாக் செய்து அளிக்கப்படுகிறது "கூர்க்". நூற்றுக்கு நூறு கலப்படமற்ற ஃபில்டர் காஃபி. சுவையில் ஒப்பற்றது.

கலப்படமற்ற

நிறமோ ஆதவனின் உதய நேரச் செம்பொன். சூடாய்ச் சுவைக்கச் சுவைக்கக் கிறங்க வைக்கும் அசல் காஃபிச் சுவை. இந்த அரிய அனுபவத்தை விவரிக்க ஒரே சொல் பொருந்தும்–ஆத்ம திருப்தி.

ஆம், நம் முன்னோர்கள் அசல் காஃபியை அருந்திப் பெற்ற ஆத்ம திருப்தி. இப்போது உங்களுக்கு மீண்டும் அளிக்க வந்துள்ளது டாடாவின் கூர்க் காஃபி.

காஃபி



டாடாவின் "கூர்க்" காஃபி–அன்றாடம் காலையில் ஆத்ம திருப்தி.

Mudra:CCL:622:93:TAM

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka